உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிர

இப்புராணிகர் அரங்கேற்றுங் காலையிலுடனிருந்த மிதிலைப்பட்டி
அழகியசிற்றம்பலக்கவிராயரவர்கள்
இயற்றியது.

கும்பமுறு மருந்தவனும் புலத்தியனும் பலவுருவாக்
கொளுங்கோளேச
நம்பனுயர் மான்மியத்தைக் கவிப்புலவர் செவிக்கமுதா
நல்க வென்ன
வெம்பந்த மகற்றருளைச் சார்திமா தவன்மொழிய
வெழிற்றென் கூடற்
சம்பந்த சாமிகளா கியவேலா யுதகுரவன்
சாற்றினனே

---

திருவண்ணாமலையாதீனம் தேவஸ்தானமாபிசின் லேட் சிரஸ்தேதார்
அ. சாமிநாதபிள்ளையவர்களியற்றியது.

கார்முகி றவழுங் கடிகமழ் பூம்பொழிற்
சூர்முக முசக்கலைத் தழனிக் கொதுங்கி
யயலுறும் வயற்குள மகழிவாழ் கயலினம்
வியப்புறச் சிந்தை வெருவிப் [illegible]
யம்முசுக் கலைக்கண மம்மருற் றயர
வான்முக டணவுங் கான்முதிர் தெங்கின்
முப்புடைக் கனிகளைத் துப்புடைத் துவரை
யெண்ணில் சீர்த்திக் கண்ண மூர்த்திமுன்
சோக்குலம் புரப்பான் சூட்டங் கையிற் றங்குகோ

வர்த்தன மென்னுஞ் சத்திர மீமிசை
யுடலக் கண்ணை னுடன்றுமுன் பொழிந்த
கன்மழை யேய்ப்பப் பன்னூறு மிரவி
வயப்பகைக் கரணு மாவினங் குருகா
ருடைவேன் மீமிசை யிடையறா தாதிர்க்குந்
திருவ நீண்ட திருக்ககோ ளக்குடி
மின்னிடை யெழுவர்வாழ் கன்னி மால்வரை
வாளுடு வந்து வழுத்துநா ளுடென்
றுவமையற் றிலகுஞ் சிவதன்ம புரத்தி
லாரணம் பரவு வாரண முகத்தனுந்
தாரணி தழுவிய நாரணக் கடவுளுங்
குருகுவெற் பெறிந்த முருக மூர்த்தியுந்
தங்கிக ரில்லாக் கன்னிய ரெழுவரு
மிதஞ்சலி யாத பதஞ்சலி முனிவனு
மின்றமிழ்க் குரவனுந் தென்றிசை முனிவனுஞ்
சலத்தியல் கடந்த புலத்திய நாமனு
மலக்க ணொழிக்கு மிலக்குமி தேவியு
நீடிருஞ் சீர்த்திக் ககோள விருடியு
நித்திய முணர்ந்த சத்யவா சகனுங்
கான்முகக் கமல நான்முகத் தேவு
நீணிலம் புகழும் வாணியுஞ் சசியுந்
செயிரவ மகற்றும் வயிரவத் தோன்றலும்
ஏழு முனிவ ரிந்திர னிருசுடர்
மலிபுகழ் படைத்த திலீப வேந்தனு
மன்பொடு மிறைஞ்சி யவாவின வெய்தி
யின்பமார்ந் திருக்க வின்னருள் புரிந்த
பொய்யார் மொழியார் புன்மனத் தனுகா
மெய்யார் மொழிச்சிவன் மேவிய நிலமும்
பொன்மலி சடைச்சிவ தன்ம மூர்த்தியா
ரீற்றிருந் தருளும் விமலவந் தரமுங்
ககோள முனிவர் கதிபெற நல்குங்
ககோளச் சுரர்வாழ் கயிலையா முச்சியு

# சிறப்புப்பாயிரம்.

பிம்மூன் றிடத்து மினிதிருங் கருணா
மேன்மை விளம்பு மான்மிய மாய
வாரிய மொழியைச் சீரிய தமிழி
லியற்றுக வெனவவ் விருந்தலத் தமர்ந்த
மோனமெய்த் தவருந் தாணிகர் பலருங்
கருவண் ணாமலை கலந்து தவாதருள்
திருவண் ணாமலைத் தெய்வ சிகாமணி
மாமறை யினராய் வருந்தவக் குழாத்திற்
றன்னிகர் சபாபதித் தனிப்பெயர் முனிவனு
முலகுய வுரைத்த வுறுதிக் கட்டுரை
கடைப்பிடித் தம்ம மடைத்தலைச் சங்கந்
தரளஞ் சொரியுந் தண்புன லுடுத்த
வாட லமைந்த கூடலம் பதியி
னந்திரு ஞானசம் பந்த மூர்த்தி
தெய்வவா தினத் திருந்துபா லாழியின்
மான்முதற் பல்லோர் வருந்தா துவந்த
விற்பன மளிக்குங் கற்பக மனையான்
வழுக்கில் சீர்த்தி யொழுக்க நற்குண
மாண்கல னாகத் தாங்கிய மேலோன்
றன்னடி யடைந்தார் தாமெனத் திகழ
வீர்சற நோக்குந் தேசிக மூர்த்தி
காலா யுதக்கைக் கடவுளை யிறைஞ்சும்
வேலா யுதப்பெயர் மேவிய குரவன்
சொன்னலங் கெழுமிப் பொருணலம் பொதிந்தீ
ரைந்தெனு மழகு மமைந்தற மரீஇ
மற்றத் தொகையாங் குற்றமு மொரீஇ
யிம்பரிற் புலவரும் பம்பி மாந்துபு
இருமைப் பிணியு மொருவி யின்புறச்
சாலி வாகன சகாத்த மாயிரத்
தெழுநூற்று நாற்பத் தேழி னுவன்றன
னன்னமான் மியத்தைத் துன்னிய சிறப்பாற்
திருவண் ணாமலை யெனச் செப்புமா தினத்.

தொருவருஞ் சிறப்பி னுயர்கொடுங் குன்றும்
விருப்பிற் பொலிதரு திருப்புத் தூரு
மயின்மலை கரத்தார் மயின்மலை நகரு
நாதமார் தருசதுர் வேதமங் கலமுங்
காணாட்சி கொள்பொழிற் றேணாட்சி நகரும்
பொன்னிலம் புகழுங் கன்னிமா மலையு
மாயமூ விரண்டு தூயநற் றலத்தி
னிறுதியிற் புகன்ற மறுவில் சீர்த்தித்
திருக்கோளக்குடித் தெய்வ வைப்பின்
விசாரணைத் தலைமை மேவிய சிறப்பின
னறமெவற் றினுமுயர் துறவற நிலையோ
னென்னதா னத்தினு மேற்றமீ தென்றே
யன்ன தானமிக் கன்புட னளிப்போன்
முதிர்விவ கார முயற்சியின் பகுப்பிற்
சதுரனென் றெவருஞ் சாற்று விரகன்
நவவடி வகன்ற சிவவடி வைத்தன்
சிந்தையி லிருத்தி வந்தனை புரிவோன்
மங்கலில் சீர்த்திச் சங்கர லிங்க
வழுவறு முனிவன் மகிழ்ந்தே
யெழுதா வெழுத்தி னியைவித் தனனே.

---

இராமநாதபுரம் சிவகங்கை யென்கின்ற உபயசம்ஸ்தான
வித்துவானும், வேம்பத்தூர் சங்கவித்துவான்களிலொருவருமாகிய
சிலேடைப்புலியென்னும்
**பிச்சுவையரவர்களியற்றியது.**

பொற்றிருக் ககோள புரேசர்மான் மியத்தை
யற்றிருக் கண்ட ரகங்களிப் பேற
வோங்கிய வேலா யுதமெனு முயர்பெயர்
தாங்கிய தேசிகன் றூரணி புகழக்

கணப்பா லுதாங் கனிவா யுமைதருங்
கணப்பா லருந்திக் கிளர்தமிழ் மொழியா
லாவலாய்ப் பாடி யரும்பே றடைந்தனன்
பாவலர் சிரகம் பணிசெய மன்னே.

வெண்பா.

கற்பகமே ராஞ்சங் கரலிங்க மாமுனிவன்
பொற்புகழ்சேர் கோளகிரி மான்மியத்தை—விற்பனர்கள்
பாராட்ட வச்சிற் பதிப்பித்தான் சேடனுங்கண்
டோராட்டங் கொள்ள வுளம்.

---

இது

இவ்வாசிரியர் மாணுக்கருளொருவரும் திருவண்ணுமலையாதீனத்து வித்துவானுமாகிய

வீரபத்திரக்கவிஞரியற்றியது.

திருமருவு கோளகிரிக் கடவுண்மான் மியந்தமிழிற்
றெரியச் செய்தான்
உருமருவு தெய்வசிகா மணிமரபிற் சபாபதிப்பே
ருரவோன் வேண்டத்
தருமருவு தென்கூடற் றிருஞான சம்பந்த
சாமி ஞானப்
பெருமரபில் வருவேலா யுததேசி கோத்தமனும்
பெரியோன் மன்னே.

---

இது

செவ்வூரில் நாகூர்

சிற்றம்பலக்கவிராயரவர்களியற்றியது.

கற்றுணர்ந்தா வலர்செவிக்கின் னமுதெனச்சென் மக்கடற்கோர்
கலனு மென்ன

## சிறப்புப்பாயிரம்.

நற்றிருக்கோ ளோசர்மான் மியமதனை யருந்தமிழா
னவின்றான் மேனாட்
சொற்றமிழ்ச் சுருதிகளா கமங்களின்றான் விரித்துரைப்பான்
றோன்றிப் போது
முற்றுதென்கூ டலின்வேலா யுதஞான சம்பந்த
மூர்த்தி தானே.

---

இது

### காரைச்சூரான்பட்டிக் கவிராயரியற்றியது.

அந்தரங்க கயிலாய மெனுங்கன்னி மலைப்பரம
னரிய காதை
செந்தமிழாற் றெரித்திடுகென் றருணகிரித் தெய்வசிகா
மணிப்பே ராசான்
முந்துமர பினிற்சபா பதிமுனிவன் வேண்டவுங்ஙன்
மொழிந்தா னற்சம்
பந்ததே சிகன்மரபின் வந்தவே லாயுதப்பேர்
படைத்துள் ளோனே.

---

### மதுரை விவேகபானுப் பத்திராதிபர்

### மு. ரா. கந்தசாமிக்கவிராயரியற்றியது.

தழையிருக்குங் கரச்சமணர் கழுவிருக்கத் தமிழ்வேதந்
தன்னைச் சங்கக்
குழையிருக்குந் திருச்செவியிற் குடியிருக்கும் படிகூறிக்
கொடியே னெஞ்சி
னுழையிருக்குந் திருஞான சம்பந்த ராதீனத்
துதித்த மேலோன்
கழையிருக்கு மிரதமொழி யுறுவேலா யுதகுரவ
கருணை யாளன். (௧)

அருண்மலிந்த திருவாக்காற் கூகோளபுரி மான்மியத்தை
யணிமீக் கொண்ட
பொருண்மலிந்த தமிழ்ப்பாவிற் புகன்றுவைத்தா னதையெடுத்துப்
புதுக்கி யுள்ளத்
திருண்மலிந்த வென்போல்வார் களுமுணர்ந்து கொள்ளவச்சி
லேற்றி யீந்தான்
தெருண்மலிந்த கல்வியறி வொழுக்கமுதற் பன்னலமுஞ்
செழிப்பப் பெற்றோன் (௨)

மருக்கோலும் பொழிலருணை யாதீன முனிவர்சிகா
மணியாய் வந்து
திருக்கோள புரத்தேவத் தானவிசா ரணைத்தலைமை
செழிப்பப் பெற்றோன்
இருக்கோல மிட்டறியாப் பரமனைத்தன் னுளக்குகையி
லிருத்தி வாழ்வோன்
தருக்கோடுங் கரதலத்துச் சங்கரலிங் கப்பெயர்மா
தவன்றான் மன்னோ. (௩)

சிறப்புப்பாயிரம் முற்றும்.


உ

# சருக்க அட்டவணை.

| சருக்கம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | பாயிரம் | |
| 2. | கடவுள் வாழ்த்து | 2 |
| 3. | அவையடக்கம் | 6 |
| 4. | திருநாட்டுச்சிறப்பு | 8 |
| 5. | திருநகரச்சிறப்பு | 11 |
| 6. | நைமிசாரணியச்சருக்கம் | 21 |
| 7. | திருக்கைலாயச் சிறப்புச்சருக்கம் | 23 |
| 8. | புராணவரலாற்றுச்சருக்கம் | 26 |
| 9. | தலவிசேடச்சருக்கம் | 37 |
| 10. | தீர்த்தவிசேடச்சருக்கம் | 43 |
| 11. | மூர்த்திவிசேடச்சருக்கம் | 47 |
| 12. | கணபதிபூசைசெய்சருக்கம் | 53 |
| 13. | மாதவன் சாபந்தீர்த்த சருக்கம். | 65 |
| 14. | முருகன்றவம்புரி சருக்கம். | 70 |
| 15. | சத்தகன்னியர் மதுவுருவான சருககம். | 75 |
| 16. | பதஞ்சலி முனிவரருள்பெற்ற சருக்கம். | 80 |
| 17. | அகத்தியர் புலத்தியர் பலவுருவான சருக்கம். | 83 |
| 18. | இலக்குமிதவம்புரி சருக்கம் | 87 |
| 19. | ககோளவிருடி முத்தியடைந்த சருக்கம். | 90 |
| 20. | சத்தியவாசக முனிவர் சாயுச்சியம்பெற்ற சருக்கம் | 93 |
| 21. | பிரமனுக்குச் சிவதருமமுபதேசித்த சருக்கம். | 96 |
| 22. | வாணியும்சசியும் வரம்பெறு சருக்கம். | 102 |
| 23. | வயிரவருக்குப் பிரமகத்திதீர்த்த சருக்கம். | 107 |
| 24. | எழுமுனிவரும் மகவானும் இருசுடரும் வரம்பெற்ற சருக்கம். | 110 |
| 25. | திலீபன் சேய்பெறு சருக்கம். | 113 |

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்.

# திருக்கோளபுரப்புராணம்

## பாயிரம்.

### விநாயகர் காப்பு.

கங்கைதிங்க டரித்தவிறை லங்குசபா சங்கைக ணுதலாற் கோ
டொன்றுங் கைதாங்கு தவிறைற், செங்குமுத நால்வாய்மூன் றோன்றவி
றைற் சுரும்பார் செங்கரும்பைங் கணைதரிக்குஞ் செய்கையத னைஞ்,
சங்கரன்சங் கரிமுகுந்தன் சயம்புமத னிவரோர் தனுவாகி வையமதிற்
சார்ந்தனூர்கொ லெனப்பூ, வெங்கணுமியா வருந்துதிக்கத் திருக்கோ
ளக்குடிவா மேகதந்தச் சிந்துரத்தி னிருசரண்போற் றுதுமே. (க)

## வேறு.
## வீரகத்தீர்த்த விநாயகர்.

மஞ்சனைய வுருவாகி வசுதேவர்க்கோர் மகவாகி யாயர்குல மனை யின் மேவிப், பஞ்சவர்க்காத் தூதேகிப பார்த்தன் றேர்க்குப் பாகனெ னப் பரிதூண்டும் பகவற் கந்நாள். வஞ்சனையாற் றனதுமன வன்மந் தோன்று வகைதொடங்கி யிகல்புரிந்த மாம னானை, கஞ்சனைக்கொன் றிடுவீர கத்தி தீர்த்த கணபதிதாட் டாமரைநங் கருத்துள் வைப்பாம்.

## வேறு.
## வலம்புரி விநாயகர்.

சிலைமூர்த்தி வெள்ளிசெம்பாற் செயுமூர்த்தி மணிமூர்த்தி செம் பொன் மூர்த்தி, கலைமூர்த்தி காண்பதற்கும் விக்கினங்காட் டாமுனிற் குங் கருணை மூர்த்தி, யலைமூர்த்தி யாழியைக்கொண் டவன்விகடக் கூத்தினைக்கண் டநநா ளீந்த, மலைமூர்த்தி யானவலம் புரிவிநா யகனைநித மனத்துள் வைப்பாம். (௩)

## வாழ்த்து வேறு.

திங்கண்மும் மாரி பெய்க செழுமறை முனிவர் வாழ்க
வெங்கணுஞ் சைவம் பல்க வீசன்வெண் டிருநீ றோங்க
வங்கண்மா ஞாலங் காக்கு மரசர்செங் கோலு நீட
பொங்குபே ரறங்கண் மல்க பூதலம் பொலிக மாதோ. (௪)

## பயன் வேறு.

சீதளசந் திரமவுலித திருக்கோளேச சுரன்சரிதை செப்புகின் றோ, ரோதுகின்றோர் படிக்கின்றோ ருரைபகர்வோர் கேட்கின்றோ ருவக்கு மேலோர். பூதலமெல் லாம்புரக்கும் புரவலராய்ப் பல்லாண்டு புவிமேல் வாழ்ந்து, காதளவோ டியகருங்கட் கவுரிபங்கன் றிருக்கயிலை காணி கொள்வார். (௫)

# கடவுள்வாழ்த்து.

## சிவதருமபுரேசர்.

நித்தியமாய் நிராலம்ப சச்சிதா னந்தநிரா மயசொ ரூப
முதலதனித வகண்டிதபூ ரணசுகோ தயவடிவா யமர்ந்த சோதி

மத்தியமா யாதியந்த மருவாம லாமலக மரத்தின் கீழான் [ள்வாம். ()
மூத்திந்ர முளைத்தெழுந்த சிவக்கொழுந்தி னடிக்கமல முடிமேற்கொ

## இதுவுமது

அரத்தானை வாகியசக் கரத்தானை மேருவிலுக் கணியாக்கொ ண்ட, சரத்தானைத் திரிபுரமற் சரத்தானை யெனக்கபயந் தந்து காக் குங்,கரத்தானை யைநதெனுமக் கரத்தானைக் கோளகிரி யான கன்னி, புரத்தானைச் சிவதரும புரத்தானை யனுதினமும் போற்றல் செய் வாம். (எ)

## சிவகாமவல்லி

உன்னிமலை வேனெனவக் கயிலேயினை யரக்கனெடுத் துனுக்கு ஞான்று, வன்னிமலை யாயிருந்தார் தமைத்தழுவிப் பயந்தசெயல் புதித்தாள் போல, வந்நிமலை யானபரா பரையிராக் கதர்தீண்டா கரிதா மேன்மைக்,கன்னிமலை மீதிருக்குங் கவுரிசிவ காமியைநங் கரு த்துள் வைபபாம். (அ

## மலைக்கொழுந்தீசர்.

தருக்கொள்வா னுலகாள்வோர் தண்ணாகா மறைவாழ்வோர் தண்டு ழாயோர், மருக்கொள்பூங் கடுக்கையணி கோடீர ரெண்ணிறந்த வானோர் போற்ற, வருக்கரோர் கோடியெனக் கன்னிவரை மீதுதித் தா வுடைத்தாய்க் கன்பாந், திருக்கோளக் குடிவாழுஞ் சிவக்கொழு ந்த மலைக்கொழுநதைச் சிந்திப பாமால். (கூ

## ஆவுடைநாயகி.

ஆவுடைநா யகிகள்பலர் கடவுளர்நா யகிகள்பலர் கனிந்தவே ஞ்சொ, லாவுடைநா யகிகள்பலர் நளினமலர் மாதர்பலர் நயந்து போற் றுஞ், சேவுடைநா யகிகளபலர் பணிதிருக் கோளேசரிடஞ் சேர்ந்து வாழு,மாவுடைநா யகித்தாய்பொன் னடிக்கமல முடிக்கணியா வணிகு வோமால். (ய)

## சத்தியவாகீசுரர்.

அழியானை யன்பர்தமக் களியானை மதியலரி யங்கி யென்னும் விழியானைக் கயவர்தம்பால் விழியானைச் செழுமுருகு விரியும் பூவி

தழியானைச் சிறந்ததிருத் தளியானைக் கன்னிவரை தனிற்பொய்யாத, மொழியானை யுமைபாக மொழியானைப் பணிந்தன்பை முதிர்விப் பாமால். (௰௩)

## மரகதவல்லி.

ஆமேவு திரைக்கடல்சூழுகிலமெலா மரைக்கணத்தி னுக்குவோ ன்வே, தாமேவு திருவுந்தித் தாமரைத்தண் டுளவணியுஞ் சங்க பூ ணிச், சேமேவு சிவதரும புரப்பொய்யா மொழிநாதன் றேவி யாகிப் பூமேவு மவர்க் கரசாய்ப் பூமேவு பசுங்கொடியைப் போற்றல் செய் வாம். (கஉ)

## சபாநாயகர்.

அம்புரா சிகளேழு முழுந்தமிழ்ந்து நீராயா சமிக்குஞ் செங்கைக், கும்பமா முனிமுதனாற் பானெண்ணு யிரமுனிவர் குழாங்கொண் டா டக், கம்பமா கரியுரித்த கண்ணுதலார் கன்னிவரைக் கயிலைமீதிற், செம்பொன்மா மணிமன்று ணடம்புரிசிற் சபைநாதன் றிருத்தாள் போற்றி. (கங)

வேறு.

## தக்ஷிணாமூர்த்தி.

மாலி னேன்மல ரோன்மைந்தர் நால்வர்க்குஞ்
சீல மாமத் துவிதந் தெளித்திடப்
பாலி னெய்யென வெங்கும் பரந்துங்கல்
லாலின் மேவு மடிகளை வாழ்த்துவாம். (கச)

வேறு.

## வயிரவர்.

முன்னிவரைப் பரமெனவெண் ணுமுகுந்த னுடம்பின்றோன் முழுதும் வாங்கிப், பின்னிவரை யெண்ணுத பிரமனொரு சிரங்கொய் து பிழைக டீர்த்தெஞ், சென்னிவரை தீமையெழுத் தழித்துமலக் கோணீக்கித் திருத்தி யாண்ட, கன்னிவரை வயிரவரைக் கனிவினொ டும் பணிவதுநங் கடனதாமால். (கரு)

வேறு.

## வலம்புரிவிநாயகர்.

சிலம்பின் மேன்மைத் திருக்கோ ளேசர்பொற்
கலம்பெய் பூண்முலைக் கன்னிப் பிடிதழீஇ

நலம்பு ணைந்தத கூற்றரி வந்தருள்
வலம்புரிக்களிற் றண்ணலை வாழ்த்துவாம். (௧௫)

## முருகக்கடவுள்.

அலையின் மாவுரு வானவெஞ் சூருட
லிலைகொள் வேலி னிருபிள வாக்கியைக்
கலையி னுறர்க்குச் சற்குரு வாய்க்கன்னி
மலையின் வாழ்சண்மு கேசனை வாழ்த்துவாம். (௧௭)

## கலைமகள்.

பூம டந்தையும் பொன்மலர்க் கற்பகக்
காம டந்தையுங் காமுறு கற்பினெண்
கோம டந்தை வெண் கோகன கத்துவாழ்
நாம டந்தையை நாமற வாமரோ. (௧௮)

## திருநந்திதேவர்.

அந்தி வண்ண னருளிய வாகமஞ்
சிந்தை செய்து தெளிந்தெம்ம னோர்கடம்
புந்தி தேறப் புகட்டிக் கயிலைவாழ்
நந்தி தேவனை நாம்பணி வாமரோ. (௧௯)

## வேறு. பதஞ்சலிமுனிவர்.

சதஞ்சலி யாததிச் சடல மென்றெனுங்
கதஞ்சலித் திடவருள் கலந்து கண்டகண்
ணிதஞ்சலி யாமலே நிருத்தங் கண்டநம்
பதஞ்சலி யாமுனி பூதத்தைப் போற்றுவாம். (௨௰)

## வேறு. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

கந்த மூர்த்திசீ காழிப் பதியினில்
வந்த மூர்த்தியம் மீறன்வெப் போடுகூன்
சிந்து மூர்த்தி திருவால வாயிற்சம்
பந்த மூர்த்தி பதம்பணி வாமரோ. (௨௧)

## திருநாவுக்கரசு நாயனார்.

தப்பு ளாரமண் சார்ந்துங் கருங்கலே
தெப்ப மாகத் திருப்பதி கத்தமிழ்
முப்பு ரஞ்செற்ற மூர்த்தியைப் பாடிய
வப்பர் பாதத்துக் கன்புவைப் பாமரோ. (உ௨)

## சுந்தரமூர்த்தி நாயனார்.

அண்டர் வானருக் காக விடமுண்ட
கண்ட நாதரைத் தூதனுப் பிக்கரா
வுண்ட பாலற் குயிரினை நல்கிய
தொண்ட ரைக்கண்டு தோத்திரிப் பாமரோ (உ௩)

## திருவாதவூரடிகள்.

துண்ட வெண்பிறை சூடியைக் கண்டுகற்
கண்டெ னச்சர்க் கரையெனத் தேனென
வண்ட மிழ்த்திரு வாசக மோதிய
தொண்டர் நாதன் றுணையடி போற்றுவாம் (உ௪)

## சண்டேசுர நாயனார்.

அன்ன மாடை யணிதொடை யன்பர்க
டன்னை நோக்கிச் சமைக்கவேண் டாவென
முன்ன மேமுதல் வன்றரப் பெற்றருண்
மன்னு சண்டே சுரனடி வாழ்த்துவாம். (உ௫)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

# அவையடக்கம்.

ஆதியி லீசன் வெள்ளி யடுக்கலி னமர ரோடுந்
நீதிலா முனிவர் கேட்பச் செப்புபன் னெண்பு ராணத்
தோதிய காந்தத் தாறு சங்கிதை யுண்ட வற்று
ளீதியாஞ் சனற்கு மாத [illegible]தை யிகரேர் மைத்தே. (௧)

ஆங்கதிற் சயில கண்ட மதிறுட்ப மதில்வி சேடந்
தீங்கிலாக் கேத்திர கண்டஞ் சிவதர்ம புரத்தின் மேன்மை
தாங்கருஞ் சிறப்ப தாமத் தலபுரா ணத்தை மேலா
வோங்கிய தமிழி னாலே யுரைக்கவேன் றறிஞர் கூற. (உ)

## வேறு.

கடவுள்வாழ்த் தவையடக்க மூர்த்திதலந் தீர்த்தத்தின் கனத்த மேன்மை, நடநவிலம் மூர்த்திசரித் திரமீரேட் டவைசருக்க நடைய தாகத், திடமுடன்சொன் னோனறிவித் தாலறியு முயிரெணு னூற் றெளிவி னாலுங், கடல்விடமு மமுதாக்குங் கயோளபுரக் கடவுளென் னுங் கருத்தி னாலும். (ங)

## வேறு.

தேவர்க ளமுதங் கைப்பத் திருத்தியா லருத்திப் பின்ன
ராவதா முகமன்கூற லவனியின் வழக்கா முப்பு
மேவலாப் புற்கை கைமே லிட்டவன் மேலோர்க் கன்பு
நாவினாற் புகலல் சால நகையென நாணுற் றேனால். (ச)

ஆகுவ தாக மூன்னோ ராய்ந்தநூல் வழியே யாமும்
போகுதல் கட னெ மென்னப் புந்தியை நிறுவி மங்கை
பாகனுஞ் சிவதர் மேசன் சரித்திரம் பகர்ந்தேன் மேலோர்
மூகையின் மொழியுங் கேட்டு முகமலர்ந் தருள்வா ரென்றே. (ரு)

## வேறு.

வழுவின் மேலவர் பூசனைக் காங்கவர் மலர்த்தா
டொழுகி ஞர்கொயு நால்வகை மலரினைத் தொகுத்துப்
பழுது நீக்கியே பரன்முடிக் கணிந்திடு வதுபோ
லிழிவி னேன் சொலுந் தொடைகயோ ளேசர்பா லிசைப்பார். (சு

எருக்கி னோடிள மத்தமென் பொடுசிங்கை மீனின்
றிருக்கி னோடுரு கரவெயி ருமைசெஞ் சடையிற்
றரிக்கு நான்குநாட் டசர்சற் றெனுநலந் தழுவா
திருக்கு மென்கவி மாலையும் புனைவரென் றிசைத்தேன். (எ

வேறு

வேதங்க ளீசன் றன்மை விளம்பொரு ளெனவும் வேத
கீதங்கொ ளறிவிற் சான்றோர் நிருமலன் சரிதைதன்னை
யோதுக வென்ன வாணை யுறுத்தலாற் றுதிசெய் சூதன்
பாதங்கள் பரவி நாயேன் பணிவுட னுரைக்கப் புக்கேன். (அ)

அவையடக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௩௩.

---

# திருநாட்டுச்சிறப்பு.

---

திருவால வாயுடைய தம்பிரான் றிருவிளையாட் டறுபா னான்கும்
விரிவாக வுலகறிய விளக்கமதி குலதீப மின்னை வேட்டற்
கருவாகி யுருவாகி யருவுருவா யல்லதுமா மாகி தானே [ம்.
யுருவாகிப் புரந்திடுதென் பாண்டிநாட் டணிசிறிதிங் குரைக்க லுற்று

வெண்டிருநீ றணிந்தபிரான் மேனியென் வெளுத்துமிடை மேகமெல்லாந், தெண்டிரைநீ ரருந்தியவன் மணிமிடறு போற்கறுத்துச் சேணின் மீண்டாங், கண்டர்செறி கன்னிவரை யணைந்தவன்வே ணியின்மின்னி யமலன் கையிற், கொண்டதுடி போன்முழங்கி யெம்பிரான் கருணையெனக் குலவிப் பெய்யும். (௨)

குறியமுனி நெடுங்கடலை யுண்டதெனத் தாமும்போய்க் குடித்து மீண்டு, நறியசந்த னசலத்தின் வந்ததெனத் திருக்கன்னி நகமே னண்ணி, *யறிவுடையர் பலவுருவாய்ப் பலுமரனுக் காக்கினரங் கதுபோ னமு, மறிவிறிரு மஞ்சனங்கொண் டபிடேகம் புரிவமென மஞ்சு பெய்யும். (௩)

---

* அறிவுடையர்—அகத்தியர், புலத்தியர்; பலவுரு-பலாமர வடிவம்.

வேறு.

கன்னி மால்வரை முடிமிசைக் கனைகுரன் மேக
மின்னி யூற்றுவ கன்னிமா ரெழுவரு மேவி
வன்னி சூடிய மலைக்கொழுந் தீசர்பான் மருவிச்
சென்னி மீதினிற் கங்கைநீ ராட்டுத றெரிக்கும். (௪)

ஒன்ப தாகிய மணிகளாம் மழைக்கணின் றுதிர்வ
வன்ப தாகிய வகத்தியன் புலத்திய னனைமார்
முன்ப தாகப்பன் மலர்கடுப்பப் பூசனை முடித்தா
ரன்ப காட்டல்போ லிருந்தன சிலம்பின்மா டெங்கும் (௫)

முன்பு பன்னிரு பன்றியின் பறழ்கட்கு முலைப்பா
லன்பி னீந்தன னலவா யண்ணலாங் கதுபோ
லின்ப மெவ்வுயிர் களுமெளி தியைந்திடக் கன்னிப்
பொன்பி றங்கமே றருவிநீ ரூட்டுறும் பொலிந்து. (௬)

வேறு.

கலைபல கற்போர் முன்னர்க் கலங்கிப் பின் றெளிதன் மான
வலைபுனற் கன்னிநீத்தந் தானு மவ் வாற தாகித்
தலைமையாஞ் சிவமொன்றாகி யிருபத்தைந் துருவந் தானு
நிலையினைக் காட்டல் போலிந் நீத்தம்பல் பேர்பெற் றன்றே. (௭)

வேறு.

அவ்வகையிரீ கியதெண்ணீ ரமுதினைக்கா லாறியக்கிச்
செவ்வைபெற நிறைத்துழவு திருத்துபுதெய் வம்பழிச்சி
யெவ்வயினும் விதைவித்தி யேருழவர் வினைபுரியக்
கவ்வையிலாப் பயிர்களுயிர் களிப்பவயல் விளைந்தனவால். (௮)

விளைந்தகரும் பொற்படைகை வாங்கிமள்ளர் நிரைநிரையாய்
விளைந்தசெந்நெ லரிந்தடுத்து விலங்கலெனப் போர்வேய்ந்து
திளைந்தகரும் பகடதறைற் சாலிவைவே றுய்ப்படுத்துக்
களைந்துநவ மணிக்குவைபோற் களமுழுவ தினுங்குவித்து. (௯)

மன்னவனுக் காறிலொன்று வழங்கிமற்ற வளங்கொண்டு
கன்னிவரை நாதருக்குங் கனிவுளவன் பர்கடமக்கும்
பன்னுறுசுற் றத்தினுக்கும் பகர்தருதென் புலத்தோர்க்கு
முன்னுதவித் தாமுண்பார் நாளுட்டு முதற்குடியோர். (ய)

கான்காட்டும் பொழிலனைத்துங் கனிகாய்பூத் தளிர்காட்டு
மீன்காட்டும் வயலனைத்து மின்காட்டும் புயலனைத்தும்
வான்காட்டுங் கன்னல் செந்நெல் வளம்பலவும மலைகாட்டுந்
தேன்காட்டும பங்கயபூச் செறிதடமெண் டிசைகாட்டும. (கக)

மந்தமா ருதத்தசைபு மலர்க்கொம்ப ரிடைகாட்ட
நந்துகளங் காட்டமுல்லை நகைகாட்டத் தெங்கிளநீர்
சந்தமுலை காட்டமுகந் தண்ணந்தா மரைகாட்டக்
கந்தமலி கருங்குழலார் கவின்காட்டுங் காணாடு. (கஉ)

அன்றிரவின் முளைவாரி யன்னமிட்ட திருக்குலத்தோ
ரென்று மதியுளவரையு மிருக்குமெனு மிருக்குரைதத்தோர்
நின்றரியுங் காண்பரிய நிமலர்தரு மேசரெனக
குன்றரியு மாயிரங்கோக் கோனாடுங் கோனாடு. (கங)

பெரும்புகழை வேளாளர் பெருக்கியறம் பிழையாது
துரும்பெனினும் பிறர் பொருளைத் துவ்வாது சத்தியமே
விரும்புமறி வுளராகி விளைநிலங்க டிருத்துதலாற்
கரும்புகழை யிணைவணக்குங் கல்வாசற் றிருநாடு. (கச)

கோங்கொன்றுங் குவிமுலைமேற் குங்குமங்கள் கரைபுனலான்
மாங்கன்று நறும்பலவும் வாழையுமவ் வாசனையா
மாங்கொன்றச் சடையாதே யத்தினமு மன்பர்பணி
பூங்கொன்றைச் சடையார்வாழ் பூங்கொன்றைத் திருநாடு (கரு)

இந்நாட்டுக் கன்னிவரை யிறைவர்தரு மேசருக்குக்
கண்ணுட்டி முன்னோர்கள் கவினுட்டு மேசரெனப்
பொன்னாட்டோர் களுமியம்பப் புவிமிசைநாட் டினர்நாம
மந்நாட்டுக் கிணையாநா டவனியின்கட் கண்டிலமால் (கசு)

---

* நாளுட்டின் பெயரை, யஉ, யங, யச, யரு-ம் பாடல்களிற் காண்க.

வேறு.

குறிஞ்சியந் திணைவளங் குறைந்த தில்லைநீர்
செறிந்திடு மருதத்தின் வளமுந் தேங்கின
நறுங்கொடி முல்லைநல் வளமு மல்கின
வறிந்தநெய் தற்றிணை வளனு மார்ந்தவே. (கஎ)

இத்திணை மயக்க மீங்கியைந்து சாருமா
லத்தனர் பூரியந் தரஞ்ஞ வர்க்கமா
வைத்திவண் வதிந்தனர் மண்ணின் மேலொன்றுங்
குத்திரந் திரண்டுமாக் குறிக்கற் பாலவே. (கஅ)

ஆட்டினுட் சிறந்தது தில்லை யம்பலம்
பாட்டினுட் சிறந்தது பதிகச் செந்தமிழ்
காட்டினுட் சிறந்தது கவின்கொ ணைமிச
நாட்டினுட் சிறந்தது பாண்டி நாடதே. (கக)

வேறு.

உத்தமமா கியமலயத் துவசபாண் டியன்மகத்தி லுமையென் றேத்துஞ்
சத்தியே யவதரித்து முடிக்கவித்துப் பாராண்டு சகலலோக
கர்த்தனை கியசோம சுந்தரரே சனைமணந்தக் கடவு ளோடு[லாமால் (உ0)
நித்தியமா விற்றிருக்கும் பாண்டிநாட்டணி யெவரா னிகழ்த்த

திருநாட்டுச்சிறப்பு முற்றிற்று.

ஆகவிருத்தம் உ0.

---

# திருநகரச்சிறப்பு.

---

சென்னி மான்மதி புனைந்தவர் திருவரு ளதனாற்
பொன்னிமாநதி பொதியின்மேற் பொருந்துதாம் பிரமா
பன்னி மாநதி கொணர்முனி பலவுரு வாகுங்
கன்னி மாநகர் வளத்தினைச்சிறி துகட் டுரைப்பாம். (க)

வேறு.

நாமடந்தை கேள்வனென நான்மறையின் வழியொழுகி
யாமடந்தை வராத செங்கோ லரசர்தமை யீன்றெட்டுக்
காமடந்தை விரும்புதிருக் கோளமா நகர்கமலப்
பூமடந்தை முகத்தணிந்த பொற்றிலத மெனப்பொலியும் ௨)

வேறு.

வண்டு கிண்டிட மலர்ந்தசெந் தாமரை தவளா
முண்ட கந்தட மெங்கணுஞ் செறிந்தன முன்னரி
னண்டர் போற்றுமா மடந்தைபா மடந்தைய ரநேகர்
மண்டி யிந்நக ரிருப்பவ ராசன மாணும் (௩)

முத்து திர்த் திடுஞ்சாலி செங் கரும்பினை மோக்கு
நத்து திஞ்சுவைக் கரும்புகா விளங்கமு கமுக்கும்
பைத்த பூகநெட் டிலைக்குலைத் தெங்கின் மேற் பரவு
மத்த ருக்குலமைந்தருக் குலங்களை யடுக்கும். (௪)

ஆழியே ழுமொன் றானது போலுமா லகழி
யோழு லோகமீ தேறவைத் திட்டவே ணியதாய்ச்
சூழு மேழரா ணொன்றினொன் றுயர்ந்தன துன்னார்
வீழு மாறுசெய் மதிலுறுப் பனந்தமாய் விளங்கும். (௫)

நீராழி யன்றகழி நேமியுங் குன்றன்றரணு
மோராழி யானுடைய வத்தமன வோங்கலல
*தேராழி யேசெழும்பொற் சிகரியன்று சிகரியதா
மாராயா திருந்தோமென் றறிஞர்களு மருளுவரால். (௬)

வேறு.

தெண்டிரை யகழாய் நேமியங் கிரியே தினகரற் றொடுதிரு மதிலாய்த், துண்டவெண் பிறைச்சென் னியன்கையிற் றனுவே துலங்குபொற் கோபுர மாக, வண்டகோ ளகையத் தொடமுன்னு னீண்டவரிகொடிக் கம்பம தாகக், கொண்டிரு மாறி யிந்நகர்க் கணியாய்க் குழுமிய கொள்கையை மாணும். (௭)

---

*தேராழி-ஆழித்தேர்

### வேறு.

இந்திராதிய ரெண்மர்முப் பான்றிரி கோடி
யந்தவானவ ரிராப்பக லிடைவிடா தாங்கு
வந்து மீடலின் வாயில்க ணான்குந்தாழ் மாட்டா
தெந்த வேலையு மெயிற்கபா டந்திறந் திருக்கும். (அ)

மாட மாளிகை சூளிகை மண்டப மதிமே
லோடு மேடைக ளொன்றின்மே லொன்றறா வுயர்ந்தாங்
கேட விழ்ந்தகற் பகஞ்செறி யுலகெமக் கிணைகொ
ளோடு வாவென நடப்பது போன்றதிந் நகரம். (கூ)

வீதி யெங்கணும் விழவறா திருத்தலின் மலரா
ளோது மத்தலை யொருவறா துறைதலி னும்பர்
வேதர் மாதவ ரிருடிகள் சரித்தலின் விளங்கு
மாது பாதியன் கயிலையின் மறுகிணை மலையும். (ய)

வண்டிருப்பன மலர்களின் மடந்தையர் கரத்திற்
கண்டிருப்பது கனிகையர் மொழியிற் கட்கடையிற்
செண்டிருப்பன வவர்தனத் தினுந் தெருவினிலுந்
தொண்டிருப்ப பூந் தோட்டத்து மடியவர் சொலினும். (யக)

தானங் காட்டுவ தருமத்தோர் கரமுஞ்சிந் துரமுங்
கானங் காட்டுவ மாடமு மதுமலர்க்காவும்
வானங் காட்டுவ மடந்தையர் மருங்குமெம் மருங்கு
மீனுங் காட்டுவ மின்னனார் விழிகளுங் கொடியும். (யஉ)

### வேறு

கன்னிவளை ககோளபுரக் காரிகையார் தனங்காட்டு
மன்னவளை விழருவி யசைதரள வடங்காட்டு
மின்னினொடு மேகங்கள் மெல்லிடைபூங் குழல்காட்டு
மன்னநடை காட்டுமயி லவர்சாயல் காட்டுமால். (யங)

மீன்போலு மான்போலும் வேல்போலும் விழிகளென
வான்போலுந் துடிபோலுங் கொடிபோலு மருங்குலெனக்
கான்போலுந் தேன்போலுங் கனம்போலுங் கூந்தலெனத்
தேன்போலு மொழியாரைச் சிந்துரம்போல் வாரணைப்பார். ()

ஐந்துவித விலக்கணங்க ளாராய்வோ ரொருபாலாஞ்
சந்தவிசை நூல்படிக்குந் தகைமையோ ரொருபாலா
மந்தவட மொழிததருக்க மாராய்வோ ரொருபாலாஞ்
செந்தமிழ்வே தம்பயில்வோர் திருக்கூட்ட மொருபாலாம். (௰௫)

வேதவொலி யொருபாலாம் விளங்கிய வேழிசையாஞ் சங்
கீதவொலி யொருபாலாங் கின்னரமியாழ் வீணைகுழ
ஞாதவொலி யொருபாலா நாளுட்டு மாந்தர்கள் சொற்
பேதவொலி யொருபாலாம் பிறங்கியவந் நகரெங்கும். (௰௬)

மந்திரங்கள் பயிலுகின்ற மணிமாடம் பற்பலவாந்
தந்திரங்கள் பயிற்றுகின்ற சாலைகளும் பலவாகு
மெந்தையரு ளாகமங்க ளிசைக்குமிட மெண்ணிலவா
மந்தமறை முடிவுணர்த்து மிடங்களும்பல வந்நகரின். (௰௭)

சரியைபுரி வோர்கள்பலர் சங்கரர்க்கர்ச் சனைபுரியுங்
கிரியைபுரி வோர்கள்பலர் கிளர்குருசா ரூபமருள்
பெரியயோ கம்புரியும் பேரறிவா ளரும்பலரா
மரியசிவ ஞானநெறி யாராய்வோ ரும்பலரே. (௰௮)

வேறு.

பலவுறுவாத் தமிழுரைத்த குறுமுனிவ னிந்நகரிற் பதிதலாலே, கலைமுழுதுங் கோகிலமும் பூவையுமைபைங் கிள்ளைகளுங் கற்றுக் கேட்குங், குலவுருவப் பறவைகட்கும் விலங்குகட்கும் பயிற்றுமெனிற் கோதிலாத, புலனுடைய மாந்தர்தமிழ்ப் புலமைதெரி வதுமரிதோ புகலுங் காலை. (௰௯)

வேறு.

கணிகையர்வீதி.

இழிஞராயினு முயர்ந்தவ ராயினு மின்பம்
விழைவி லாதவ ராயினும் வேந்தரே யெனினு
ம[illegible]கர்த்தவண் கையரே லவர்களை மருவிக்
குழைபு நாடகக் கணிகையர் மறுகு கூறுதுமால். (௨௰)

கன்னல் வாழைக டோரணங் கமுகுகள் கதிர்க்கு
முன்னு தெங்கின்பூம் பழக்குலை மாலைகள் முகப்பிற்
றுன்ன லாலிது மருத நன் னிலமெனத் தோன்றி
மன்னு மாடவர் மறுகுமம் மடந்தையர் மறுகு. (உக)

பூனைக டோறு மாங் காங்கொளிர் தீபங்கள் வகுத்து
நனைய வார் குழற் கற்றை தாழ்ந திடமெல நடந்து
சுனையிற் செங்குமு தமவிரிந தாலெனத் தோன்றப்
புனையும வெண்டுகிற் கணிகைமா ரோதிமம் போன்றார்.(உஉ)

தெண்ணி லாமதி மிலைச்சுகோ ளேசர்முன் சென்று
பண்ணு லாமொழிப் பாவையர் குழாநடம் பயில
நண்ணு போதிலா னனங்குவி யாவகை நாடில்
விண்ணி லாப்பகை யிலாதபங் கயமென விளங்கும். (உங)

வேறு.

மஞ்சுதவழ் மணிமாடம் வரைபோலு மதின்மதியப்
பிஞ்சுதவழ் நுதலார்கள் பேடைமயி லினம்போல்வார்
கொஞ்சுகிளி பேசுவதுங் கோகிலங் கள்கூவுவது
மஞ்சொன்மட வார்மொழியென் றுடவர்க ளுடுவரால். (உச)

வேறு.

மதனநூற்பொருள் கிள்ளைக்கு நாகணவாய்க்கும்
பதனு றும்படி யிலக்கணச் சொற்களாற் பயிற்றி
முதலை யாமல்வா ணிகஞ்செயுந் தங்கட முறைமை
யதனை யுந்தம சிறுமியர்க் கறிவிப்பா ரனையார். (உரு)

வேறு.

திங்கள்வெண் கவிகைச் செல்வன் செருக்கையு முருக்குஞ் செய்ய
பங்கய முகத்தர் கொம்பர் பன்மணிக்கலன் பூண்டன்னார்
சங்கையில் பரதநூலுஞ் சாரமா மதனநூலு
மிங்கித மாகக் கற்குங் கணிகை யரிடங்க ளெங்கும். (உசா)

அங்கமாம் பலவற் றுள்ளு மரவமா மங்கத்தாலே
கொங்கணர் தெலுங்கர் வங்கர் சூர்ச்சரர் குடகர் மச்சர்
சிங்களர் முதலா மைம்பா னுறுதே யத்து மன்னர்
தங்களை வரிய வந்து தனங்களைக் குவிக்கச் செய்வார். (உஎ)

வேறு.

அந்தணர்வீ திகளனந்த மரசர்வீ திகளனந்தங்
கந்தமுல்லைத் தார்வணிகர் காவணவீ திகளனந்த
மந்திரசை வாகமத்தோர் மறுகனந்த மவைநிற்க
செந்திருவாழ் வேளாளர் திருவீதிச் சிறப்புரைப்பாம். (உஅ)

வேறு.

## வேளாளர்வீதி

ஏர்த்தொழிலின் வளம்பெருக்கி யிமையவரந் தணரரச ரிணையி லாமற், கூர்த்தவறி வுளவணிகர் முதலாந்தொண் ணூற்ரறு குலத்தோர் கட்கு, மார்த்தவறி வுடையோர்க்கு மருந்தவத்தி னடைவோர்க்கு மருத்தி கூரச், சீர்த்தவன மருத்தியத ளன்மகிழ்வர் கங்கைகுல திலகர் மாதோ. (உ௯)

வேறு.

காராளர் வருவோர்க்குக் கற்றுவின் பாலனங்க
டாராள மாக்கொடுப்பர் சாலிவிளை தீரளங்க
ளோராளர் படிக்களப்ப ரியாசகர்க்கு மத்தரளம்
பாராம விருகையும் பாய்ச்சியெடுத் தளிப்பார்கள். (௩௰)

## வேறு. வணிகர்வீதி.

மலையிலுள பெருவளனு மருதநிலத் திருவளனு மாயோன் வாழு
முலையிலுள திருவளனுந் தீவினுள பெருவளங்கண் முழுதுநல்கு
மலையிலுள பெருவளனு மன்னுந்தலா லளகையினு மதிகங் காட்டும்
விலைபின்வரம் பகன்றநவ மணிவெயிலா லிரவகற்றி விளங்கும் வீதி.

* உஎ. தாங்கள்-குறுக்கல்.

### வேறு.

தனவசியர் வீதிகளிற் சந்தனங்காழகிற்குறடோ
டினபலவாங் குறிஞ்சிவள மிக்குதிர்க்கும் வெண்டரளஞ்
செநெறருமுத் தேமுதலா மருதவளந் தெண்கடலுற்
றீன்பவள முதலான பலவளனு நெருங்கினவால். (கஉ)

### அரசர்வீதி.

காவலர்க டிறையளக்குங் கனகக்குப் பைகளொருபா
லாவலுட னறினிலொன் றளக்குஞ்சா லிகளொருபாற்
றேவருல கமுமருளச் செம்பொன்னு நவமணியுந்
தாவுபரி மானிரதந் தந்திநிரை களுமொருபால். (கங)

### வேறு.

கொடிஞ்சிமான் றேர்நிரைவெண் கோட்டானைத் திரள்குர
கதத்தின் கூட்டங், கடுஞ்சினத்த பதாதிகளின் பெருக்கமத்ர சா
லைநிரை கணிகைமாதர், நடஞ்செயுஞ்சித் திரகூட மாடரங்கு மணி
மேடை நலங்கொ டெற்றி, யடங்கிநெருங் கலினயன மாயிரத்தோ
னகர்நாணு மரசர்வீதி. (கச)

### வேறு. வேதியர்வீதி.

வேதியர்வீ திகடோறும் விதிப்படி செய் வேள்விகளி
னாதிமறை நான்கொலியு மாகுதிசெய் பேரொலியு
நீதிநூல் கேள்வியொலியு நித்தியநை மித்திகங்க
ளோதுசிவா கமவொலியு மோதவொலி யடக்கியவால்.

### வேறு.

இருக்கினொலி யொருபுறமா மெசுர்வேத மொருபுறமா மிறை
வற்கின்பம், பெருக்கியசா மத்தினொலி யொருபுறமா மதர்வணமும்
பேசு மோர்பாற், சுருங்கினொடு சுருவத்தான் முத்தீயின் வினைமுடிக
குந் தூய்மை யோர்பால், மருக்கொள்கம லாசனத்தா னுலகமென
விளங்கியது மறையோர் வீதி. (கரு)

## வேறு.

சுருதி மிருதி யிதிகாசந் துலங்கு புராண மீமாஞ்சை
சுருதி தருக்கம் வியாகரணங் கரையில் வேதாந் தம்பாட்டம்
பெரிய பாதஞ் சலமுதலாப் பேசு நூலின் வகைபலவுந்
தெரிய வல்ல பேரறிஞர் சிறந்த கூட்டந் தெருத்தோறும். (௩௭)

திருவெண் ணீறு மைந்தெழுத்துஞ் சீரா ருருத்தி ராக்கமுமே
கருவண் ணறு முத்திவழி காட்டு மருந்தென் றுளத்தெண்ணிப்
பெருவெண் ணுருவே சிவலிங்கப் பெருமா னென்று பிறழாது
மருவெண் மலரா லருச்சிப்போர் மடங்கள் பலவு மலிந்தனவால். ()

இடையிங் கலையின் வரும்வளியை யிரித்து நடுநா டியினிறுத்தி, மடைவாய்ப் பகமொப பாகக்குளிர்வெண் மதிமண் டலத்தின் வழியமுதைத், திடமா வுண்டு சிவயோகஞ் சேர்ந்தா னந்தந் திளைப்போர்கண், மடமே வனந்த மாங் குறைவோர் மகிமை யெவர்க்கு மதிப்பரிதே()

## வேறு.

சகலகலை ஞானமெலாங் கழன்று மேலாந தத்துவமாய்த் தற்பரமாய்ச் சான்றுதானு, யகளவடி வாய்ச்சச்சி தானந் தமமா யத்துவித சுத்தநிரா லம்பமாகி, யிகபரமுங் கான்றிட்ட வுணவென்றெண்ணி யானெனதென் றற்றவிடத் திருக்குமேலோர், செகமதனில் வாழ்பவர்போ லிருப்பார் வாழுந் திருமடங்கள் பற்பலவாத் திகழ்ந்தவங்கண். (௪௰)

## வேறு.

விண்ணுலகோ ராடுமலர்ப் புண்டரிகத் தடக்கரையில் விளங்குமன்றே, புண்ணிலவு சோதிவிருக் கத்தினின்று மெழுஞ்சுடரை யொத்தே யன்பர், கண்ணிலவு ககோளேசர் பொய்யாமொ ழீசரெனக் கருத்துட் காண, மண்ணுலகின் மரகதப்பூங் கொம்பினொடு வீற்றிருந்து மகிழ்பூங்கோயில். (௪௧)

தேனாட்டுத் தவளைபடாச் சுனையென்னுஞ் சிவகங்கைத் திருத்[illegible] கூவக், கானாட்டு மாமலகத் தேங்கமழ்பூந் தருநிழற்கட் கவினு[illegible]ன்றே, [illegible]நாட்டு [illegible]தனெனுஞ் சிவதருமே சன்பலவா நாம்ங்காட்டி, [illegible]ட்டிற் சிவகாம சுந்தரிப்பெண் ணுடன்கூடி வாழுங் கோயில். ()

பூவுடையோன் மலர்க்கையொன்றின் வைத்திருந்த சங்கதீர்த் தத்தின் மாடாங், கோவுடைய பனசவிருக் கத்தினிலக் கினிக்கொழு ந்தாய்க் கேழடி பானுந், தேவுடைய சோதிதிருக் ககோளேச னெனு வொருபேர் சிறப்பக் கன்னி, யாவுடைய நாயகிப்பெ ணுடன்கூடி மகிழ்ந்துவிளை யாடுங் கோயில். (௪௩)

இம்மூன்று திருக்கோயில் களினுமே ழிசைநரம்பி னெழாற்ப ணீ ணோர்ப்பு, மம்மூன்று நாயன்மார் தமிழ்வேத நான்குமறை யங்கத் தார்ப்பு, மும்மூன்று காலத்தை யிரட்டித்த காலமெலா மொழித்த லாலே, கம்மூன்றி மடுக்குமெழு கடலுமொருங் கார்க்குமொலி கடுக் கூ மாலோ. (௪௪)

## வேறு.

அன்ன கன்னிவெற் பமருமும் மூர்த்திகட் காட்டு
மன்னு பாறயிர் நெய்மதுக் கன்னனீர் மடுத்த
வன்ன வேகட லாறெனு முலகர தனப்பூண்
பண்ணு சித்திர வத்திரங் களேயெவர் பகர்வார். (௪௫)

ஐய னங்கணு ணூட்டுறும் மூர்த்திகட் கடைக்குந்
துய்ய வோதன வருக்கநற் சிற்றுண்டிச் சுவைகண்
டுய்ய வாரமு துண்பவ ருவக்குமூ ணளிக்குஞ்
செய்ய தேனுவும் வேட்டிடும் பூதிநுற் சிறக்கும். (௪௬)

இண்டை வார்சடை யெம்பிரான் கன்னிமால் வரையிற்
றொண்டி னீடிய வைவகைச் சைவருந் தவன்றி
யண்டு சிங்களான் மார்த்தபூ சனைத்தலை யதிர்க்குங்
கண்டை யோதையப் புறக்கட லொலியினுங் கலிக்கும். (௪௭)

## வேறு.

காலங்க டொறுமோமங் காலங்க டொறுந்தபன கனக கும்பங், காலங்க டொறும்பலிகீ ளீரெட்டு முகமனொடு கதித்து மேவுங், காலங்க டொறுநித்த விழாவினொடு வானவிழாக் கவினவோங்குங், காலங் க டொறும்பதினெண் வாத்தியமு மிடையின்றிக் கறங்கு மாங்கண்

மாதவிழா வாட்டைவிழா நித்தியனை மித்தியத்தின் வழுவாங் குற்மக், தீதுதவிர்க் கின்றசரு வப்பிரா யச்சித்தந் திருக்கேர்•வாக; ஜோதியா மகுடாதி யாபரணஞ் செம்பொற்றா சாதி யாவு, நீதியாய்ப் பெர்லிவெய்தித் தொன்றுதொடுத் தெஞ்ஞான்று நிலவு மீதோ (சகூ)

வேறு.

மன்னுமெழிற் கைலைவரை மீதினின்று மாவிர வாகுமுதல் வீர் ஞோர் சேனை, துன்னிவரச் சூரனுயிர் படுத்த வைவேற் றேன்றனு மைகுழலில்வண்டாய்த் துவன்றியீச னன்னவளுக் குரைத்தமனு வுணர்ந்த தோட்கன்னைமகார் பிணிக்குமருந் தருந்து மீபோற், கன்னிவரைப் பரசிவனைப் பரவி யாங்கட் கன்னியர்க ளிருவரொடு ங் கவினுமன்றே. (ருய)

வேறு.

ஈதன்றி யொருகோட்டன் றிருக்கோயில் களும்பலவா யிலை வேற் கந்தர், நீதங்கொ டிருககோயில் களும்பலவாஞ் சாத்தனார் நெடுமோ லோடு, மாதங்கி சாமுண்டி மாதரெழு வர்கள்வடுகர் மருவுங் கோயி, லோதுங்கா லனந்தமுள வணங்கினோ ரபீட்டமெலா மொரு ங்கு வாய்ப்பர். (ருக)

மடங்களெலா மனதான மனைகளெலாஞ் சொனதானம் வாவி கண்ட, விடங்களெலா நீர்ப்பந்த ரெங்குஞ்சித் திரத்தெற்றி யிமை யோ ரூர்க்கெண், மடங்கதிக மெனச்செறியும் வளம்பலகண் டிசயி த்தவ் வர்னு ளோர்க, ளடங்கலுங்கண் ணிமையார்க ளிதன்சீர்மை தகிசிக்கு மருத்தி யாலே. (ருஉ)

பலவுருவ மாமிரண்டு முனிவருறை தருமேன்மை யடைத்த மூதூர், நிலவுருவ மானமுக முடையகன்னி மாரெழுவர் நிற்கு மூதூ ர், வலமுடைய சூரடர்த்தோன் விந்துவழி படுமூதூர் வடுகே சர்க்கு த், தலமளித்தான் றலையழித்த பழிதொலைத்த திருநகரந் தானு மீதோ. (ருங)

வேறு.

பழைய மும்மல வெப்பமேற் கொண்டபல் லுயிர்க
டழைய வேயருண் மழைபெய்து தாணிழல் கொடுக்கு

குழைய வார்செவிக் கூத்தர்க்குந் தன்னிழல் கொடுக்கு
மிழைமிகொ ணெல்லியின் மகிமையை யாங்ஙனம் வகுப்போம். (௫௪)

வேறு.

அந்தணர் குடியு மரசர்தங் குடியு மறம்புரி வணிகர்தங் குடியு, முந்திமேய ருழவோர்க் குடிகளு மன்றி மூவறு குடிகளு மகிழ்கூர்ந், திந்திர னகரு மளகைமா நகரு மெகினவூர் பவனெழி னகருஞ், சந்தியா வந்தத் தவத்தின்மே வியபோற் றழைத்தன யாவரும் வியப்ப.

வேறு.

அகிலமெலா மேடாக வாடகப்பொன் மேருவெழுத் தாணியாக சீ,சுகலநதி பதியேமைக் குழம்பாகப் புவனமெலாந் தனிப்ப டாமாப், பகர்தருக்கள் வரைகோலாச் செய்துமா லயன்றவத்தின் பான்மை வாய்த்துந், தொகைவரைத லரிதென்றாற் கன்னிநகர்ப் பெருமையெம்மாற் சொல்லற் பாற்றோ. (௫௬)

வேறு.

அகரமெழுத் தினுளதிக மாழியினுட் பாலாழி
சிகரமஞ்சக் கரத்ததிகஞ் சிகரியிற்செம் பொற்கிரியே
புகரின்மறை யினிற்சாமம், புத்தேளிர் களிற்சிவன்போ
னகரமதிற் றிருக்கோளக் குடியாமிந் நகரதிகம். (௫௭)

திருநகரச் சிறப்பு முற்றிற்று.

ஆக விருத்தம். ௫௭

---

# நைமிசாரணியச் சருக்கம்.

முன்னோர் காலையிற் சத்திய வுலகத்தின் முனிவோ
ரன்ன வூர்தியோன் றனையடைந் தருந்தவம் புரிவா
னின்ன தாலமீ தொருதல மியம்புக வென்னப்
பன்ன வோங்குமேம் பாட்டது நைமிசப் பழுவம். (௧)

மங்கி டாதவெண் பொடிவிழி மணிமறி மான்வெஞ்
சிங்கி யூடர வம்புலி யம்புலி தெளிநீர்

தங்கி மாதங்க மும்பெறீஇச் சிவமெனுந் தன்மைத்தா
லங்கு மூன்றுமாங் காங்கொளிர் நைமிசா ரணியம். (௨)

வார ணங்கள்கோட் டாமப லும்வாவியி னொலிப்பத்
தோர ணங்கள்கா லசைவினாற் றனித்தனி தொனிப்பக்
கார ணங்கண்மூன் றையுமுணர்ந் தோர்குழாங் கழறு
மார ணங்கண்மிக் கார்ப்பது நைமிசா ரணியம். (௩)

காம மாதிமுக் குற்றமுங் களைந்துகண் ணுதலோ
னாம மாகுமைந் தெழுத்தையு நவின்றுநா ளுள
வோம மானவே பலந்தரு மென்றுநா லுரைகளுஞ்
சாம கானர்கள் சார்வது நைமிசா ரணியம். (௪)

அச்சி றப்பினை யுடையநை மிசவனந் தன்னே
ரிச்சை யாகவெட் டாண்டினி லியற்றுமோ ரியாக
நிச்ச யித்ததற் காவன யாவையு நிரப்ப
முச்ச கத்துள முனிவரு மாங்கண்முன் னினரால். (௫)

வந்த மாமுனி வரர்களை யிருந்தமா தவர்கள்
சிந்தை யார்வமோ டெழுந்தெதிர் சென்றுதாழ்ந் தவர்கள்
அந்தண் மாமலர்ச் சேவடி விளக்கியாங் கவரைச்
சந்த வாசனத் திருத்திபா சமனமுந் தந்தார். (௬)

ஆய காலையி லந்தணர் குழாம்புடை யணைய
மாய னாகிய வியாசன்மா ணாக்கனா மகிமை
மேய சூதமா விருடிவந் ததுகண்டு விரைந்து
தூய மாதவ ரனைவரு மெதிர்கொடு தோன்றி. (௭)

வேறு

அம்புவியில் "வீழ்ந்திறைஞ்சி யடியேங்கள் செய்தவமே யமல
னே," "சம்புவின்கா தைகணிறைந்த சாகரமே சூகரத்தின் றந்தம்
பூண்ட, வும்பர்பிராற் கிருப்பிடமே சிவனடியார் சிகாமணியே யுணர்
வின் வாழ்வே, யிம்பரிலெந் தவப்பயனே வருகவென வாசனத்தி னி
ருத்திப், பின்னர். (௮)

அகமகிழ்ந்து பாத்தியவா சமனாமருக் கியமுதலா வன்பி னாற்றி முகமனுரை யாமமுதஞ் செவிநிரப்பிக் கரஞ்சிரமேன் முகிழ்த்து மேலாஞ், சுகமெனுஞ்சி வானந்தத் துவிதபரி பூரணவான் சூதைய தாமெய்ப், பகவனது சரித்திரமாங் ககோளபுர மான்மியத்தைப் பகர்வா யென்றார். (௯)

உளங்கனிந்திவ் வாறுமுனி வரரனைவோ ருங்கேட்ப வுவகை பொங்கி, யளந்திமையோர் களுமறியாக் ககோளபுர மான்மியத்தை யறைமி னென்னும், வளந்தருஞ்சொல் லமுதினைத்தன் செவியின் மடுத்தானந்த மகிழ்ச்சி கூர்ந்தோன், குளந்தருஞ்செங் கனல்விழியார் ககோளபுர மகிமையினைக் கூறலுற்றார். (௧௦)

நங்குரவன் கடலருந்து கும்பமுனி வரன்வசிட்ட னாரதாதி, புங்கமுனி வரர்யாரு முன்பொருகாற் றிருக்கயிலைப் பொருப்பிற் சென்று, கங்கையணி சடிலர்திருத் தாளிறைஞ்சி யடியேங்கள் கருத்தி னுற்ற, சங்கையினைத் தெருட்டவென நந்தியைப் பார்த்தவர் தெளியச் சாற்று கென்றார். (௧௧)

அன்னவுரை சிரமேற்கொண் டருணிறைநந் தியங்கடவு ளன்பு கூர்ந்து, முன்னமெங்க ளுளத்தையந் தெளித்தரக சியப்பொருளாய் முளைத்த தானஞ், சொன்னவரை நிகர்கொடுங்குன் றத்தினுக்கு மூலமதாய்த் தோற்று மன்ன, கன்னிவரை யதன் சரிதை கேண்மினெனச் சூதமுனி கழறலுற்றான். (௧௨)

நைமிசாரணியச் சருக்க முற்றிற்று.

ஆகவிருத்தம் ௧௨௨,

---

## திருக்கைலாயச் சிறப்புச்சருக்கம்.

---

சீவர் நாயக னாகிய திசைமுகச் செல்வன்
மாவி னாயகன் வெண்ணிற மாவினா யகனு
மூவர் நாயக னாமுமுப் பத்துமுக் கோடி
தேவர் நாயக னிருப்பது திருக்கயிலாயம். (௧)

அருட்ட தும்பிய வானவ ரசுரரோ டணையா
வுருட்டு மந்தரத் தராப்பிணித் தீர்த்துமுன் னுழக்கிச்
சுருட்டு வார்திரைப் பாற்கடல் கடைந்தநாட் சுதையைத்
திரட்டி வைத்தது போன்றது கயிலைபஞ் சிலம்பு. (உ)

விடையு யர்த்தலா னறுங்கொன்றை மேவலால் விண்ணிற்
படரும் வெண்மதி கங்கையுந் தவழ்தலாற் பசும்பொற்
கொடிமருங்குற வரவங்கள் செறிதலாற் கோலத்
தடநெடுங்கிரி பரசிவக் கடவுளைத் தகையும். (உ)

கொண்டன் மேற்படிந் திடுதலா னான்முகன் கூடிப்
புண்டரீகமேற் காட்டலாற் றிருப்பொருந் துதலா
லண்ட கோளமேற் சேர்தலா லடியநன் றிடலாற்
றண்டு ழாய்முடிப் பகவனை நிகர்க்குமச் சயிலம். (௩)

வேறு.

கானெலாங் குழலாய்க் கதிர்மதி முகமாய்க் கமுகெலாங் கண்டமாய்க் கொம்பிற், றேனெலா மொழியாய்க் கற்பெலா நகையாய்ச் செவ்விய காந்தளங் கரமாய்; மானெலாங் கண்ணாய்க் கொடியெலா மிடையாய் மாந்தளி ரெலாமல ரடியா, யூனெலாந் தாங்கு முடலுயிர்க் குயிரா மொருத்தியைப் போன்றதவ் வோங்கல் (௫)

வேறு.

வெண்க ரிக்குழாங் கரியசிந் துரக்குழாம் வேங்கை
செங்கை தூங்குமா ளிக்குழா மெண்குமான் சேதா
வங்க மேவிய புலவர்க ளருந்தவம் புரிந்து
திங்கள் வார்சடை யரனுரு வெய்துவான் றிரிவார். (௬)

தேவர் கின்னரர் சித்தர்விச் சாதரர் திசையின்
மேவு பாலகர் விரிஞ்சன்மான் முனிவரர் கருடர்
பாவு காந்தரு வப்படி வத்தர்கிம் புருட
ரோவி லாதரன் றரிசனஞ் செய்தவ னுறைவார். (எ)

சுத்த மத்தள முதலிய தோற்கரு விகளுஞ்
சுத்து காகள முதலிய துளைக்கரு விகளுந்

சத்த தாளமும் வீணையின் கானமுந் தந்தி
யொத்த ரம்பையர் பாடலு மொருபுடை யொலிக்கும். (௮)

வேத வோசையு மாகம வோசையு மிருதிப்
பேத வோசையும் புராணத்தி னோசையுஞ் பெருஞ்சங்
கீதவோசையு மரம்பையர் நடித்திடக் கிளரும்
பாத வோசையும் பரிபுர வொலியுமோர் பாங்காம். (௯)

வேறு.

சடைகொண் டவர்சிலர் சிகைகொண் டவர்சிலர் சகலாங் கமும யிர் களையாத, நடைகொண் டவர்சிலர்முடிகொண் டவர்சிலர் நரைமுண் டிதர்சிலர் செங்காவி, யுடைகொண் டவர்சிலர் குடைகொண் டவர்சில ரொருதண் டினர்சில ரொருபோதே, மடைகொண் டவர்சில ரண்டகொண் டவர்சிலர் மடைவிண் டவர்சிலர் முனிவோர்கள். (௰)

கனியுண் பவர்சிபலர் சருகுண் பவர்சிலர் கன்னற் றடியொடு காய்கந்த, நனியுண் பவர்சிலர் நறையுண்பவர்சிலர் நாரங் கொள்பவர் சிற்சில்லோர் பனியுண் பவர்சிலர் காலுண் பவர்சிலர் பைம்புற் களை றுகர் பவர்சில்லோர், முனிவொன் றிலர்சிலர் முனியுண் பவர்சிலர் மொழியின் றிலர்சிலர் முனிவோர்கள். (௧௧)

வேறு

மலையின் மீதி லிருப்பவர் சிற்சிலர் மலைமு ழைஞ்சி லிருப்பவர் சிற்சிலர், அலைபி லாம லிருப்பவர் சிற்சிலர் கனல்க ளைந்தி லிருப்பவர் சிற்சில, ரலைபு னற்கு ளிருப்பவர் சிற்சில ராத வத்தி னிருப்பவர் சிற்சிலர், தலைகி லத்தி னிறுத்திமெ டுத்திடு சரண்மு லர்த்து தவத்தினர் சிற்சிலர். (௧௨)

வேறு

ஆல முண்டவர் கோயிலை யலகிட்டு மெழுகிக்
கால மூன்றினுந் திருவிளக் கேற்றிப்பூங் காச்சென்,
றேலு நால்வகை மலரினா லலங்கல்க ளியற்றிப்
பால லோசனற் பணிந்தவ ணிருப்பவர் பல்லோர். (௧௩)

சந்த மாமலர் புகையொளி மஞ்சனஞ் சருக்கொண்
டெந்தை யார்தமக் கினியவா றுகமனீ ரெட்டுஞ்
சிந்தை யன்பொடு செய்தனற் கிரியையுந் திருத்திப்
பந்த நீக்கியப் பரனரு கிருபபவர் பல்லோர். (கசு)

திட்ட வைம்புலக் குறும்படக் கிச்சுடர் மூன்றை
யொட்டு மாறிடத் தொளியுங்கண் டமுதமுண் டுணர்வா
யெட்ட தாகிய வங்கயோ கத்தினை யியற்றி
யட்ட மூர்த்தியார் வடிவம்பெற் றிருப்பவ ரநேகர் (கஎ)

நான்கு பாதமு நவிற்றுநா லேழுதந் திரத்தி
னோங்கு ஞானபா தத்தின்முப் பொருளையு முணர்ந்து
தேங்க ரும்பெனத் தித்திக்குந் திருவருண் மூழ்கித்
தாங்கள் வேறற நிற்பவ ரெண்ணிலா தவரே. (கஅ)

திருக்கைலாயச் சிறப்புச் சருக்க முற்றிற்று
ஆகவிருத்தம் கஉஅ.

# புராணவரலாற்றுச்சருக்கம்.

ஆய வெள்ளியங் கிரியினி லாயிரங் காலின்
மேய மண்டபங் கோடிசூ ரியரென விளங்குந்
தூய மாதவ ரதினிறைந் திருப்பது சோமன்
காயும் வெங்கதி ரிடத்தொடுங் குஞ்செயல் காட்டும். (க)

அத்தி ருப்பெரு மண்டபத் தெதிரொர்பா லாழி
யொத்தி ருப்பதா யொருசிவ தீர்த்தமுண் டதன்பால்
முத்தி ஞலியல் படிகளி லனந்தமா முனிவர்
சித்தர் மாதவர் போகுசெய் திருப்பரெண் டிசையும். (உ)

அந்த வாவியி னகலமு நீட்சியு மைம்பான்
றந்த வாயிரம் யோசனை சலிலமா ரமுதங்
கந்த மேவுநீ லோற்பலங் கமலமங் குமுத
மெந்த வேலையு மலர்ந்தறு பதங்குடி யிருக்கும். (௩)

சூற்று நான்கினு மைந்தருக் குலமெலாஞ் சுலவும்
பொற்ற வஞ்சிறை யன்னங்க ளெங்கணும் பொலியு
மெற்று தும்பிய சங்கமுத் துயிர்த்திளைப் பாறுங்
கற்றை யஞ்சடைச் சிவபிரான் றளியவண் கவினும். (௪)

அன்ன வாவியங் கரையினி லத்திரி வசிட்டன்
பின்னு செஞ்சடைச் சவுனகன் பிருங்கிமா விருடி
பன்ன கத்திரு முனிவரன் வியாக்கிர பாதன்
முன்ன ராகிய சனகனே முதலிய நால்வர். (௫)

விச்சு வாமித்தி ரன்சுகன் வியாசன்வான் மீக
னச்ச தானந்தன் காசிப னாரதன் சூத
னிச்ச மார்க்கண்டன் பராசரன் கோதம னிமல
னச்ச தாவறி யங்கிரா வுபமன்யு னென்.. (௬)

சம்பு பத்தன்க கோளகன் கற்கன்சா பாலி
யம்பு லத்திய னுக்கிர வீரிய னைபத்
தம்பன் காத்தியா யனன்போதா யனன்சிலா தரனக்
கும்ப யோனிமாண் டவியன்முற் கலன்குலப் பிருகு. (எ)

வாம தேவன்றார் வாசனே முதலிய மாண்பார்
நாம தேயமா தவர்களு மவர்கண்மா ணாக்க
ராமு னீச்சுர ரனைவரு மன்புட னணைந்தாங்
கோமெ னும்பொரு ளுறைதிருக் கயிலையை யுற்றே. (அ)

வேறு.

சங்கரம காதேவ சாம்பசிவ நீலகண்ட தத்வாதீத
பொங்கரவ பூடண புராந்தக சுராக்கிரேச பூத நாத
கங்கரக்ரு பாகரத்ரி யம்பகநி ராதார கைலை வாச
துங்கமணி மகுடகுண பணகங்க ணாவெனத்தோத் திரங்கள் செய்து

வேறு.

எய்து மாதவ ரனைவருஞ் சங்கற்ப மியம்பிக்
கொய்த பைங்குசைப் பவித்திர மணிவிரற் சூட்டி

மைய கண்டனை மனத்திடை நாட்டிநீ ராடிச்
செய்ய வேண்டிய கடனெலாந் திருந்துற வியற்றி. (௰)

அன்பு மீக்கொளத் தரையில்வீழ்ந் தடிக்கடி பணிந்துள்
ளென்பு நெக்கிட வாநந்த பாட்பங்க ளிறைத்து
முன்பு வாயிலி னின்றநந் தீசனை முடிதாழ்ந்
தின்ப மேவியாங் கவன்றரு மருள்விடை யேற்றே (௰க)

ஆர ணங்களுன் கின்னமுந் தேடியு மறியாப்
பூர ணன்றனைத் தரிசிக்கும் பொருட்டுள்ளே புகுங்கா
லார ணன்மறை நான்முக னவ்வியினுற் கோட்டு
வார ணன்முதற் றேவர்கள் புடைநின்று வாழ்த்த. (௰உ)

ஆட கேசர்கா லாக்கினி யுருத்திரங் கூர்மங்
கூடு மண்டத்தர் பத்திரர் பன்னொரு கோடி
சேடு கொண்டருத் திரர்சத வுருத்திரர் திசைமே
லாடு கின்றவர் பூதநா யகர்கண நாதர். (௰ங)

வசுக்கள் பன்னிரண் டருக்கர்வெண் டிங்களேழ் மடவார்
பசுக்க ளுகராம் பணுமணி மகுடர்கள் பரந்து
சுசிக்கொ ளட்டமூர்த் திகள்திசை யெங்கணுந் துன்னிப்
பசிக்க லந்தவ ரமுதநேர் கண்டெனப் பரவ. (௰ச)

பரவு வார்களிற் சிலர்க்கருள் வாக்கினுற் பகர்ந்தா
னருள்வி ழிக்கடை வழங்கினன் சிலருக்கா னனத்தின்
விரவு மூரலால் விரித்தனன் சிலர்க்குக்கம் விதிர்ந்தான்
கரத லத்தமைத் தருளினன் சிலர்க்கந்தக் காலை. (௰ரு)

## வேறு.

எண்ணிறந்த பரிதிகள்பொன் மலைமீதிற் றோன்றுதல்போ லில
ங்குமேனிக், கண்ணிறைந்த கவினொழுகக் கண்மூன்றுங் கறைக்கள
முங் கரங்க ளுன்கும், பண்ணிறைந்த மொழியுமையோர் பாற்பொரு
ந்தப் பாலரிரு பானு மோங்க, விண்ணிறைந்த கங்கைமுடி விமலனார்
திருக்காட்சி விளங்கக் கண்டார். (௰சு)

முன்புவந்து பணிந்தபெருந் தேவரெல்லா மவரவர்கண் முறை யிற் போதப், பின்புவந்த மாதவர்க ளனைவோரும் பணிந்தெழுந்து பிறங்கு மார்பி, னன்புகொண்டா பெருக்கணிந்தா யாமையோட டினையணிந்தா யிதுபோன் றியாஞ்சொ, லன்புதுன்றுச் சொற்றுதி யுங் கேட்டருள வேண்டுமென வறைவா ராஞர். (யஎ)

வேறு.

திங்களஞ் சடையாய் போற்றி செங்கண்மால் விடையாய் போற்றி
சங்கவெண் குழையாய் போற்றி தழன்மழு வுழையாய் போற்றி
மங்கள வுருவா போற்றி வானவர்க் கொருவா போற்றி
கங்கைசேர் தலையாய் போற்றி கயிலைமா மலையாய் போற்றி. (யஅ)

வந்தனக் குரியாய்போற்றி மாலயற் கரியாய்போற்றி
யுந்தனைத் தரித்தாய் போற்றி யநங்கனை யெரித்தாய் போற்றி
நிந்தனை யிலாதாய் போற்றி நினைவிலார்க் கலாதாய் போற்றி
கந்தனைப் பயந்தாய் போற்றி கைலையை நயந்தாய் போற்றி. (யகூ)

சோமனை முடித்தாய் போற்றி சுருதியைப் படித்தாய் போற்றி
பூமன்கம் மறுத்தாய் போற்றி புரமுநக் கறுத்தாய் போற்றி
மாமன வம்பாய் போற்றி வராகவெண் கொம்பாய் போற்றி
காமனைப் பொடித்தாய் போற்றி கைலையி னடித்தாய் போற்றி. (உ0)

வன்னியை முடித்தாய் போற்றி மணிமன்று ணடித்தாய் போற்றி
சென்னியா றேற்றாய் போற்றி சிதடர்பாற் றேற்றாய் போற்றி
சொன்னவில் லெடுத்தாய் போற்றி தோன்மடி யுடுத்தாய் போற்றி
கன்னிமோர் பாகா போற்றி கைலைவா ழேகா போற்றி. (உக)

வேலனைப் பயந்தாய் போற்றி விமலையோ டியைந்தாய் போற்றி
பாலனை யாண்டாய் போற்றி பணியணி பூண்டாய் போற்றி
யாலனை யூர்ந்தாய் போற்றி யாரணந் தேர்ந்தாய் போற்றி
காலனைத் தொலைத்தாய் போற்றி கைலையி னிலைத்தாய் போற்றி. ()

நஞ்சணி கண்டா போற்றி நகைமதித் துண்டா போற்றி
யஞ்செனு முகத்தாய் போற்றி யமரர்செய் மகத்தாய் போற்றி

விஞ்சைமர் திரத்தாய் போற்றி விளங்குதந் திரத்தாய் போற்றி
கஞ்சன்மால் விருப்பா போற்றி கைலைபம் பொருப்பா போற்றி(உ௩)

வேறு.

அந்தர சபையி னடித்தாய் சரணம் மரணொரு மூன்று பொடித்தாய் சரணம், சந்தத மன்பரை யாள்வாய் சரணந் தற்பரை யுமையொடு வாழ்வாய் சரணம், மந்திர ரூபா சரணஞ் சரண மனுமத கோபா சரணஞ் சரணங், கந்தர நீலா சரணஞ் சரணங் கயிலா யபதே சரணஞ் சரணம். (உ௪)

அம்புலி புரியாய் சரணஞ் சரண மாடர வணியாய் சரணஞ் சரண
மும்பர்க ளுதா சரணஞ் சரண மொளிர்தரு பாதா சரணஞ் சரணஞ்
சம்புந டேசா சரணஞ் சரணஞ் சங்கரி நேசா சரணஞ் சரணங்
கம்புனை சடிலா சரணஞ் சரணங் கயிலா யபதே சரணஞ் சரணம். ()

அருவே யுருவே சரணஞ் சரண மமலா விமலா சரணஞ் சரண், மருவே மலரே சரணஞ் சரணம் வடவா லுடையாய் சரணஞ் சரணங், குருவே தருவே சரணஞ் சரணங் குளிர்வா னதியாய் சரணஞ் சரணங், கருவேர் களைவாய் சரணஞ் சரணங் கயிலா யபதே சரணஞ் சரணம். (உ௫)

மதிகா தகியாய் சரணஞ் சரணம் வரதா பயனே சரணஞ் சரணந்
துதிதாண் மலராய் சரணஞ் சரணஞ் சுரபூ சிதனே சரணஞ் சரணந்
ததிதா வெனவா டியவா சரணஞ் சலிலச் சடிலா சரணஞ் சரணங்
கதிதா மதிதா சரணஞ் சரணங் கயிலா யபதே சரணஞ் சரணம். ()

ஆதிப் பொருளே சரணஞ் சரண மையா னனவா சரணஞ் சரணஞ்
சோதிக் கிரியே சரணஞ் சரணஞ் சுகரூ பகரா சரணஞ் சரணம்
வேதச் சிகையே சரணஞ் சரணம் விடமார் களனே சரணஞ் சரணங்
காதிற் குழையாய் சரணஞ் சரணங் கயிலா யபதே சரணஞ் சரணம்.

வேறு.

பொடியணி மார்பா சரணஞ் சரணம் பொன்மலை வில்லாய் சரணஞ் சரணந், துடியணி கையா சரணஞ் சரணஞ் சுந்தர மெய்யா சரணஞ் சரணம், படிபுகழ் பவனே சரணஞ் சரணம் பத்தரு ளத்

தாய் சரணஞ் சரணங், கடிமக் ழிதழித் தொடையூய் சரணங் கயி லா யபதே சரணஞ் சரணம். (௨௯)

வேறு.

அவரவர்க ளிவ்வாறு கவிமாலை தனித்தனியா யன்பிற் சாற்றத், தவளநகை யுமைகோமான் றிருவுளத்தின் மகிழ்கூர்ந்து தவத்தீர் நூங்கட், கெவளவெனி னுந்தோட மிலதாக புண்ணியங்க ளியாவுஞ் சேர்க, விவளவுசெய் யுனையுநிதந் தோத்திரிப்போர் சிந்தனைக ளியாவு முற்ற. (௩௦)

உங்களித யத்தினில்வேட் டனயாவுந் தருதுமவை யுணர்த்தீ ரெ ன்னச், செங்குமுத வாயுமைகோன் றிருவுளம்பற் றியதுணர்ந்து தினைத்துண் டேனும், பங்கமிலாக் கோளமுனி முதலாய பலமுனி வர் பாரின் வீழ்ந்து, சங்கரதுங் காதரகிர் பாகரத யாநிதியே சாற்றக் கேண்மோ. (௩௧)

அடியேங்கள் சிற்றறிவாங் குறைதவிர்த்துப் பேரறிவா மதனை யுள்ள, படியேயெங் கட்குணரு மறிவதனை மலைமகடன் பாகா வே கா, கடியேறு பூங்கடுக்கை வேணியனே கடைக்கணிக்கக் கடவா யெ ன்னத், துடியேறு திருக்கரத்தா னந்தீசர் தமைப்பார்த்துச் சொல்லா நின்றான். (௩௨)

இம்முனிவர்க் கினிமேலெட் டுண்டெனினு மையமிலா தெமது ஞான, மெம்முனிவோர் களுமிவர்கட் கிணையில்லை யெனத்தெளிவா வியம்பு கென்ன, வம்மொழியைச் சிரமேற்கொண் டடியேனு முய்ந் தேனென் றடியிற் றாழ்ந்து, தம்பிருக்கை முனிவரொடுந் தற்பரனார் விடைபெற்றுச் சார்ந்தா ரன்றே. (௩௩)

ஆயிரத்தெட் டரணமெலாங் கடந்துமுதந் கடைவாயி லணுகி யாங்க, ளாயிரத்தெட் டுத்திருக்கான் மண்டபத்திற் சிவகணங்க ளநேகர் சூழ, வாயிரத்தெட் டாகியமந் திரசொரு பனைமனத்து ளாக்கி யன்னாற், காயிரத்தெட் டென்னுமருச் சனைசெய்து முனிவரைப்பா ர்த் தறைவா னந்தி. (௩௪)

சென்மகோ டிகடோறுஞ் சிவதரும மனுவனுவாச் சேர்ந்து மேவு, கணமபரி பாகமுறீஇப் பரகதிக்கு வழிகாட்டுங் கண்ணா கின்

றீர், அன்மயமாகியகண்டத் தண்ணறிரு வருட்குரிய ராணீ ரன்ன தன்மையரா கியவுங்கட் கையமியாதுளதாகிற் சாற்று கிற்பீர். (௩௰௫)

எனநந்தி கேசனருள் வாக்கினிற்றோற் றியவமுத மியாரு முண்டா, ஊனபங்க யங்கடொலா மாதவற்கண் டாலென்ன வலர்ச்சி மேவிப், பனகங்க டரித்தபரா பரனுருவே மெய்ஞ்ஞான பானு வேயிங்: கனமெங்க ளையமெல்லாங் கழன்றனமென் றிவையறவோா கழறாநின்றார். (௩௰௬)

ஆதியிலிவ் வகிலமெலா மண்ணறிரு ளாக்தெண்ணி யாக்குஞான்று, சோதியா கியகைலை முதற்கண்ட தெனப்பெருநா றுணிந்து கூறு, நீதியா கியபுரா ணங்கள்பல பலவாக நிகழ்த்தா நிற்கும்; யாதிதனி னிச்சயமென் றெண்ணுவோா மெனநந்தி யடிகள் கூறும்.

கற்பங்க ளெண்ணிலவாற் கைலையுமெண் ணிலவாமக் கருத்தைநாடிற், சற்பங்க டரித்தபிரா னீரொன்பான் புராணத்திற் சாற்றுநின்ற, சொற்பங்க மாகாமற் சுருதிகளு மவ்வாறே சொல்லா நிற்கு, மற்பங்கொ ளரசருறை யிடங்களெல்லா மரண்மனையென் றுன வாபோல். (௩௰௭)

எம்மறிவு முங்களைப்போன் றிவ்வாறே யையமுற்ற திறைவனோர்ந்து, செம்மையுறு தனதுதிரு வருளாருந் தினகரனாற் றிரட்சியான, மைம்மலியு மனவிருளை யகற்றிமுத்தி நிலைகாட்டு மார்க்கமாக, மெய்ம்மையா கியபரம ரகசியவந் தரங்கமொன்று விளம்பினானே.

முன்னொருகா லத்தில்வரு பொன்னிநதித் தென்பான்மு விருகாதத்தின், மன்னுகடம் பாடவிக்கீ சானதிக்கி லைங்காத வழியிற்காலை, யென்னுமந்த நகர்வடக்கின் முக்காதங் கோதருணந் தினுக்குமேற்காம், பன்னுமிரு காதத்திற் கோளேச மென்னவொரு பதியுண்டாமால். (௪௰)

அன்னதிருக்கோளேசம் பரமரக சியவந்த ரங்கத் தானமென்னுமிந்தத் தலமகிமை யரியயனிந் திரன்முதலா மிமையோ ராலும் பன்னரிது கைலையெனும் பருப்பதத்துக் கிஃததிகம் பாரின் மீது கன்னன்மொழி யுமைக்குமிது கழறிலமால் வாலையெனுங் கருத்தினாலே. (௩௰௧)

## புராணவரலாற்றுச் சருக்கம்.

வேறு.

நந்துலவுங் கடல்புடைசூழ் புவிபுரக்கு நராதிபர்க
ளந்தரங்க மானோர்க்கு மமைச்சர்கட்கு மகத்துரிய
சொந்தமண வாட்டிகட்குந் தோற்றுமற் கருவூல
மூந்தணமாய் வைப்பதுபோல் வைத்தனமத் தலமதனை. (சஉ)

பூமணம்போ னமைப்பிரியாப் பொன்னிமையப் பசுங்கொடிநந்
தோமணியா கியகுமரன் குறியதாட் பெரிய தொந்திச்
சாமியுருத் திரகணத்திற் றலைமைபெற்றோ ரிவர்களுக்கும்
யாமுரைத்தோ மிலைப்பரம ரகசியவத் தலத்தேற்றம். (சங)

ஆதிகயி லாயமென்று மாதிசிதா காயமென்று
மோதுறுமத் தலப்பெருமை யொண்டிகிரி யானறியான்
வேதவியா சனுமறியான் விரிஞ்சன்முத லோரறியார்
சூதமுனி வனுமறியான் சுருதிகளு மறியாவே. (சச)

வேறு.

என்றெனு ளுள்ளத் திருக்குமை யத்தினை
யன்று கூறி யகற்றின னுங்கவை
யின்று நாங்கட் கியம்புவ னியானெனா
நன்று கேட்கென நந்தி யருள்செய்வான் (சரு)

வேறு.

பிறப்பதாற் கதிகொடுக்குஞ் சிலதலங்கள் கண்டதனாற் பெட்பினீயும், இறப்பதாற் கதிகொடுக்குஞ் சிலதலங்க ளினைத்தலா விசைக்கு முத்தி, துறப்பதாற் கதிகொடுக்குஞ் சிலதலங்கள் வசித்தவர்க்குத் துலங்கு முத்தி, குறிப்புடன்கூ றியவிவைக டருந்திருக்கோணேசமது கூறக் கேண்மின். (சசு)

வேறு.

ஈதலாற் றென்னவனாட் டினிற்றலம்பன் னுன்குளவாங்
கோதிதலா மகற்றுவன குணமெலா மீகுவன
சூதமா முனிவேத வியாசனிவ ராற்றுறவோர்க்
கோதியன கேட்கவென விரித்தன்பி னுணர்த்துவனால். (சஎ)

### வேறு.

கருவால சாவுமுயிர்க் கருள்பாண்டிக் கன்னிநுதற் றிலகமென்ன
மருவால வாலமுறுந் தளவுவிரி நறுமணம்வா னெங்கு மோங்குந்
தருவால வாயமருஞ் சங்கரனங் கயற்கண்ணி தலைவன் வாழுந்
திருவால வாயென்னும் பூவுலக சிவலோகந் திகழு மாதோ. (௪௮)

மாப்புடையார் பாப்புடையார் மணியுடையா ரெனுமாலு மறைநான் கோனுங், கோப்புடையா வெண்கமலக் கோதையுடை யூரணனுங் குலவைந் தாருக், தோப்புடையான் முதலோருந் தொலைந்தாலுந் தமதிளமை தொலைவிலாத, மூப்புடையா ராப்புடையார் திருவாப்ப னூர்த்தலமு முன்புண் டாங்கே. (௪௯)

### வேறு.

வரங்குன்றற் கரியவென மதித்திருந்த சூரபன்ம
னுரங்குன்றப் பொருமயிற்கை யொருமுருகன் முதற்றலமாய்ப்
புரங்குன்ற நகைத்தபரி பூரணனே திருவுருவாம்
பரங்குன்றத் திருத்தலமத் திருநாட்டின் பாலாமால். (௫௰)

எவனாலும் பாகனலு மெரியுருவ மான நெற்றிக்
கோவணனு முருவேறாய்க் குணம்வேறா யிருந்து மொன்றா
மாவணம்பற் பலவாயு மான்பாலொன் றாமாபோற்
பூவணன்வாழ் பூவணமப் பொன்னாட்டிற் பொருந்தியதே. (௫௧)

காடகமா நாடகஞ்செய் கண்ணுதலார் கரத்தெடுத்த
வாடகமே ருச்சிலைபி னமையிமைய மலைமகளாம்
பாடகமெல் லடியுமையாள் பாலருந்திப் பாடுதமி
ழேடகமாக் கொண்டதிரு வேடகமந் நாட்டினதே. (௫௨)

பருச்சுழியே யுந்தியல்குல் படவரவே யெனுமடவார்
மருச்சுழியுந் தருமுதலா வகுத்தவெண்பா னன்கிலக்கக்
கருச்சுழியும் வீழாது கரையேற்றுங் கப்பலெனுந்
திருச்சுழியற் றிருத்தலமத் தென்னாட்டிற் கணியாமால். (௫௩)

### வேறு.

மரிச்சாலும் பிறந்தாலும் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலு மானமெல்லா
முரிச்சாலு முடித்தாலு முண்டாலு மொழிந்தாலு முலகத் தாசை

தரிச்சனனலு மலைவனத்திற் சார்ந்தாலு முத்திதரும் தாம்ப்ர பன்னித்
திருச்சாலி வாடீச வேணுவனத் திருத்தலமத் தென்றிக் காமால்.()

வேறு.

மருவிராய் நின்றதுழாய் மாலைமுடி மான்மனித
வருவிரா யிருடிகட்கு மும்பர்கட்கு மிடர்புரியும்
பெருவிரா வணனைவதை பிழைகழியப் பூசனைசெய்
திருவிரா மீசமெனுந் திருத்தலந்தென் றிக்காமால். (௫௫)

வேறு.

சிற்றுலத் திலையுதரத் தகிலாண்ட புவனமெலாஞ் செனிப்பிக் குஞ்சீ
ருற்றுலத் தமுதுண்ணுங் குறும்பலா வீசரிடத் துமைதன் வாக்காற்
பெற்றுலித் தலத்திருக்கப் பெறவேண்டு மெனத்தரணி பீட மான
குற்றுலத் திரிகூடா சலமென்னுந் தென்கைலைக் குன்றங்காமால். ()

வேறு.

தேனப்போர்த் தவளைபடாச் சிவகங்கைச் சிவதரும
தானப்பே ருரிலுக்குச் சண்டதிசைச் சமீபத்தின்
வானப்பே ருராரும் வந்துதினம் வணங்குதிருக்
கானப்பே ரூரென்னுங் கானாக ரமுமவணே. (௫௭)

கனவாயின் மனைமக்கள் களத்திரஞ்சுற் றங்காணி
தினைவாயி லாததனை நித்தமெனத் தடுமாறி
மன......யிற் காயமதில் வரும்பொல்லாங் கினைமாற்றும்
புனவாயிற் றிருத்தலமப் பொன்னாட்டிற் பொலிவுளதே. (௫௮)

வாடானை மறைநான்கும் வகுப்பானை வளைந்தபிறைக்
கோடானை வெளுத்தபன்றிக் கோட்டானைக் குணமிலர்பா
லாடானை மணிமன்று ளாடு....னைப் பூசைபுரிந்
தாடானை முத்திபெற்ற வாடானை யும்மவணே. (௫௯)

வேறு.

மருப்புத்தூ ராடளிகரு மதுவளிக்கு மிதழியங்கான் மதியந் தாங்கக்
கருப்புத்தூ ராந்தரங்க முத்திறைக்கு நத்திரைக்குங் கழனி சூழ
விருப்புத்தூ ராதுழலு மனங்கதுவாப் பரசிவன்வீற் றிருக்குந்தெய்

வத், திருப்புத்தூ ராந்தலமுந் தென்பாண்டித் திருநாட்டிற் சிறப்புற் றோங்கும். (௬0)

கங்கைநா யகனிவனே கைலைநா யகனிவனே கனன்மா னேந்துஞ் செங்கைநா யகனிவனே தில்லைநா யகனிவனே திருமால் வேதன் றங்கணு யகனிவனே தற்பரையாய்ச் சிற்பரையாய்த் தனுவு மான மங்கைநா யகனிவனே யெனும்பரமன் கடோரவெற்பு மன்னு மாங் கண். (௬௧)

இத்தகைய பழமையதாந் திருத்தலம்பன் னுன்குமுல கிரே மூரகச், சத்தகன்னி மலையேபொன் வரையாக நாளுடே சாருந் தீ வா, நித்தியமா கியபூமி யந்தரஞ்சொற் கமுமாங்க ணிலவ லாலே யத்தனுறை பேரண்டத் தினுக்கொருசூக் குமவண்ட மாங்கோ ளேசம். (௬௨)

சகலபுவ னுண்டமதிற் சூக்குமாண் டமதான தலமா மென்றே யகநெகிழன் புடன்கேட்கு முனிவரர்க்கு நந்தீச ரருள வாங்கே மிகமகிழ்க கோளமுனி யெழுந்திறைஞ்சித் துதித்தெங்கள் விமலா வன்ன, மகிமையுறுந் தலங்கோள புரமாமா றுரைக்கவென மகிழ்ந்து கூறும். (௬௩)

வரையிரண்டு சிறகுடைத்தாய்ப் பறந்தென்னப் பறந்துலக மடி யச் செய்யுந், திரிபுரத்தை நகைத்தெரித்தற் காகவும்விண் ணோர்கு ழுவைச் சிறைசெய் துட்டக், கரியவுடற் சூர்குலத்தை வேரோடு மறக்குகனுற் கடித லுக்குஞ், சரியைதவ றிடுங்கொடிய செய்கையிரா வணன்சிரத்தைத் தடித லுக்கும். (௬௪)

மறைநீதி வழியாயந் தரங்கயோ சனைமுடிப்பான் வைத்த தானங் கறைமேவு களத்தினர்க்கு மந்தரங்கத் தானமுமாங் கைலைத்தான மிறையோனை யிலனென்றுங் கன்மமே பலன்கொடுக்கு மென்று மெ ண்ண, நிறைதாரு காவனத்தார் விரதபங்கஞ் செய்துசென்று நிலவு ங்காலை (௬௫)

இலக்குமியோ ரிலக்கரொன்று கினரென்ன மோகினியா யிருக் கு மாலோன், றலப்பெருமை யாகியவந் தரங்கரக சியக்கயிலைத் தல

த்தி வியானு, நிலைக்கவொரு தளிக்கிடந்தா வெனத்திருமெய் யுத் தான நேர்மைத் தென்றியான், சொலப்பரமே சனும்ஙதா குகவெ ளக்கோ ளேசரெனத் தோற்றிச்சென்றான். (௩௬)

அக்கோள்கேட் டதனாலே கோளேச னெனத்திருமா லறைந்த நாம மெக்காலு நின்றதந்தத் தலமகிமை யாவர்களு மியம்பொ ணுதான் மைககாள கண்டர்திரு வருளாலே யாந்தெரிந்த வாறு சொல்வே ழுக்காலங் களுமுணரு மாதவத்தீர் கேண்மினென மொழிய லுற்றான்.

வேறு.

பரவைக ளேழும் போனற பத்திஞே டொன் புராணங்
கரவில்பாற் கடலே போலுங் காந்தமக் காந்தத் துள்ளே
திரமுறு சனற்கு மார சங்கிதை யமுதஞ் சேர்ந்து
விரவிய சுவையாங் கன்னி விலங்கலின் சரிதை மாதோ. (௩௮)

வேறு.

அறிவைந்துங் கரோபுரத் தரன்சரிதை கேட்பதனி லழுத்திச் சிந்தை, பிறிவின்றி மவுனமதாய்த் தீட்டியவோ வியமென்னும் பெற் றி யாகி, மறியொன்று திருக்கரத்துச் சிவதருமே சுரன்வடிவை மன த்து ளாக்கி, வெறியுண்ட சுரும்பரெனக் களிகூர்ந்து கேண்மினென விளம்பு கின்றான். (௩௯)

புராணவரலாற்றுச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௨0௭.

---

# தலவிசேடம்.

---

பூமியினிற் றேசமைம்பா னும்பாண் டியதேசம் புண்ய தேச மாமதனிற் சிவதலம நேகமுள வாம்பதினுன் கதிக மாகுந் தோழில்பதி னுன்கினுக்குட் டென்பிரான் மலையதுவே தோற்று மூல மாமதனிற் கன்னிவரைச் சிவதரும புரமெவைக்கு மதிக மாமால். ()

எவ்வாறு மெனிற்பூமி யந்தரஞ்சொர்க் கமுமிதுபோ லிருக்கு மாங்கே, யவ்வாறு யினும்பரம னந்தரங்கத் தானமென வறைத லானுஞ், செவ்வானக் கடோரகிரி யெனுங்கயிலைக் கிதுமூலந் தெளிந்து கொண்மி,னிவ்வாறு கியமகிமை யுள்ளதல மூவுலகத் தினிலு மின்றே.

காசிதிருக் கேதாரங் கயிலைகா ளத்திதில்லை கமலை காஞ்சி
பேசருணை விருத்தகிரி சீகாழி மாயூரம் பெருவெண் ணாவ்
லாசிலிடை மருதாலங் காடுதிரு மதுரைமுத லான வெல்லா
மீசனொரு காரணத்தா லிருந்ததல மிஃதியல்பா யிருக்குந் தானம். ()

வேறு.

அப்பவனி யனல்காலம் பரமழியு மூழியினு
மிப்பெரிய தலமிருப்ப தெங்ஙனமென் றியம்புவிரேன்
முப்புரமு நீறுங்கான் மூவரெவ்வா றிருந்தனரோ
வப்படியித் திருத்தலமு மூழியினு மழியாதாம். (௪)

அத்தமுறு தத்துவங்க ளாறாறு மொடுங்கிடுநாட்
சுத்தமா யையினடங்கு மெனப்புகலுஞ் சுருதிகளுக்
கத்தமாய்க் கரதலவா மலகமெனக் காட்டுறுமா
லித்தலமற் றெத்தலமு மிறுதியிலீங் கொடுங்குமெனல். (௫)

பூருவகா லந்தொடங்கிச் சிவதரும புரமென்றுஞ்
சீரியதா கியபெருமைத் திருக்கோள புரமென்று
நாரியர்மற் றெழுவர்களாற் கன்னிமா நகரென்றும்
பாரினியா வருமுரைப்பர் பகரவினைப் பற்றறுமே. (௬)

வேறு.

அந்தரஞ் சுவர்க்கம் பூமி யாம்புவ னங்க ளில
கந்தர னொடுக்குங் காலக் காரண வுருவ மாகு
மிந்தமா நகருட் டங்கு மென்பதற் குரியசான்றிச்
சுந்தர நகர மன்றோ வப்பெயர் துலங்கு மின்றும். (௭)

வேறு.

ஒருருவு மிலாதாரை யிருமுனிவர் பலவுருவா யுகங்க ளெண்ணும்,
பாருருவும் புனலுருவு மனலுருவுங் காலுருவும் பரந்த வானின்

சீருருவு மியமானன் றிருவுருவும் பரிதிமதி சேர்ந்த வெட்டுப்
பேருருவ மாய்நினைந்து பூசிப்ப தித்தலத்தின் பெருமை யன்றோ.

## வேறு.

ஓரூரின் மூன்றுலகு நாளுடு முளவாகுஞ்
சீரூரெப் புவனத்துந் தெரிப்பரிதா லதற்கேற்பப்
பாரூரும் பதிகடொறு மொருவடிவாம் பராபரையு
மீரூருஞ் சடையாரு மூன்றுருவாய் நின்றனரால். (௯)

தொனித்தவளை படாச்சுனையுந் தொனித்தவளை படுஞ்சுனையுங்
கனித்தநெல்லி யடிமுளைத்த கரும்பனைய சிவக்குறியு
மனித்தர்கடே வுருவாகுங் கோளபுர மாநகருஞ்
சனித்திருந்துந் தெரியாரேற் சிதடரினுஞ் சிதடர்களே. (௰)

கலன்களுக்குண் மகுடமென நதிகளுக்குட் கங்கையெனக்
குலங்களுக்குட் பனவரென முனிவரர்க்குட் கும்பனெனப்
பலங்களுக்குண் முத்தியெனப் பசுவினுக்குட் டேனுவெனத்
தலங்களுக்குட் சிவதரும புரமதிகஞ் சாற்றிடினே. (௧௧)

## வேறு.

கன்னிவரைச் சிவதரும புரத்திணையா மொருதலமுங் கனிந்த நெல்லி, தன்னிழலிற் றவளைபடாச் சுனைக்கிணையாந் தீர்த்தமுமத் தருக்கீழ்ச் சோதி, மின்னுசிவ தருமேசற் கிணையாமோர் சிவக்குறியுஞ் சுருட்டு முந்நீர், நன்னிலத்தும் பொன்னிலத்து மெந்நிலத்து மிலையுண்மை நவிற்றி னேமால். (௧௨)

## வேறு.

அத்தலத்தின் முதற்கற்பத் தரியதவக் ககோளமுனி
சத்தமா தர்களரிய தமிழ்முனிவன் புலத்தியன்மா
லொத்தபதஞ் சலிவடுக னொருமுருகன் மறைக்கிழவ
னத்திமுக னதியர்க ளருந்தவஞ்செய் தமர்குவரால். (௧௩)

குயின்மலையு மியாழின்மொழிக் குறமான்குஞ் சரியோடு
பயின்மலையுங் குறுகநிமிர் பன்னிரண்டு திருப்புயத்தோன்

வெயின்மதிதீ விழியானை யிவண்பரவி விற்றிருக்கு
*மயின்மலையு மிக்கன்னி மாநகர்க்குத் தெனுதாமால். (கச)

## வேறு

முன்புகிரே தாயுகத்தி னுன்மறையுங் கீசகமா முளைத்து நிற்கும், பின்புதிரே தாயுகத்தி னுலேழா கமங்களும்பிப் பிலமா நிற்கு மென்பர்கள்மூன் ருமுகத்தி லீரொன்பான் புராணமுமீரம் பெண்ணை யாகு, மின்புறுநான் காமுகத்தி னுரணனு மலகமென, விருக்கின்ருனே. (கரு)

முனிவரெலாந் தருவாயுஞ் செடியாயுங் கொடியாயு முளைத்து நிற்பர், பனிவரைமேற் குன்றுகளாய்ப் பதினெண்சித் தாதிகளும் பரவி நிற்பர், கனிகாய்பூ விலைகவடாய்த் தருக்கடோறுங் கடவுளர்கள் கலந்து நிற்பர், புனிதவிரு டிகள்கருட கந்தருவர் பறவைகளாய்ப் பொருந்து வாரால். (கசா)

ஒருகடிகைப் போதிண்டு வதிந்தவர்கள் பொன்னுலகத் தும்பராவ, ரிருகடிகைப் போதிதனி லிருந்தவரிந் திரராவ ரிரண்டின் மேலா, வருகடிகை வசித்தவர்கண் மலரோன்சத் தியவுலகில் வாழ்வர் நான்கு, தருகடிகை வசித்தோர்கள் சத்தியலோ கத்தரசாய்ச் சார்வரன்றே. (கஎ)

நாளொன்றத் தலத்திருக்கின் வைகுந்த மாநகர்க்கு நாத னுவர் வேளன்று படவிழித்தோன் கயிலையரத் தலத்திருநாண் மேவினோர்கள், கோளொன்ரு வகைமூன்று நாளிருக்கிற் சிவனுருவங் கொள்வர் திண்ணங், காளவிழி யெழுமாதர் தவஞ்செயிதில் நாளைந்து கழித்தார் முத்தர். (கஅ)

திருக்கோள புரமென்று சிந்தித்தோர் சாலோகஞ் சேர்வர் நாளுந், திருக்கோள புரமென்று செப்பினோர் சாமீபஞ் சேர்ந்து வாழ்வர், திருக்கோள புரக்கன்னி வரைவலமா வருவோர்சா ரூபஞ் சேர்வர், திருக்கோள புரத்திருந்தார் சிவன்முத்த ராவரிது திண்ண மாமால். (கக)

---

மயின்மலை-மயூரகிரி குன்றக்குடி.

வேறு.

அருந்துதலா குதியாகு மனந்தல்சிவ யோகமதாந்
திருந்தியவுற் சபநடத்த றிருக்கோயில் வலம்வருதன்
மருந்துணவா ராதனமா மடவார்க ளுடன்கூடிப்
பொருந்துதலத் துவிதமுத்தி பொற்கோளே சத்தலத்தில். (௨0)

வேறு.

தானங்கள் சோடசமும் யாகங்கள் சோடசமுந் தரும்பே றெல்லாங்
கானங்க ளரங்குதொறு நெருங்குதிருக் கோளபுரங் கண்டா லெய்து
மீனங்கள் சிறிதுமிலா நூல்கள்பல வாய்ந்திடினு மெழிற்கோ ளேச
ஞானங்கொ டிருநகரங் காணுருக் கிருவினையு நசியா வன்றே. (௨௧)

தாத்திரிப்பான் முளைத்தசிவ தருமேசர் கோளேசந் தன்னிற் சைவ
ராத்திரியில் வசித்தவர்கள் கோத்திரங்கண் மூவேழு மெய்து முத்தி
யாத்திரைபோம் பொழுதுதிருக் கோளேச நினைவின்றி யடைந்தாரே
னுந், தீர்த்தமறு பானுறு கோடியுமா டியபலன்சித் திக்கு மாதோ.

வேறு.

அன்னிய தலங்க டம்மிற் சாந்திரா யணநூல் சொன்ன
நன்னிய மங்க ளோடு நடாத்துகின் றோர்கட் கந்நூல்
பன்னிய பலன்க ளின்ன பதியினின் மூன்று போதுஞ்
செந்நெலன் னம்பா லோடு தெவிட்டவுண் பவர்கட் கெய்தும்.

வேறு.

அன்னதா னங்கள்பல வந்தணர்கட் கீந்தபல னந்த மூதூர், தன்
னின்மே வியதவத்தோ ரொருவனுக்குக் கொடுத்தபலன் றனக்கொவ்
வாது, சொன்னதா னத்துடன்வத் திரதானம் பூதானஞ் சுரபி தா
னங், கன்னிகா தானமதிற் செய்பவர்க்கு வரும்பலன்கள் கணிக்கொ
ணாவால். (௨௩)

திருவாரூர் திருவானைக் காதிருவ ணாமலைமெ தன் றிருக்கா' ளத்தி
மருவாருந் திருத்தில்லை மணிமன்று வெள்ளிமன்று வன்ன மன்று
பெரிதாந்தாம் பிரமன்று முதலான தலத்திருந்தோர் பெரும்பே

வன்னமன்று-சித்திரசபை. இது திருக்குற்றாலத்துள்ளது.

6

றிங்ஙு, ஞெருபோது வசித்தவர்கட் குறுமென்று விதன்பெருமை யுரைக்கற் பாற்றே. (உரு)

கொலைபுரிந்தோர் களவுசெய்தோர் குருமனைவி தனைப்புணர்ந் தோர் கோவைக் கொன்றோர், நிலைதவறுங் கள்ளுண்டோர் பொய்ப கர்ந்தோர் வேதநிந்தை நிகழ்த்தி னோர்கள், கலைகுலைந்த கற்புடைமா தரைக்கண்டோர் பிறர்பொருளைக் கவர்ந்தோர் செம்பொன், மலைசிலை யா வளைத்தவர்வாழ் கோளபுர மெனிற்றேட மருவி டாதே. (உசு)

வேறு.

அத்தலத் திருப்போர் மற்றைய தலத்தி லமர்பவர் தமைநிகளைந் தாலு, முத்தியெய் துவர்கண் மற்றைய தலத்தின் மூதறி வுடையரா யிருந்து, மத்தனக் கோள புரநினை யாரே லறிவுடை யோரவ ரல்லர், சித்தமா சுடைய ரெனினுமப் பொய்யாச் சிவபுர நினைந்தவர் தேவர்

வேறு.

அத்திருமா நகரின்பே ராமலக வனங்கோ ளபுரஞ் சிவன்
முத்திபுரங் கோளபுரஞ் சிவதரும புரமகத்ய புலத்ய மூதூர்
சத்தகன்னி புரமாதி கைலாய மந்தரங்கத் தலமுன் பான
சுத்தசிதா காசமென வேதுவிறுற் றெரிந்துரைப்பர் சுருதி வல்லோர்.

அத்தலத்தின் றிருப்பெயர்பன் னென்றிலொன்றே னும்பகர் வோ ரறையு முந்நீர், மத்தியிற்றங் கியவுலக முழுவதுஞ்செங் கோல் செலுத்து மன்ன ராகிப்,புத்தமுதுண் பவர்கள்பொன்னாட் டரசாகிச் சிலகாலம் போகமூழ்கிச், சத்தியலோ கத்தரசாய்த் தண்டுளாய் புனை மாலாய்த் தங்கு வாரே. (உகூ)

அத்தலத்தின் மகிமைசொல வாதிசே டனுக்கும்புக மனந்தஞ் செல்லு, நத்தருக்கும் விரிந்தநளி னத்தருக்கு முரைக்கவன்னா நாமேபோ தாவாஞ், சித்தருக்கு முனிவருக்கு மவ்வாறே யமர்வரெ னச்செப்பு நீரார், முத்தருக்கும் பத்தருக்கு மத்தருக்கு மத்தான மூ லமன்றே. (௩0)

தலவிசேட முற்றிற்று.

ஆக விருத்தம் உ௩எ,

# தீர்த்தவிசேடம்

இவ்விதமாத் தலமகிமை யுரைத்தநந்தி கேசரைப்பார்த் திருடி வேந்தர், *பவ்வியமா யட்டாங்க பஞ்சாங்க மாய்ப்பணிந்து பரசி னேடு, நவ்வியணி திருக்கரத்தார் நாளுட்டுத் தலமகிமை நவிற்றுந் தோறுந், திவ்வியமா னதுதீர்த்தச் சிறப்பினையு மருள்கவெனச் செப்ப லுற்றார். (க)

புலப்பகைநீக் கியமுனிவீர் கேட்டபொழு தேமூன்றுப் புகல கின்ற, மலப்பகைநீக் கிடுமுத்தி வழிகாட்டு மத்தீர்த்தம் வருப்பாம் வெண்ணித், திலப்பகையா கியமுறுவற் கற்பினெழு மாதர்தவந் திருந்தச் செய்யக், குலப்பெரிய கங்கைநதி தவளேபடாச் சுனையாகிக் குறுகித் தோன்றும். (உ)

கும்பமுனி வரன்பொன்னி நதியொடுதாம் பிரபன்னி கொணர்ந் தான் றேவை, நம்புபுலத் தியன்கோதா வரிகொணர்ந்தான் பதஞ் சலியந் நாக நாட்டி, னும்பர்புகழ் பாதாள கங்கைகொணர்ந் தான்மாத ரோரேழ் பேரு, மெம்பெருமான் சடாமகுடத் திருந்தகங்கை கொணர்ந்தனர்பின் பியம்பக் கேண்மின். (ங)

முனிவரெழு வருமியமுனை நதிகொணர்ந்தா ரிருசுடரா மூர்த்தி மான்கள், புனிதநருமதைகொணர்ந்தார் புழைக்கைமுகன் கடலாறும் புகுதச் செய்தான், செனியசர வணப்பொய்கை யறுமுகவன் கொணர்ந்தனனத் திருமால் வேத, னினியசங்குத் தாமரைதீர்த் தங் கொணர்ந்தார் சுனைவடிவா மிவைக ளெல்லாம். (ச)

## வேறு.

மற்றைய முனிவீர் சித்தர் வானவர் கண்ட தீர்த்த
மிற்றென வெண்ணற் பாற்றே விவற்றினோர் தீர்த்த மேனுஞ்
சற்றென மூழ்கப் பெற்றோர் தமதுபாக் கியத்தை யெண்கண்
பெற்றவ னாலுஞ் சொல்லப் பெரியகற் பங்கள் வேண்டும். (ரு)

---

பவ்வியம்-அடக்கம்.

## வேறு.

இப்பெருமைத் தீர்த்தத்தி லொருதீர்த்தத் தேனுமினி தெய்தி யாடி, யப்பணிசெஞ் சடைக்கோளே சருக்கமடே கம்புரிவித் தவர்கள் சுற்ற, மெய்ப்புவனங் களிலிருந்த தென்னினும்வெள் ளிக்கயிலை யெய்தி யங்க, ணுைப்புயர்வில் லாதவொரு வன்னுருவம் பெறுவரிஃ துண்மை யாமால். (சா)

## வேறு.

அத்தடங் களினீ ராடி யஞ்செழுத் தோதிப் பூதி
யுத்தம வக்க மாலை யுடம்பெலா மணிந்தன் போடு
சுத்தமெய்ஞ் ஞான னந்தச் சோதியை நினைந்தார்ச் சிக்கின்
மத்தமு மதியுஞ் சூடி மானுரு வடைந்து வாழ்வார். (எ)

## வேறு.

தென்புலத்தோர் தமைக்குறித்தத் தவளேபடாச் சுனேக்கரையிற் சிராத்தஞ் செய்யின், முன்புதங்கள் குலத்திருந்த மூவெழுசுற் றத்தவரு முத்தி சேர்வ, ரன்புடன்சோ டசதானம் யாகசோ டசமனந்த மாற்றும் பேறு, பொன்பிறங்கு மத்தடத்திற் சிவபூசை யொருபோது புரிதற் கொவ்வா. (அ)

## வேறு.

சென்மகோ டிகளிற் செய்த செபதப முதலா வுள்ள
நன்மைக ளநேகஞ் சேர்ந்து நாடொறும் வளர்ந்து நித்தத்
தன்மையைத் தெரிந்த ளித்துச் சார்பற விட்ட சுத்த
நின்மலர்க் கிந்தத் தீர்த்தம் படிந்திட நினைவுண் டாமால். (கூ)

## வேறு.

செங்கதிரோன் வெண்கதிரை விழுங்குதின மிருகதிரைச் சினந்தங் காந்து, பொங்கரவம் விழுங்குதினம் விதிபாத மதிப்பிறப்பிப் புனலின் மூழ்கிக், கங்கை சடைக் கணிந்தவர்பூ சனைதான தருமங்கள் கருதிச் செய்யி, னங்கதிஞெனன் றுக்கனந்தங் கோடிமடங் கதிகமதா மறிந்து கொண்மின். (ய)

மேடமதி நிறைதிங்க ளிடபத்தின் விசாகமக மிதுனத் திங்க
ளாடிமதி பூரமா வணியவிட்டம் புரட்டாசி யதனி லொன்பான்

கூடிரவைப் பசிகந்த சட்டிகார்த் திகைசோம வாரங் கூன்விற்
றேடுமோ திரைமகரம் பூசமர ணிசிமாசி சேன்மா னேறே. (கக)

இந்நாளாமியமதிவி சேடத்தி னத்தீர்த்த மெய்தி மூழ்கின்
முன்னுளிற் கோடிசன்மத் தியற்றியபா வங்களொலா முடுகி யோடு
முந்நீர்வா வியைத்தீண்டி னள்ளியுணி ஞசமிக்கி னன்பிற் காணிற்
பனனுளுஞ் சரியைகிரி யாயோகஞ் செய்தபலன் பலவுண் டாமால்.()

இத்தகைய தீர்த்தத்துட் சிவகங்கை நெல்லியடி யிருக்குந் தீர்த்த, நத்தரற்றுந் தவளைபடாச் சுனைகோ ளகத்தீர்த்த நற்றேன் றீர்த்தஞ், சத்தகன்னி மார்தீர்த்தஞ் சிவதரும தீர்த்தமெனச் சாற்றுவாரா, லத்தீர்த்த நாமமொன்றை யறைந்தாலுந் தீர்த்தமெலா மாடும் பேறும். (கஉ)

அருந்தத்து ளதிகநவ நிதியிமையோர்க் கதிகமர ணய்ந்த சந்த விருத்தத்துட் டிருப்புகழ்நல் வேதியர்க்குட் டீக்கதர்பண் விளங்கு சுத்த, நிருத்தத்து ளகமார்க்க நீதத்துண் மனுநீதி நிலவு பூமேற், றிருத்தத்துட் சிவகங்கைத் தவளைபடாச் சுனையதிகந் தெரிகு வீரால்.

வேறு.

எனப்புகலுஞ் சூதமா முனியை நோக்கி யிருவினையின் றொடக் கறுத்தவிருடி வேந்தர், மனப்பெரிய பூங்கமலா சனத்தின் மீது மாதொருபா கனையிருத்தி மகிழ்ச்சி கூர்வோய், சுனைக்குமுனந் தவளைபடா தென்று கூறுந் தொடர்பெவன்சாற் றுகவென்னச் சுருதி நான்கு, மனத்தவன்போற் றெரிக்கவல்லீர் கேண்மி னென்ன வதன்மகிமையனைத்தினையு மறையா நின்றான். (கரு)

வேறு.

கனந்தருபா கீரதியுந் திங்களும்பூங் கடுக்கைக் கண்ணியும்வேணியிற்றுலங்கக் கையின்மான் மழுவும், புனைந்துபுலி யதளுடுத்துக் கவுரியுமோர் பாங்கர்ப் பொருந்தவீற் றிருந்தருளும் பொலிவனைத்துங் கண்டு, தினந்தொறுமா லயன்முதலாந் தேவர்குழா மெல்லாந் திருக்கயிலை முதல்வர்பதந் தெரிசிப்பான் செலுங்கா, லனங்கனுமுன் சிக

ண்டிமுதல் வாகனத்தே வரும்வந் தவனடியைத் தொழுதிறைஞ்சி யு
ணுகிநிற்குங் காலை. (கசா)

உயர்ச்சிதரு மூவணைவர சினைநோக்கி யொருநா ளுமைபாகன்
சிரத்திருக்கு முரகவேந் துரைக்கு, மயர்ச்சியிலா தேன்கருடா சுக
மோவென் ளுேத வரமிருக்கு மிடத்திருந்தாற் சுகங்குறையின் றெ
ன்றான், புயற்சடில னஃதறிந்திங் கிருத்தலொழி பூமேற் புனலரவா
குதியெனவாய் புதைத்திறைஞ்சி நாயேன், றுயர்ச்சியகல் வெங்ங்
னெனக் கோளபுரத் திருக்கிற் றொலையுமெனத் தனதுதிரு வாய்ம
லர்ந்து சொன்னான். (கஎ)

கட்செவியோ னதுகேட்டுக் கண்ணீரா றுகிக் கைலைவரை சூழ்
ந்துதாழ்ந் தறுகாலி னோடும், விட்புலத்திற் செல்லுமுடி மேருவின்
றென் பாலாய் விண்ணுறு சூடிதிருத் தலங்களெலாந் தொழுது, தட்
பநதி யுங்கானுங் கிரிபலவுங் கடந்து தரணிமான் முகத்தெய்வத் தா
மரை போல் விளங்கும், பட்குலவு கழனிவிளை தருதிருக்கோ ளேச
ப் பதிசூழ்ந்தங் குளதீர்த்தம் பணியரசன் படிந்தான். (கஅ)

பூமியினு மந்தரத்துஞ் சுவர்க்கத்து மிருக்கும் பொய்யாதா சி
வதருமர் கோளேசர்ப் போற்றி, வாமமர கதவல்லி சிவகாம வல்லி
வையகம்போற் றுவுடைத்தாய் வல்லிபதம் வணங்கிக், காமியந்தன்
மார்த்தமோக் கத்தினுக்கும் வித்தாங் கங்கைநதித் தவளைபடாச் சு
னைத்திருத்தக் கரைமே, னேமியங்குன் றெனவுடலை வளைத்துமணிச்
சிரமே னிமிர்த்திரவி யினைநோக்கி நெடிதுதவஞ் செயுங்கால். (கக)

வேறு.

ஒருவாத வுதரவன லவித்தற் காக வுறுசிவ ராசிமுத லுயர்
தென் ளுகம், வருகாலு முணவின்றி யுறையுங் காலை மலர்ச்சுனையின்
மண்டுகங்கள் வதித லோக்கிக், குருகாவுஞ் செயலினையுங் குறித்தந்
தோவிக் கொலைமது விழிகாணக் கூடிற் றேயென், றுருகாநின் றர
னையுள்ளத் துன்ன வாங்க ணொருவாக்கந் தரத்தினின் றுதித்த
தன்றே. (உய)

வேறு.

நஞ்சடைக்கு மணியான நஞ்சடைக்கு மேயிற்றாய் நளினமலர்த்
தீர்த்தமிது நமது கங்கை யதனல், விஞ்சுதொனித் தவளையின்று மு

கலிதிலில் லாமல் விலக்கிடு மனத்துயர்நீ விடுமதிவெண் சிறைப்பா, வஞ்சமரு வித்திருத்தந் தவளைபடாச் சுனையென் றமர்கனின்சா பமுநீ ங்க வருள்புரிந்தோ மெனச்செங், கஞ்சமலர்ச் சரணிறைஞ்சத் திரு க்கரத்தாற் சிரமேற் கலைமதியோ டிருத்திபெங்குங் கலந்தனன் கோ ளேசன். (உக)

வேறு

அன்றமுத வித்திருத்தந் தவளைபடாத் திருச்சுனைப்பே ரடைந் தநாமா, லென்றமுனி வரர்க்கறியத் திருக்கயிலை வரையினந்தி யிசை த்தா னென்னத், துன்றுமைமி சாரணியந் துலங்குமிரு டிகட்குயர்ந்த சூதன் கூற, நன்றுநன்றென் றதிசயித்துக் கரமுகிழ்த்துத் துதிகள் பல நவிற்றி னரால்.

தீர்த்த விசேட முற்றிற்று.

ஆகவிருத்தம் உருக.

---

# மூர்த்தி விசேடம்.

இவ்வண்ணந் தலப்பெருமை தீர்த்தத்தின் மகிமைதனை யிசைத் தோ மேருச், செவ்வண்ணச் சிலையார்வாழ் திருக்கயிலைக் காவனந்தி திருத்தாள் போற்றி, மைவண்ண மணிமிடற்றுச் சிவதருமேச் சுரன் பெருமைவகுப்பா மென்ன, வைவண்ண மலர்வாழி யிகலகற்று முனி வோர்கட் கருள்வ தானன். (க)

அருள்வடிவா யாமலகத் தருக்கீழாய் முளைத்தெழுந்த வமுத லிங்கப், பெருமைதான் மூவர்கட்கும் பேசரிதே லியாம்பேசல் பேத மைத்தா, மருமலிபூங் கடுக்கையணி சிவதருமேச் சுரனருளால் வகு க்கலாமென், றொருமையினு லுரைக்கலுற்றே னிருமையினும் பெ ருமைநமக் குறுக வென்றே. (உ)

வேறு.

சத்த கோடிமா மந்திரந் தம்முளே சிவ
னைத்தவைந்தெழுத் தோமெனு மக்கரத் துள்ளாய்
நித்த மாயமர்ந் திருத்தல்போ லெங்கணு நிறைந்த
சுத்த நாதன்னியஞ் சிவதன்மேச் சுரனெனத் துலங்கும் (ங)

அரிய தாஞ்சிவ தருமமென் றுரணை நானகுந்
தெரிய வோதிய தித்தலங் குறித்தென தெளியக்
கரிய கந்தரக் கசோளநா யகனெனுங் கடவுட்
குரிய நாமமுஞ் சிவதன்மேச் சுரனென வோங்கும். (ச)

புண்ணி யத்தினுட் சிவதன்மம் பெரிதெனப் புகன்ற
வண்ண லேதிரு வாமல கத்தின்கீ ழுமுத
வண்ண மாகிய சிவலிங்க வடிவமாய் முளைத்து
நண்ணு மாதவ ரிதயதா மரைமிசை நடிக்கும். (ரு)

சத்த மாகிய பிரபஞ்ச மிங்ஙனந் தரலா
லத்த மாகிய பிரபஞ்சம் பின்பென்ப தியார்க்கு
மொத்த தேயத ஞலிந்த விலிங்கமே யுலகின்
வித்த தாகுமென் றறிமின்கள் வேதவே தியரே. (சா)

மூவ கைப்படும் வடிவமாய் மூவகை யுயிர்க்கு
மூவ கைப்பிர வஞ்சமாய்த் தாமுமூன் றுருவாய்
மூவ கைப்படுந் தத்துவ மாகிமுக் குணமாய்
மூவ கைப்படு மவத்தையாய் மூன்றிடத் தமரும். (எ)

இன்ன தாம்பதார்த் தத்திரை யங்களை யியம்பு
மன்ன வாகம மிருபதோ டெட்டுமா மலக
முன்ன ராகிய சிவதன்மேச் சுரன்சொலாய் முனிவோர்
பன்னு நான்மறை யின்னமுந் தனித்தனி பகரும். (அ)

வேறு.

காசியினிற் சிவலிங்கஞ் சுயம்புருவாய் முளைப்பதற்குக் காணும் வித்தா, மாசினியிற் பலகனியு மக்கனிக்குட் பலசுளையு மமர்ந்த போலுந், தேசுடைய வொருதீபத் திகிடயினின்றும் பலதீபஞ் செனித்தாற் போலும். பேசுசிவ தருமேச சிவ்லிங்கத் திடத்தினின்றும் பெருகுங் கோடி. (கூ)

சிவதருமே சுரனென்ன வொருதரமுச் சரிக்கினவர் தேவ ராவ தவமுடனே யிரண்டுதர முச்சரித்தோர் சதுமுகவன் றனே யாவர், கவனமுடன் மூன்றுதர முச்சரித்தோர் செங்கமலக் கண்ண

த்வர்க பவமகல நான்குதர முச்சரித்தோ ருருத்திரர்தம் பத்தங் கொள் வாரே. (௰)

சிவதருமேச் சுரனென்றாற் பஞ்சமா பாதகங்க டீர்ந்து போகுஞ், சிவதருமேச் சுரனென்று லைந்தெழுத்தைக் கோடியுருச் செபிக்கும் பேறுஞ், சிவதருமேச் சுரனென்று லநேகசன்மங் களிற்புரிந்த தீமை நீங்குஞ், சிவதருமேச் சுரனென்று லட்டமா சித்திகளுஞ் சேருந் தானே. (௧௧)

தவளைபடாச் சுனைக்குணபா னெல்லியடி முளைத்ததனி மருந்தைக் கண்டாற், பவளமால் வரையுருவுங் கண்மூன்றுங் கரநான்கும் பயின்று வாழ்வார், கவளமா கயமுரித்த கணேசற் றொழுதுமெனக் கருதினாலுங், குவளைவிழிப் பவளவிதழ்த் தவளமக ளவர்நாவிற் குடிகொள் வாளால். (௧௨)

வேறு.

ஆமலகத் தமர்சிவதன் மேசனென வதுகேட்டார்
சோமசூ ரியச்சுடர்முன் றொலைகின்ற விருளெனவு
மோமெனுமந் திரவொலியா லோடுபிராக் கதரெனவுந்
தீமையுறு பாவமெலாஞ் சிதைந்தோடத் திகழுவரால். (௧௩)

ஆறுகா லமுநெல்லி யடிமுளைத்த சிவக்கொழுந்தை
யூறுகா தலினோடு முண்மையுடன் பணிவோர்க்குச்
சீறுகா லனுமில்லை தேகத்திற் பிணியில்லை
பேறெலாமவர்க்குண்டு பேரின்ப மவர்க்குளதே. (௧௪)

வேறு.

இச்சிவனுக் கெண்ணெய்நெல்லி மாமஞ்சள் பாறயிர்நெய் யிளநீர் கன்னல், நச்சுமெனு மிச்சைசநரந் தம்பலா மாவாழை நறும்பலங்கள், மெச்சுப்தஞ் சாந்திமீ றுயாட்டி விரைத்தாமம் விளங்கச் சூட்டிப், பச்சரிசி யடிசிலொடு பண்ணியங்க ணிவேதிப்போர் பாரர்ள் வாரே. (௰௫)

திருப்பணிகள் செய்வோர்கள் செய்விப்போர் பரமனடி சேர்ந்து வாழ்வார், மருப்பயினர் தனவனங்கள் வைத்தவர்கண் மால்

பதத்தின் மருவி வாழ்வார், விருப்பமுடன் கட்டளைவைத் திருப்பலி ர்க ளெற்றிவிழி மேவி வாழ்வார், சருப்பமணி வான்கோயி லலகிடு வோர் சசிதழுவுந தலைவ ஞவார். (கசு)

திருவிளக்குத் திருமாலை திருப்பரிவட் டந்தூபந் தீபக் கால்கள் பெருவிளக்க மாந்திருமஞ் சனக்குடங்கள் சுருட்டிகொடி பெருமே ற் கட்டி, கருவிபல கொடுசுவர்க்கக் கவின்காட்டும் புனைதிருத்தேர் கதிர்ப்பல் லக்குத், தருபவர்கள் வாகனங்கள் சமைத்தளிப்போர் திரு க்கயிலை தன்னில் வாழ்வார். (கஎ)

ஆட்டைவிசே டத்திருநாண் மாதவிசே டத்திருநா ளன்பிற் செய்வோர், சேட்டிளந்திங் களைபபுனைநதோ ராகுவார் தெப்பவிழா த் திருத்தி னோர்க, ளுட்டையெலா மொருகுடைக்கீ ழாள்வர்பல கேத்திரங்க ளல்கு வோர்கள், வீட்டையளிப் போனருள்பெற் றள வாத பேரின்ப மேவி வாழ்வார். (கஅ)

பாலாட்டப் பசுக்கொடுத்தோர் பல்லியங்கண் முழக்குவித் தோர் பசுங்கொம் பன்ன, சேலாட்டும் விழியர்நடஞ் செயப்பள்ளி யறைவிழாத் திருந்தச் செய்தோர், தாலாட்டுப் புரிவித்தோர் பின்ன லொடு கோலாட்டந் தனைச்செய் வித்தோர், காலாட்டுங் கவரிகுடை கசோளேசர்க் களித்தவர்கள் கடவு ளாவார். (கக)

இச்சிவதன் மேசருக்குச் செய்புமுப சாரமெலா மீரே ழான, முச்சகத்தி லுள்ளசிவ மூர்த்திகட்கெல் லாஞ்செய்து முடித்த பேறு, நிச்சநிரா லம்பசுயம் பிரகாச சாட்குணிய நிறையா னந்தம், வைச்சிரு க்கும் பழம்பொருளே பெருங்கருணை வடிவாகி வந்த தாலே. (உ௰)

அட்டாங்க பஞ்சாங்க மாய்ப்பணிவோர் வலம்வருவோ ரரு ளைல் லிக்கீழ்க், கட்டாங்கு மலரிறைப்போர் கன்னிவரை யைச்சூழ் வோர் கவிதை சொல்வோ, ரெட்டாங்கு மளவெனிலு முவன்புகழை விரிப்போர்க ளிவர்க ளெல்லா, முட்டாங்கு மலநீங்கி யும்பருமிம் பரு ம்வாழ்வ துண்மை யுண்மை. (உக)

வேறு.

நவநிதிக்குட் சங்கநிதி பதுமநிதி நவமணியிற்
சிவணுமா ணிக்கமொடு வச்சிரங்கள் சிறநதென்னப்

புவனமதி லுள்ளசிவ சத்திகட்குட் கோளபுரச்
சிவனுமா வுடைத்தாயுஞ் சிறப்புடைய ரெனத்தேர்மின். (உக)

வேறு.

இக்கோள புறம்போலு மொருதலமுந் தவளேபடா திருக்குங் கங்கை, மிக்கான தீர்த்தமுந்தாத் திரிசூலத் தெமையாள வேண்டித் தேன்று, சூமக்காள கண்டசிவ தருமலிங்கத் தினுக்கிணையா மகே சீன் ருனு, முக்காலத் தினுமில்லை யம்மூர்த்தி நாமங்கண் மொழியக் கேண்மின. (உஈ)

வேறு.

கன்னிமலைக் கொழுந்தீசர் கணப தீசர் கமோளேசர் கந்தேசர் கைலை யீசர், மன்னுகீ சகத்தீசர் பிப்பி லேசர் வளர்பெண்ணை வனத் தீசர் தாத்தி ரீசர், பன்னுபுக ழகத்தீசர் புலத்தி யேசர் பதஞ்சலிசர் வேதேசர் கேச வேசர், சொன்னவயி ரவீசர் சிவதன் மேசர் சொற்பொய்யா மொழீசரெனச் சுருதி கூறும். (உச)

வேறு.

இன்ன வாம்பதி னேழ்திரு நாமமுஞ்
சொன்ன பேர்கள் சுருதிக ளுன்கையும்
பன்னு கின்ற பயனுறு வாரென
வென்னை யாளு மிறையருள் செய்தனன். (உரு)

வேறு.

சிவதருமக் கோளேசச் சிவலிங்கப் பெருமானைக்
குவலயத்திற் கண்டார்கள் கூற்றனுருக் காணார்க
டவளேபடாச் சுனையெடுத்துச் சம்புவுக்காட் டினரீரை
யவனவெனு முண்டார்க ளாப்பூலைப்பா லுண்ணரே. (உசா)

வேறு.

கன்னிவரை யுரித்தாரே கரங்கொள்வரை யுரித்தாரே
சென்னியணி யாற்றினரே சிறந்திடுமை யாற்றினரே
மின்னுமதிக் கங்கையரே வேதாவின் கங்கையரே
புன்னுமெல்லித் தருவாரே பரகதியைத் தருவாரே. (உஎ)

விரிமறையின் சிரத்தாரே விளங்குமைந்து சிரத்தாரே
திரிபுவனத் திருந்தாரே சிதடருக்குத் திருந்தாரே
தரிபரசு பாணியரே தவளையுருப் பாணியரே
யரியயனுக் கரியாரே யாவுடைச்சங் கரியாரே. (உ௯)

காமனெரி திருக்கழலார் காலனைக்காய் திருக்கழலா
ராமலகக் கானகத்தா ரரக்கன்மெலி கானகத்தா
ரேமவரை யாயவில்லா ரிரசிதவெற் பாயவில்லார்
நாமவரை நாடுவமே நற்கதியு நாடுவமே. (௩௰)

வேறு.

என்றுமா தவர்க்கறிய வெழிற்கயிலைக் காவலனந்தி யியம்பக் கேட்டு, நன்றியா முடலெடுத்த பயன்பெற்றோந் தேவரீர் நவின்ற கதை, யன்றுபாற் கடல்கடையத் தோற்றமுத மெனச்செவியா லருந்தி மாயை, வென்றுபே ரின்பவெள்ளத் தருட்டோணி மிசையேறி வீடுற் றேமால். (௩௦)

தீர்த்தவிசே டமுமூர்த்தி மகிமையுமத் திருத்தலத்தின் சிறப்புங் கேட்டு, மூர்த்தமெடுத் திடும்பயனைப் பெற்றனமூர்த் தியின்சரிதை முழுதுங் கேட்கும், கூர்த்தவறி விலமெனினுங் குரவர்புதல் வோரிதயங் குளிரும் வண்ண, மார்த்திசெயு மாறருள வேண்டுமெனத் தொகுத்துவிரித் தறைவா னுனன். (௩௧)

முற்பூசை தனக்காக மும்மதத்தன் பூசனைசெய் முறையு மாத, வற்கான புகர்சாபங் கழிந்துபிறப் பிரைந்தாய் வகுத்த வாறும், வெற்போடு வேழமட்டோன் றமிழ்வேத மோதுமந்த வியப்புந் தேனின், சொற்பூவை யனமடவா ரெழுவர்களு மதுவுருவாயது துலங்கு மாறும். (௩௨)

பதஞ்சலிவி யாகரண பாடியஞ்செய தருளடைந்த பரிசுந் துன்பை, வதம்புரியும் புலத்தியனுங் குறுமுனியும் பலவுருவாய் வந்த வாறுஞ், சுதன்பெறவு நித்தியமாய்த் துலங்கவும்பொன் மாதுமுனர் துதித்த வாறுங், சுதந்தவிர்க கோளரரு ளடைந்துதம்பே ரந்நகர்க்குக் காட்டி மாறும். (௩௩)

சத்தியவா சகர்முத்தி சரர்ந்துபொய்யா மொழியரெனச் சாற்று மாறும், பத்தியுடன் சிவதரும மயனுணர்ந்தப் பெயர்களுக்குப் பன்னு மாறு, முத்தனமூ ரற்சசியுங் கலைமகளுந் தம்மெண்ண முடித்த வாறு, மத்திகவிர்த் தர்த்தயா மப்பூசை வழிகேசர்க் காக்கு மாறும். (௩௪)

வேறு.

தொகுத்துச் சொல்பதி னொன்கெனுந் தொல்கதை
மகத்தி வத்தினை மாதவக் கொள்கையீ
ரகத்தி னின்புறக் கேண்மினென் றன்பதாய்ப்
பகுத்து ணர்த்திடப் பன்னுவன் சூதனே. (௩௫)

மூர்த்திவிசேட முற்றிற்று.

ஆக விருத்தம் உ௬௪

---

## கணபதி பூசைசெய் சருக்கம்.

---

சீருலாங் கைலை மீதிற் சித்திரக் கயத்தை நோக்கிக்
காருலாங் குழலி வேண்டக் கருத்தனவ் வடிவாய்த் தந்த
நீருலாஞ் சடிலத் தந்தி நெல்லியங் காவாற் போற்றி
யோருலா வியமுற் பூசை யேற்றநற் காதை சொல்வாம். (௧)

வேறு.

ஆதி யாமபரை தன்னிடை விந்துவை யளித்தே
சோதி யாஞ்சத்தப் பிரவஞ்சந் தோற்றுவித் ததன்பால்
நீதி யாமருத் தப்பிர வஞ்சம்பின் னிகழ்த்தி
மாதொர் பாகன்முத் தொழிற்கொரு மூவரை வகுத்தே. (௨)

அன்ன வர்க்குமுத் தத்துவத் தினுமதி காரந்
தன்ன தாக்கினை யகற்பதித் தத்துவாத் தனுவாய்
மன்னு மீசனப் பனிவரை மாதொடு மருவி
மின்னு வெள்ளியங் கிரிக்கிறை யோனென மேவும். (௩)

ஆய வெள்ளியங் கிரியினிற் கொடுமுடி யனந்தங்
காயும் வெங்கதிர்ச் சிலைமதிக் காந்தமா திகளான்
றூய மண்டபங் கோபுர விமானமென் ணிலவாம்
மாய ராரண ரிந்திரர் கோடியோர் மருங்காம். (௪)

சிங்க வானனச் சிவகணம் பலபல வயமாத்
துங்க வானனக் கணமபல பலதுதிக் கைமா
தங்க வானனக் குறள்பல பலகுதி தருசா
ரங்க வானனக் கிருத்திம மனந்தமாங் காங்காம். (௫)

ஐந்த ருக்குல விருக்கமென் ணிலவவ ணவணே
பைந்த ருக்குழா நெருங்குகண் டலைகளபற் பலவே
கந்த முல்லைமல் லிகையிரு வாட்சிசெங் கழுநீ
ருந்து நந்தன வனங்களெண் ணிறந்தன வொருபால். (௬)

ஒன்ப தாகிய மணிகளா னுஞற்றுமண் டபங்கண்
முன்ப தாப்பலாப் பூக்மாத் தாழைமொய்த்த துலவ
வின்ப தாகிய கன்னலு மரம்பைபு மிணைததுப
பொன்ப தாகைக ணிரைத்தபூம் பந்தரும் பொதுளும. (௭)

பங்க யத்தடஞ் செங்குமு தத்தடம் பணில
மெங்கு மொய்த்தநீ லோற்பலப் பூந்தட மெண்டிக்
குங்கு யிற்குழாம் பஞ்சமக் குரலினிற் கூவ
மங்கு லோதியா ரம்பையர் குழாங்கொடு மகிழ்வார். (௮)

முத்தி னூற்செயும் பந்தர்கண் முதிர்ந்தசெம் பவளத்
தொத்தி னுற்செயு மாடங்கண் மேடைகள் சூழச்
சித்தி ரம்பிறங் கியசில தெற்றிக டேவ
ரொத்த வேர்வியவ் வரங்கமெண் ணில்லன வொருபால். (௯)

வேறு.

இவ்விதமா கியவளங்க ணிறைந்தபெருங் கயிலாயத் தெம்மா னோர்நா, ணவ்விவிழி யுமையோடும் வசந்தவிழாத் திருப்பவனி நாட்டஞ் செய்து, கொவ்வையித ழுருத்திரகன் னியராடிக் கோகிலம் போற் கூவிப் பாட, வவ்வணியா யவசந்த மண்டபத்தி னினிதிருந் தவ வணிக ணோக்கி, (௰)

திருவுளத்தின் மகிழ்கூர்ந்து தேவியைப்பார்த் தொருமுறுவல் இ றிது தோன்ற, மருவுபல வகிலாண்டத் தாருயிர்களொருங்குறில் வா ழ்வுற் றோங்கத், திரிவில்பர யோகிபுண ரோவியவெண் களிறுகளிற் றிருகங்கண் சேர்தத, மருவியகற் புலகினுறப் பரசிவையோர் பெண்க ரியின் வடிவங் கொண்டாள். (கக)

அஃதுணர்ந்தெம பெருமானு மாண்கரியின் வடிவானு னன்னு ரன்ன, தகுதிபெறு மமயததி லொருவரிடை யொருவரன்பு சார்ந்து நோக்கித், தொகுதிபெறு மாருயிரைப பந்தித்த மலவடவி தொலைக் க வல்ல, பகுதிபெறு மானநத வருள்கொழிக்கு மெய்ஞ்ஞானப் பரி தி கோடி. (கஉ)

ஓருருவாய் மத்தகங்கா தொளிர்மருப்புத் திருநயனத் தோடு பூந்தா, வீருருவாய் மும்மதமாய் நால்வாயா யைங்கரமா யெழின்மா தங்கப், பேருருவாய் விக்கினங்க ணீக்குதற்கு மாக்குதற்கும் பெரிய வித்தாய்க், காருருவா யிடற்றிறையுங் கவுரியுங்கண் டுளங்களிப்பக் கண்முன் றோன்றி. (கங)

அன்னையுமபி தாவுமுன்ன மறிதெய்வ மெனவுலகுக் கறிவிப் பான்போற்,பன்முறையா லட்டாங்க பஞ்சாங்க முறப்பணியப் பரிவு கூர்நது, சின்மயனு கியபரமன் றிருக்கரத்தா லெடுத்தணைத்துச் சிர மோந்தன்பாய்ப், பொன்மலைப்பூங் கொடியருமைத் திருக்கரத்திற் கொடுப்பவவள் போற்றி வாங்கி. (கச)

பெறவரிய திருமகனை யணைத்துமுத்தங் கொண்டாகம் பிறங்க ப்புல்லி, புறவோங்கு பிரியமுட னுச்சியைமோந் திருக்குங்கா லும்பர் நாதன், அறிவரிய விநாயகனங் குமரனெனப் பரசிவையு மஃதா கென்னப், பொறிமேவு புழைக்கைமுகப் பெருமானு மஃதறிந்து புகலுகின்றான். (கரு)

### வேறு.

தந்தையுறப் போலிருப்பர் தனையரன்றிப் புயங்கத் தாயுருப்போ லிருப்பரெனத் தரணியிலோர் கூறு, மந்தவுரை யடியேனுக் கயலோ வென் றோத வைமமுகமு முக்கண்ணு மாடரவப் பூணும், கந்தமலி கடுக்கைநிலாக் கங்கைநிறை சடையுங் காட்டுமடை யாளமெனக் க

ண்ணுதலோன் கொடுக்க, வித்தையுமைம் கருப்புவிற்பா சாங்குசமும்பூங் கணையும் வியந்தளிப்ப நயந்தேற்று மீட்டுமொன்று புகல்வான். (௧௬)

உங்களிரு வர்க்குமுன்பா மெனக்குரிய பூசை யுலகியற்றும் படிக்குவர முதவுதிரென் றிறைஞ்ச, மங்குறவழ் பொழில் புடைசூழ் ககோளபுர மாதி மாகயிலை யந்தரங்க மாத்தலமாம் புவிமேற், கொங்குகமழ் காவிரியின் றென்பாலி னாறு குரோசமுள தன்மகிமை கூறவெளி தன்றாற், கங்கைநதி தவளைபடாச் சுனையெனவாங் காமக் கரையினெல்லித் தருநிழற்கீழ்க் காதலொடு முறைவோம். (௧௭)

முந்துகத்தி னால்வேத மூங்கிலுரு வாகி மோகமுடன் பூசிக்க வதனிழலி லிருந்தோம், பிந்துகத்தி னான்கேழா கமங்களும்பிப் பில மாய்ப் பிரியமுடன் பூசிக்க வதனிழலி லிருந்தோ, மந்தமூன் றாமுகத் திற் புராணமிரண் டொன்பா னணைந்து பெண்ணை யாயிறைஞ்ச வதனிழலி லிருந்தோ,மிந்தயுகத் தினினாரா யணனெல்லி யாகி யெமைப் பூசித் திடமகிழ்வா யின்புடனாங் கிருப்போம். (௧௮)

அகத்தியனும் புலத்தியனும் பலவுருவா யங்க ணமர்ந்துநமைப் பூசிப்பா ரைந்தலைநா கமதாய், மகத்துவமாம் பதஞ்சலியும் வந்தனை செய் தமர்வான் வழுத்தவெழு முனிவர்களு மாதர்களும் வருவார், சகத்தியல்பெ லாநீத்த ககோளமுனி வருவான் றாமரையா சனன் வருவான் சண்முகனும் வருவா, னகத்தினயன் றலைகொய்த வயிரவனும் வருவா னளினமலர்த் திருவருவா ணமைப்பூசித் திடவே. ()

வேறு.

ஆகை யாலத் தலத்தை யணைந்தெம்மை
யோகை யோடு முனாற்றி பூசனை
தோகை யோடவண் டோற்றி வரமுனக்
கீகை செய்வ மெனவாய் மலர்ந்தனன். (௨௦)

ஆனை மாமுக னவ்வுரை யுட்கொடு
ஞான நாயகி நாயகன் றாடொழா
வான வாற்றின் வழிச்செல முன்னுங்கான்
மோன நந்தி யிலைமுடித் தானரோ. (௨௧)

சிவகணங்களிற் சிற்சிலர் பற்பலர்
தவமி ருந்திடு சாரத நாயகர்
கவன வாம்பரி பூண்டக வின்கொடேர்,
புவன நாயகன் முன்கொடு போந்தனர். (௨௨)

போந்த காலைப் புனிதனத் தேரினிற்
சேர்ந்து வெள்ளிச் சிலம்பை வலங்கொடு
நீந்து வானந்தி நில்லென் றருளினன்
சேர்ந்த வைங்கரச் சிந்துரத் தண்ணலே. (௨௩)

வேறு.

செங்கதிர்மண் டலத்தோடு சேணின்று மிழிந்ததெனச்
சங்கரிவா முலகோருந் தாமரையா னுலகோரு
மங்குலூர் பவனுலக வாணர்களும் வந்திறைஞ்சி
யங்கவர்க ளெதிர்போற்ற வருளியவ னியின்மேவி (௨௪)

செம்பொன்வரைச் சம்புமாத் தீவதனி னோங்குகண்ட
மொன்பதிலெண் கண்டமுஞ்சென் றுயர்பரத கண்டமதி
னெம்பெருமான் கேதாரத் திறைவரைக்கண் டிறைஞ்சியவண்
முன்பதா கியகாசி முதற்பதிகண் டின்புற்று. (௨௫)

திங்கண்முடிச் சிவபெருமான் றிருச்சடையி னின்றிழியுங்
கங்கைநதி யாடிமல்லி கார்ச்சுனமா நகங்கடந்து
சங்கரன்றன் விழிக்குமருந் தப்பினர் சயிலமுங்கண்
டங்கமெட்டைந் தாற்பணிந்தங் காராமை யுடன்மீண்டு. (௨௬)

திருவாலங் காடென்னத் திருமாலுக் குரைத்திசைப்பெண்
மருவாலங் காடென்ன மலர்மகனுக் கருள்செய்து
தருவாலங் காடென்னச் சதமகனுக் கருள்செய்து
திருவாலங் காட்டாடுஞ் செம்பொன்மணிச் சபைகண்டான். (௨௭)

கண்புதைக்கும் பெருந்தோடங் கழுவவுமை சடைமேனிப்
பெண்புதைக்கு மேகம்பர்க் கிரண்டுபெரு வடுவளிக்கு
மண்புதைக்க வருகம்பை யாநதிமாத் தருச்சிறந்த
விண்புதைக்கும் பெருங்கீர்த்திக் கச்சிநகர் விழுந்திறைஞ்சி. (௨௮)

நான்முகன்மா லனமேன மாய்மேல்கீழ் நாடரிதாய்
வான்முகமேற் காணுமண்ணு மலைமருந்தை யுட்கொண்டு
பான்முகம்போல் வெளுத்தமுள்வாய்ப் பறவையிரண் டுறைபொருப்
பைத், தோன்முகத்துப் பிள்ளைகண்டு தூரத்தே தொழுதன்னுல். ()

உபயந்துன் றியவுடலு மலமுமொரு வினர்க்கருளுஞ்
சுபரவிகொ லெனக்கண்டோர் சொல்லமிளிர் சுவணப்பே
ரபயன்செய் திருத்தளியி லமர்ந்தநட ராசன்மா
சபையைந்துந் தரிசித்தான் றந்திமுகத் தெந்தைபிரான். (௲ய)

பிறந்தவர்க்கு முத்திதரும் பெரும்பதியும் பொற்கிணத்திற்
கறந்தபா றிருஞானக் கன்றினுக்கூட் டியநகரும்
பறந்தசடா யுவுஞ்சம்பா தியும்பரவும் பழம்பதியு
மறங்களெண்ணுன் கியற்றுமயி லாடுதுறை யும்பணிந்தான். (௲க)

தந்தைசொன்ன நதியென்னத் தாழ்ந்திரண்டு கூலமுள
வெந்தையார் திருத்தலங்க ளியாவுங்கண் டிறைஞ்சிநந்தி
சிந்தைமகிழ் வெய்தமணஞ் செயுமூதூர் தனைப்பணிந்து
கந்தமலி வெண்ணுவற் றிருநகருங் கண்டிறைஞ்சா. (௲உ)

வணிகமக டனக்காயாய் வந்தபிரான் சிராமலையைப்
பணிதற்காக் கிடைத்ததெனப் பரிவெய்திக் கயிலைநகர்
மணிமிடற்றுன் கோகன்ன வள்ளல்பெரி யவட்போற்றி
யணிதிருந்துஞ் சுவேதநதி யதிற்புகுந்து நீர்படிந்தான். (௲௩)

அந்திக்குத் தெக்கணத்தி னப்பாலோ ரிருகாத
மன்னுமிக வளஞ்சிறந்த மாநிலமைந் தினுண்மருதந்
துன்னியதென் பாண்டியெனுந் தொன்னுட்டின் பலசிறப்புங்
கன்னிவரை யாமலகக் கானமுந்தோற் றிடவருங்கால். (௲௪)

வேறு.

சிரங்களைந்து கொண்டகோ ளேசர் வாழுந் திருநகரத் தினிற்றவங்கள் செய்ய வேண்டிக், கரங்களைந்து கொண்டதும்பி வரவு நோக்கிக் காலாறு கொண்டதும்பி யெல்லாங் கூடி, மரங்களைந்தும் பலத

ருவா யிருபா லுஞ்சேர் மார்க்கமதில் வரவெதிர்கொண் டமர் மாதர், சரங்களைந்து மதன்றாவு மிரங்கா யென்னச் சாற்றுதலின் முரனு மொழி தழைக்கு மாங்கண். (௩௫)

வாரணமாய் வாரணத்தி னுரிவைதனைப் போர்த்த மாதங்கத் தானருள வந்தவொரு நால்வாய், வாரணமா யவன்வடிவா மாயெல்லி யின்கீழ் வளர்சிவதன் மேசரைப்பூ சிக்கவரு மெனவெள், வாரணமு த் தீன்றுலைத்துத் தொனிகாட்டும் வளைவாய் மலிந்தசிறைச் செஞ் சூட்டு வளைந்தமுட்டாண் மருவும், வாரணங்க ளொக்காளந் தாரைசி ன்ன மெனவே வாயங்காந் திருப்புறமு மலிந்திடும்பே ரொலியே. ()

வேறு.

ஐந்துகைய நாகமிதென் றறுகாறு கங்கள்பணா மலர்த்திப் பா னு, சிந்துவெம்மை தனைமாற்றுங் கவிகையென நிழல்பரப்பச் சென் னி மீதி, லிந்துவுங்கங் கையுநீங்கா திருக்குந்தே வாப்பல்வர வினைக்க ண் டாங்கட், பைந்தளிர்ப்பூம் பலவாவி யாம்பலெல்லா மலர்ந்துகண்ணீ ர் பரப்பு மாதோ. (௩௭)

இன்னவா றுயபல வளங்கண்டு மகிழ்வெய்தி யிதயத்தன்பு துன்னவா ரணத்தின்முதற் பொருளிருபாற் சிவகணங்க டொழுது சூழ, மன்னவா வொடுமாற்றின் வதிந்தசிவ தலங்களியா வையுங்கண் டேத்திக், கன்னலும்வா ழையுநெருங்குங் கன்னிவரை யாமலகக் கா வைக் கண்டான். (௩௮)

ஐந்துகையுஞ் சிரஞ்சூட்டி யானந்த வெள்ளமிழிந்தருவியோட நைந்துருகித் தரைவீழ்ந்து பணிந்தெழுந்து தாஞேவ நடந்து செல் லப், பைந்துணர்ப்பூந் தருக்களெலா நடைப்படாம் விரிப்பதெனப் பார்தோன் றுமற், கந்தமலி மலர்பரப்பத் தந்திமுகக் கடவுள்சென் றூன் கசோள மூதூர். (௩௯)

ஆதிகை லாயமெனுங் கன்னிவரை யிணைவலமா யணைந்து பூமேற், பூதிபுர ளப்பணிந்து புளகமெழ முகமலரப் பொங்கு கண் ணீர்ச், சீதவா னந்தவெள்ளங் கரைபுரள வாமலகத் திருக்குந் தேனைக், கோதிறனி முதற்பொருளை மனங்களிப்ப விருகண்ணுங் குளிரக் கண்டான். (௪௰)

ஆனந்தபரவசமா யவனியின்மே லெட்டுமஞ்ச மழுந்த வீழ்ந்து காணுந்து நெல்லியடிக் கீழ்முளைத்த தீங்கரும்பைக் கனியைத் தேனை, வானுந்து பாற்கடலை மனக்கண்ணா லெடுத்தருந்தி வழிந்த தென்னத், தேனுந்து கவிமழைகார் காலமுகில் பொழிவதெனச் செப்பலுற்றான். (சக)

வேறு.

பராபர நிராமய நிராலம்ப சாட்குணிய பரமா னந்த
புராதன புராந்தக நிரஞ்சன நிராகார புண்ணிய ரூப
முராரிபய னூர்ச்சிதப தாம்புயகு ணாதீத மூன்று லோக
தராதல கோளகிரி யானகை லாசபதே சரணமென்றான். ()

வேறு.

இன்னவகை யாயபல துதிமுழக்கிச் சிவகணங்கள் யாவுஞ்சூழ, வன்னவா மலகநிழற் கீழ்முளைத்த கனிமருந்தை யனைய மூர்த்தி, சொன்னவா ரணவாக மங்கள்புகன் றிடுமாறு துலங்கப் பூசைக்கு, கென்னவேண் டியவனைத்துங் கொணர்கவெனக் கணநிபரை யேவிப் பின்னர். (சங)

வேறு.

அண்டர்கடச் சனைக்கொணர்கென் றொருகுறட்பார்த் தருள்செய்தான், கொண்டலூர் தினைக்கொணர்கென் றொருகுறட்குக் குறிப்பித்தான், தெண்டிரைவேந் தனைக்கொணர்கென் றொருகுறளைச் செலவுய்த்தான், மண்டனின்வீழ்ந் திறைஞ்சியவை மனத்திலுஞ்சென் றனவிரைந்தே. (சச)

ஆங்காங்குச் சென்றவர்கட் கறிவிக்கு முன்னரெழுந்
தோங்காரத் துட்பொருளா மும்பலுரை சிரமேற்றுத்
தேங்காவத் தொடுபோந்து தெண்டனிட்டு முன்னிற்ப
வோங்கார மூர்த்தியரு ளொழுகுவிழிக் கடைசாத்த. (சரு)

அடியேனை யிரங்கண்ணா னென்றுரைத்தா னமரர்பிரான்
படிசூழுங் கடற்கரச னென்றான்மேற் றிசாபாலன்
பொடியார்மே னியவடியேன் புலவர்தச்ச னென்றானத்
தொடியார்கை யனைநோக்கித் துதிக்கையா னிவைபுகலும். ()

வேதாங்க மானசிற்ப விரிவான நூன்முறையே
நாதாந்த மாஞ்சிவதன் மேசரெங்க ளைபகர்க்குங்
காதார்க ளுமையவட்குங் கவின்பரிவா ரங்களுக்கு
மாதார்ந்த திருக்கோயி லாரிதத்தின் வகுக்கவென. (சஎ)

அவ்வுரைகொண் டவனேகி யவ்வண்ண மரைக்கணத்திற்
றிவ்வியமா கியகருப்பத் திருக்கிருக முதலாகத்
துவ்வமுத சேடமுணுந் தொண்டர்தளி யீறாகக்
கவ்வையுட னாற்றிவந்து கழறொழுதா னன்னவனே. (சஅ)

ஆயிரங்கண் ணையிவணீ யடிகளா ராதனைக்குத்
தூயவுப கரணமெலாந் தொகுக்கெனவா னைந்துமுதன்
மேயசந்தக் குழம்பீறு வேண்டுவன பற்பலவுங்
காய்கதிர்க்கற் சுடிகைமுதற் கவின்கொள்கன கப்பூணும். (சகூ)

வருக்கவகை யனஞ்சூதம் வாழைபலா முதற்கனிபுத்
துருக்குநெயிற் சமைத்தபல பண்ணியங்க ளுள்ளனவு
மருக்கொழுந்து வில்வமண மலர்வருக்கத் தொகையனைத்துந்
தருக்கனைந்துத் தரவாங்கித் தந்துதிரு வடிபணிந்தான். (ருய)

உயர்வருண வொன்றொளிந்த வெழுகடலு மூங்கொருபாற்
றயிர்பானெய் தேன்கருப்பஞ் சாறொடுசுத் தோதகமும்
புயலேழும் பருகினும்வற் றாவாறு பொருத்துவையீங்
கியல்பாமெட் டாங்கடலை யிருஞ்சுனையாய் வகுத்தென்றான். ()

வருதமெதனுஞ்சொல் லோவந்த வாரிதிக ளோமுனெனத்
திருத்தங்கொண் டடியேன்வந் தனனென்று செப்புதலு
மருத்தமறை முதன்முனுவா மாம்பன்முகத் தெம்பெருமான்
பெருத்தமகிழ் வுடனெழுந்து பெரும்புனலிற் றுளைந்தனனால்

வந்தபெருங் கணங்களெல்லா மாதீர்த்தம் படிந்தபின்மற்
றெந்தைமுத லமரரெல்லோரு நீறணிந்து
சந்தியா வந்தனங்க டருப்பணங்கண் முடித்தவுட
னந்திவண னக்கமணி யங்கமணிந் தவர்முன்போய். (ருங)

சிவகணங்கண் முகநோக்கிச் சிந்துரத்தே வருள்செய்வான்
றவமிகுமுங் களுக்குரைக்குந் தகைபுரிமி னேவகில
புவனமெலா நிறைந்துநிற்குஞ் சிவதரும புரேசருக்கு
மவனபூ சனையுள்ளே வகுத்துவெளி யருச்சிக்க. (௫௪)

எல்லோருஞ் சூக்கமுத லிறைசொலுரு நந்திரஞ்சபிமின்
னல்லாதொன் றும் புகலீ ரந்தணிரொன் றறிவுறுத்திச்
சொல்லாலுஞ் சங்கற்பஞ் சொரிந்தருப்பை விரற்றுறுத்திப்
பல்லோருங் காண்பான்மண் டபசாந்தி பண்ணினனால். (௫௫)

வேறு.

தபனபுண்ணி யாகரும்ப தாபனபா லாக்கினிமண் டபத்தின் பூசை,
யுபமையிலாப் பாத்தியவா சமனமருக் கியுசங்க முடன்றாபித்துங்
கிபமுகவன் பஞ்சசுத்தி யந்தரியா கார்ச்சனையு மியைத்திலிங்கஞ்
சுபகரமா ரும்படிமுப்பா னேடெண் கலாநியாசஞ் சூட்டினனால். ()

ஆவாக னதிசோ டசநியா சமுமியற்றி யபிடே கங்கள்
,சேவாக னசோம சேகரா வென்றிரந்து திலநெய் மஞ்சண்
மாவாதி குங்குமத்தின் குழம்புகும்ப வபிடேக மரபி னூட்டிப்
பூவாகு மென்மையவாம் பரிவட்டத் தாலீரம் புலர்த்தி மாதோ. ()

வாசனையா கியகளபந் திருமேனி முழுவதுமட் டித்துப் பூணா
றேசுமலி மகுடாதி யாபரணஞ் செறிவித்துத் தெரியல் சூட்டி
யாசனமூர்த் தியுமருச்சித் தப்பாற்றத் துவத்திரையத் தலர்கள்
சாத்தி, யீசனுக்கெண் வகைமலரு மருச்சித்து நிவேதனங்க ளெலாஞ்
செய் வித்து. (௫அ)

தூபதீ பாதிகளீ ரெட்டுமுக மனுமியற்றிச் சுருட்டியாடி
தாபமாற் றிடுவிசிறி கவிகைசா மரங்காட்டிச் சபித்துச் சாத்தி
யேபரா பரகிருபா கரமனுலோ பங்கியிதை யியற்று லோப
மாபரா தஞ்சகிக்க வேண்டுமென விரந்துவல மாகச் சூழ்ந்து. (௫௯)

புவனியின்மே லட்டாங்க பஞ்சசங்க மாய்ப்பணிந்து புகழ்ந்து
தோசார், தவனசந்திராக் கினிநயன சந்திரசடா தரகெங்கா தரபு

## கணபதி பூசைசெய் சருக்கம்.

ராண, நவசிரதி சயானந்த நாவபூ டணசபா னந்த ரூப, பஞ்சருணசங்கார பஞ்சகிர்த்தி யாதீத பரமே போற்றி.

வேறு.

கற்பனை கால மூன்றுங் கடந்துநின் றவனே போற்றி
தற்பர ஞானா னந்தத் தனிமுத லானாய் போற்றி
நிற்பன நடப்ப வெல்லா நிறைந்தநின் மலனே போற்றி
பொற்பொது வினினின் றாடும் பொய்யாத மொழியாய் போற்றி ()

கங்கையுஞ் சடையு மைந்து வதனமுங் கடுக்கை பாம்புந்
திங்களு நெற்றிக் கண்ணுஞ் சிறியனேற் களித்தாய் போற்றி
மங்களஞ் செறிந்த நெல்லி வனத்துறை மருந்தே போற்றி
பங்கினிற் சிவகா மித்தாய் பதிந்ததற் பரனே போற்றி. (கூ௨)

ஆரண நான்கு நான்கா னனத்தினின் றருளி மூல
காரண மான நான்கே றாகமங் காண நோக்கும்
பூரண முகத்தி னின்று புகன்றவா பிரமனோடு
நாரணன் றேடிக் காணாத் திருக்கோள நாத போற்றி. (கூ௩)

வேறு.

என்றுதோத் திரமனந்த வேதோப நிடதத்தி னியம்பிச் சோதி, துன்றசவு ராதிசண்டாந் தமும்பூசை நிறைவேற்றிச் சுரர்க ளோடு, மென்றுபுலா திகளருந்திக் காலமா றினுமேன்மேல் விரிவாய்ச் செய்தங், கொன்றுபோற் பலவருட மொருகணமாச் சிவார்ச்சனைக ளுஞற்று நின்றான். (கூ௪)

வேறு.

தேவவரு டத்தினு யிரமிவ் வண்ணந் தினந்தோறும் வழிபாடு செய்யுங் காலை, மூவர்களு யகன்விரிஞ்சன் முதலா வுள்ள முப்பான் முக்கோடியிமை யவர்கள் சூழ, மாவுலா வியமார்பன் மருங்கிற் போற்ற மன்னுசிவ காமியெனும் வல்லி யோடு, மாவுருவா யடுத்தமால் யானத் தேறி யமரர்பூ மழையினனோந் தணையும் போதில். (கூ௫)

வேறு.

இந்திரன் களாஞ்சி தாங்க வெரியிறை தூப மேந்த
வந்தக னுடைவாள் பற்ற நிருதிமன் னடைப்பை சொள்ள

மந்தமா ருதம்பொன் னுல வட்டங்களசைப்ப முக்க
ணெந்தையார் தோழ னுடி யெடுக்கவி சானன் போற்ற. (௬௭)

சந்திரன் குடைக விப்பத் தரணியெற் பந்த மேந்த
வந்தர வுடுக்க ளெல்லா மணிமுத்தின் பந்தர் தூக்கக்
கந்தர மேழும் பூவுங் கமழ்நறும் புனலும் பொன்னுஞ்
சிந்திமுன் னிற்ப வைந்து தேவருந் துமியு மார்ப்ப. (௬௮)

வேறு.

தும்புருநா ரதர்பாட முனிவ ரெல்லாஞ் சுருதியிதி காசபுரா ணங்க ளோதக், கிம்புருடர் கந்தருவர் கீதம் பாடக் கின்னரர்கின் னரமுழக்கக் கருடர் சித்தர், தம்பணைவா சிக்கநந்தி சீர்த்தி கூறச் சதுமுகன்மான் மத்தளதா ளஞ்சே விக்க, வும்பரெலா மரகர வென் றோலஞ் செய்ய வும்பன்முகத் தோங்கார வுருவங் கண்டான்.

அதுகாலை யெழுந்துவல மாகச் சூழ்ந்தா னடிக்கடிபூ மேற்பணிந்தா னழகார் கையைப், பதுமமலர் போற்குவித்தா னந்த வெள்ளப் பரவையிடைப் படிந்துடலம் புளகம் போர்ப்பக், குதுகுலங்கொண் டானந்த நிருத்தஞ் செய்தான் குணலையிட்டான் றுதிகள்பல கோடி செய்தான், விதுமேவு சடையணலீ தனைத்து நோக்கி மீக்கூரு மகிழ் வெய்தி விளம்பு மாதோ. (௬௯)

இந்நாணீ செயும்பூசை துதிக ளியாவு மெமக்கினிதா யினவிந்தச் சரிதை தன்னை, யுன்னுநின் றவர்களிக பரத்து வாழ்க வுனக்குமுதற் பூசையின்று முதலுண் டாக, பன்னுக மேற்றுயில்வோன் முதலா வுள்ள பண்ணவர்மண் ணவர்கணமுன் பணிகி லாரே,' லெந்நாளு மிடருறுக பணிந்து ளாரே லிடரெவையுங் கழன்றின்ப மெய்த மாதோ. (௭௰)

வேறு.

இத்தலத்தி லுன்னைமலை மூர்த்திவிநா யகனென் றெல்லோரு மியம்பிடுக வின்னுமொரு காலை, நத்தணிசெங் கரன்வீர கத்திதீர்த் திடவந் நாமமுமுன் றனக்காக நடனதரி சனைத்துக், கத்தமிழ்மா முனிவரனு தியர்தவஞ்செய் தன்பி னடைவரிவ ணக்காலந் நடமுநீ காண்பாய், புத்திரவிங் கிருந்தியெனச் சிவலிங்கத் துள்ளே புகுந்தெங்கு நிறைந்திருந்தான் புகழ்தருதன் மேசன். (௭௧)

தந்தையுரைத் தும்பரொடுங் கணங்களொடு மிமயத் தையலொடு மறைந்தருளத் தந்திமுகத் தமலன், புந்திமகிழ் வொடுமந்தத் திருத்தலத்திற் றவனை புகாச்சுனைக்குத் தரத்திலுயர் தன்மபுரே சனுக்கங், கந்தமுறு குடதிசையிற் கலோளநா யகனுக் கடித்தலத்தின் மலேமூர்த்தி விநாயகப்பேர் தாங்கிச், சிந்தைநினைத் தனவெவையு மெவருமெளி தடையச் செய்துயர்கற் பகநாணச் சிறப்பொடுவீற் றிருக்கும். (எ௨)

கணபதி பூசைசெய்சருக்க முற்றும்.

ஆக விருத்தம். ௩௬௬.

---

# மாதவன் சாபந்தீர்த்தசருக்கம்.

---

கண்ணுதலுங் கவுரியுமக் கயிலையினிற் கவறாடற்
கெண்ணரிய வைக்கரியா விருத்திவிளை யாடுகையி
னண்ணல்கைதாழ்ந் திடவுயர்ச்சி யாமெனமா லுறையவுமை
பண்ணியசா பந்தவத்தாற் பாற்றியவா சாற்றுவாம். (௧)

சந்திரார்கோ டிகடிரண்ட தகைமையெனுந் திருக்கயிலை
யந்தரங்கத் தானத்தி னரணிமய மகளோடு
மந்தணமாந் தானத்தின் மந்தமா ருதந்தவழ்ச்
சிந்தைமகிழ்ந் திருக்குங்காற் றேவியைப்பார்த் திங்குரைப்பான் (௨)

இக்கொடபா மொழியாய்நா மிருவரும்பந் தயமமைத்துச்
சொக்கட்டான் விளையாட றொடங்கிடவா ராயென்ன
வக்கட்டா கியவிளையாட் டினுக்கிசைய வதுகாலை
முக்கட்டா னுவைப்பரவ முகுந்தனன்பு கொண்டணைந்தான். (௩)

அணைந்துலக நாயகனை யம்பிகையை யடிவணங்கிக்
குணங்குறியி லாதபெரும குணக்குன்றீ ரெனநிற்ப
மணந்ததுள வணிமார்ப வருதியென வழங்கியருள்
வணங்குறுநுண் ணிடையாளைப் பார்த்தொன்று வகுத்துரைப்பான்.

முன்னமிசைந் திடுசூது முயல்வதற்குப் பந்தயமியா
தென்னினிரு வோரணியு மணிகளா மெனப்புகன்றிங்
கன்னதற்குக் கரியரிநீ யாகுகென வவன் மகிழ்ந்து
சொன்னவதற் கங்கமெலா மிருவர்முனந் தொகுத்தனரால். (௫)

கண்ணுதலுங் கவுரியுமக் கவறாடல் வினைமுடிவி
னண்ணறன்கை தாழ்ந்திடலு மாடலெம தேயென்னப்
பெண்ணரசி நடுநிலைமை பேசெனமா யனும்பெருமா
னுண்ணிறைவோர்ந் திறையவருக் குறுமோதாழ் வெனவுரைத்தான்

அவ்வுரைகேட் டலுமுமையா ளகத்தெழுந்த பெருமுனிவா
லிவ்வுரைநீ நடுநிலைமை யின்றியுரைத் தமையாலே
தெவ்வசுரர் குருமொழியாற் பலசென்மஞ் செனிக்கவென
வவ்விவிழி யுமைகூற நாரணனு மதுகேட்டு. (எ)

உண்ணடுங்கி மெய்ம்மறந்திங் குமைகோனை யடிபணிந்து
பண்ணமரு மொழிசாப நிவர்த்தியெந்நாள் பகர்கவென
விண்ணவர்க்கா வசுரரைநீ வெல்லும்வழி யால்வருமிப
பெண்ணருள்சா பங்கோளப் பிறங்கலிற்பின் றவிருமென்றான்.

அங்கணனிவ் வாறிசைப்ப வருள்விடைகொண் டவணகன்று
செங்கண்மா றன்னிருக்கை சென்றுறைய நாட்சுரரும்
வெங்கணசு ரருமடுபோர் வினைபுரிந்தாற் றுதமரர்
பங்கயக்கண் ணனுலகிற் படர்ந்திதனைப் பகர்கின்றார்.

வெய்யவசு ரர்கள்போரின் மெலிந்தனம்யா முன்னருளா
லுய்யும்வகை யன்றியும்வே றுளதோயா வையும்புரக்கு
மய்யனீ யாதலினு லன்றிபத்தைப் புரந்தெனத்
துய்யவமு தளித்தோயெந் துயரகற்றல் கடனென்றார். (ம)

என்றமொழி செவிப்புகலு மிமையவர்ப்பார்த் தருள்செய்வா
னொன்றுநீ ரஞ்சலிர்யா முமதிகல்வே ரறக்களைதற்
கின்றவர்தங் குழுவெங்க ணெனக்கறியக் காட்டுமெனச்
சென்றனராங் கவனோடுஞ் செறுநரெலாந் திரண்டோட (கக)

நடுகொடுந் தகுலவரெலா மொருங்கெய்தி யிரும்புவியின்
வாடுமுயிர்ப் பயிர்தழைய மழைபொழிய வருள்பொழியுந்
சேடுறுதன் குருமருவுஞ் சிறந்தமனை யிடைப்புகுந்து
பீடுபெறு மவன்மனைவி பிரசமல ரடிவீழ்ந்தார். (கஉ)

தேவர்களா னமெலிந்துவந்தன் றிருவடியே சரண்புகுந்தோ
மேவலரால் வருந்துயரம் விடுத்தனமென் றுரைசெய்யப்
பூவருமா க்கிற்சிறந்தாள் புரிதவத்தின் வலியதனுல்
யாவருமென் கருப்பத்தி னிருமின்க ளெனவமைத்தாள். (கங)

அக்காலை யரவணையா னசுரரைக்காத் தவண்முன்போய்
மிக்கான மொழிபுகல மெல்லியலு மிகச்சினந்து
சக்காயி ரத்தான்போற் சாபமுறு துன்னூரிற்
புக்காங்கு வாழ்தியிங்குன் போர்செல்லா தென்றறைந்தாள். ()

பங்கேரு கக்கணனப் பாவைசொன்ன வாகேளா
விங்கேயுன் கண்காண வசுரர்தமை யீடழிப்போங்
கொங்கேயு மென்முலையா யெனவந்தக் கோற்றொடியா
ளெங்கேநீ யகமுடிப்பா யானிருக்க விவணென்றாள். (கரு)

சொற்றவுரை கேளாச் சுடரா ழியைநோக்கி
யிற்றே யிவளோ டிராக்கதர்க டம்முயிருஞ்
செற்றே யிவண்மீள்வா யென்னத் திகிரியுமக்
குற்றேவல் செய்துயிரைக் கொண்டரிபா லெய்தியதால். (கசு)

ஆயபொழு திற்கயிலா யத்தினின் றும் போந்தவெள்ளி
காயுமிரும் பென்னவிரு கண்சிவந்து தேவியங்கண்
மாயும் வகையுணர்ந்து மாயனைப்பார்த் தேபுவியி
னீயுனந்த சென்மமுற நிற்றியெனச் சபித்தான். (கஎ)

அச்சாபம் பெற்ற வரிவருந்திப் பொய்ச்சான்றி
னச்சார் வினைக்கு நடுங்கி நடுவணக்குங்
கச்சார்ந்த கொங்கைக் கணவன் கபோலபுரத்
தைச்சார வேண்டுமென்றே தன்மனத்தி னெண்ணினன். (கஅ)

கேர்ங்கு - குறுக்கல்.

ஓங்கார சின்மயமா மோர்கோட் டிளங்களிற்றுக்
காங்கா த்ரவாய்முன் னுரா தனையளித்தே
பாங்கான வாமலகப் பைந்தருவி னீழலென்று
நீங்கா தவனுறையு நீணகரிற் சென்றனனால். (௧௯)

சென்றதிரு மாலத் திருக்கன்னி மால்வரையை
நின்று தொழுது நிலத்தின்மிசை வீழ்ந்திறைஞ்சி
நன்று வலம்புரிந்து நல்லமலை மூர்த்தியொடு
மன்றன்மர கதவல்லி மணாளரையுந் தலைவணங்கி. (௨௰)

மங்கை சிவகாம வல்லியொரு பாணீங்காச்
சங்கரனு நெல்லியடித் தாணுவையும் வீழ்ந்திறைஞ்சித்
திங்கணுத லாவுடைத்தாய் சேர்ந்தோர்பா கந்துலங்கு
மங்கணார்கோ ளேச ரடித்தா மரைபணிந்தான். (௨௧)

வேறு.

சங்கு தீர்த்தத் தடமொன்று கண்டனன்
பொங்கு கங்கைப் புனலிடைத் தோய்ந்தன
னங்க முற்றும்வெண் ணீறணிந் தாவுடை
பங்கன் பூசை பலவும் புரிந்தனன். (௨௨)

வேறு.

வாரவிர தங்களுக்குட் சிறந்த சோம வாரவிர தாரம்ப மார்க்க
ந் தேர்ந்து, நாரமணி சடிலர்சிவ நிசியைப் போல நான்குயா மமும்
பூசை நடாத்தி யும்பின், வீரமற நவின்றபிர தோட பக்கத் தெழிலோ
ன்பு மொழிவிதியி னனுட்டித் தப்பி, ஞரும்விர தங்களினுந் தியாப
னஞ்செய் தமரராண் டாயிரமங் கமருங் காலே. (௨௩)

வேறு.

செம்பவளக் கொடிபோன்ற திருச்சடையு மொளிர்வான் றிங்
களுங்கங் கையும்பாம்புஞ் சிறந்தவிழி மூன்று, மம்புலிபோன் றிடுச
ங்கக் குழைக்காது மால மணிமிடறும் புயநான்கு மபயவர தமுமா,
னும்பொறியும் புலியதளுங் கரியுரியு முமையா ளொருபாலு முபய
பதாம் புயமுமெழி லோன்றக், கம்பணிவெள் விடைமீது கற்பகநாட்
டவர்கள் கனகமலர் மழைபொழியக் கண்ணனெதிர் நின்றான். (௨௪)

வேறு.

மழவிடைமீ தெதிர்நின்ற வள்ளலைக்கண் டெழுந்து வந்து மண்மேல் வீழ்ந்து, தொழுதிரண்டு விழிகளுநீர் துளும்பவுடன் மயிர்பனிப்பச் சுருதி கூறு, மொழிமுறையே துதிகள்பல பலபுரியும் பங்கயக்கண் முகுந்தற் கன்பாப், பழையதனி முதலெனுங்கோ ளேசநிரா மயனருட்கண் பரப்பிக் கூறும். (உ௫)

எழுதரிய மறையாக மங்கள்சொலு முறைதவறு தியற்றும் பூசை, வழுவலசெய் திடுமிவன்பான் மங்கைமுனி வொழிந்தருட்கண் வைத்தி யென்னப், பழுதகன்ற புகர்புகன்ற சாபமனைத் துந்தீர்ந்து பத்துச் சன்மந், தழுவியுல கத்தினுக்கு வருமிடர்தீர்த் திடுவையெனத் தாய்சொற் றனால். (உ௬)

வேறு.

அச்சன் மங்களி யாதெனிற் கூறுது
மச்ச கூர்ம வராக நரசிங்க
பிச்சை வாமனன் மூவரி ராமர்கள்
பச்சை மேனிக்கண் ணன்கற்கி பத்தரோ. (உ௭)

இனைய வாய்மை யியம்பிக்கோ ளேசனு
நனைய வார்குழ லுமைகி தன்னொடு
மனைய லிங்கத் தயிக்கிய மாயினான்
வனைது பூாயன் மகிழ்ந்துமெய் யஞ்சென்றான். (உ௮)

திருமெ யத்தினிற் சென்றவன் சாபந்தீர்
பெருமை யான கதையினைப் பேசுவோர்க்
கரிய சாப மருந்தவர் செய்யினும்
பரிதி முன்னம் பனியென நீங்குமால். (உ௯)

**மாதவன் சாபந்தீர்த்த சருக்க முற்றும்**

**ஆக விருத்தம் ௩௯௫.**

# முருகன் றவம்புரி சருக்கம்.

தூய்யமதி கங்கைகொன்றை முடிமேற் காட்டுதலாற் றேகை
யொரு பாலுறையுந் தோற்றமதாற் சிவமாஞ், செய்யகயி லேயினு
மையாட் கரன்முதலா மனுவைத் தெருட்டுபொழு தளியுருவாய்ச்
சென்றதனை யுணர்ந்து, பொய்யின்மறை யயனையருஞ் சிறைப்படுத்
திச் சிருட்டி புரிவான்வே றமைத்ததனாற் பொருந்தியசா பத்தை,
வையகத்தினுமலக வனபருந்தைக் குமரன் வந்திறைஞ்சி வதிந்து
பின்பு மாற்றியவா வகுப்பாம், (க)

அம்புலிகீழ் மேற்றவழுந் திருக்கயிலை வரைமீ தரதனவா தன
த்துமிசை யம்பிகைதன் னோடு, மெம்பெருமா னுவகையொடு வீற்றி
ருக்குங் காலை யெவ்வுலகு மீன்றவளங் கெழுந்திறைவ னிருதாட்,
செம்பதும மலர்முடிமேற் சூட்டியபி னிந்து சேகரகங் காதரமா தே
வதிரி நயன, வும்பர்மணி மகுடமுறு பாதநிரா லம்ப வோங்கார சின்
மயவென் றுயர்மொழியாற் றுதித்து. (உ)

ஐந்தெழுத்தின் முதன்மையதா யகரவுக ரத்தோ டணைந்துவரு
மனுவாகி யாரணமு மறியா, மந்தணமா யெங்குநிரந் தரமாகி மூல
வடிவாயொன் றுய்ப்பலவாய் மாமாயை யுருவாய்ச், சிந்தையொடு
வாக்காலுந் தெருட்டவொண்ணா ததுவாய்ச் சிற்பரமாய்த் தற்பர
மாய்த் திகழ்சோதி மயமா, யந்தரங்க மானபர மானந்தப் பொருளை
யறியுமா றருள்கவென வன்பொடுநின் றிரந்தாள். (ங)

இரந்திரந்து வழிபடுஞ்சிற் றிளங்கொடிநுண் ணிடையாட கிர
ங்கியருட் டிருக்கடைக்க ணினிதருளி நோக்கி, நிரந்தரமாம் பழம்
பொருளி னிலைகாட்டும் பொருட்டா நெடியகோ புரவாயி னிலவுநந்
தி தனைக்கூஉய்ப், பொருந்துமுதற் பூசைகொளும் புழைக்கைமுகன்
முதலாப் புகலுமெழுவர் வரினுமவர் போதரா வண்ணம், பரிந்துரைத்
தாங் கிருத்தியெனப் பணித்திட்டுப் பரமன் பருந்தடைய நீழலுறை
பான்மையனுய்ப் பகரும். (ச)

வேறு.

அப்போதினி லயன்மாலிமை யவர்மாமுனி வரரைங்
கைப்போதகன் முதலாகிய கடவுட்குழு வெல்லாந்
தப்பாதுநந் தியினுலொரு தடையுற்றவ ணிற்ப
மைப்போதினை நிகர் கந்தர மயிலூர்தியும் வந்தான். (ரு)

வருகந்தனை யெதிர்சென்றடி மலர்வந்தனை புரியா
வுருகன்பொடு முகமன்சொலி யுமைபங்க னிருக்கும்
பருவந்தனை யறியும்படி பகர்நந்தியை நோக்கி
முருகன்சரி யெனநின்றுதன் முதுமாநகர் புகல்போல். (சா)

மகவான்கன லியமன்றிசை வழியாய்நிரு திக்கோ
ணகமாகிய திசையுங்கடந் தப்பாற்குட திசைமேன்
முகமாய்வரு மறுகாலென முன்னித்திருக் கோயில்
நகுசாளர வழிபோயுமை நனைவார்குழன் மருவி. (எ)

அங்காரண முதலாகிய வம்மந்திர வுரையை
நங்காயறி யெனநாயக னவிற்றும்பொருள் யாவுஞ்
சிங்காதுதன் செவியூடு மடுத்தேமகிழ் திளைத்துப்
பொங்கார்வ முடன்றுன்முனம் போந்தாலெனப் போனான். (அ)

வேறு.

நந்திகே சன்றடையா னின்றவா னவர்தம்பா னணுகும் வண்ண, மந்திவான் மதிச்சடையா ரருளுதலுங் கன்றகன்ற வாபோற் சென்று, சிந்தியா நின்றுகண்ணீர் மழைபொழிய வானந்தச் சலதி மூழ்கி, யெந்தைதரி சனங்கிடைத்தற் கித்தனைநாள் சென்றவென விரங்கிச் சென்றார். (கூ)

செல்லுநரிற் றிசைமுகனோர் நாட்டரிச னடிகுறித்துச் சென்றான் சூரை, வெல்லுமயில் வேற்குமர னுங்கண்வாழ் வுறநோக்கி வீழ்ந்து போற்றான், மெல்லியதேழி யொடுவில்ல மணிசடையான் றிருமுன் போய் வேண்டி மீள்போ, தெல்லின்கோ பணைப்படுத்த வீரவா குத்தலைவனியம்பா நின்றான். (ய)

# திருக்கோளபுரப்புராணம்.

வஞ்சகத்தா னவரையடும் வேலவகேட் டருளுதியம் மலரின்மேய, வஞ்சகத்தா னுனைப்பணியா தகிலேசன் றனைப்பணிந்திங் ககன்று னென்னக், கஞ்சகத்தான் பணிந்தெழுந்து கைகூப்பிச் சூர்தடிந்த கருணை தேக்கு, நெஞ்சகத்தாய் பொறுத்தியென்றன் பிழைபிதென வாறுமுக நிமலன் கூறும். (கக)

எவ்வூருன் பேரியாதிங் கென்னபணி புரிகிற்பா யியம்பா யென்ன, வவ்வூர்சத் திபவுலக மபனென்பேர் பணிபடைப்பென் றன்னேன் கூற, நவ்வூரஞ் சக்கரத்தோய் படைப்பாயே லான்மறையு நவிற்று யென்ன, வொவ்வூரு மகரமுன்ன ரிசையவிசர்க் காந்தமா யுரையா நின்றான். (கஉ)

உரைத்தவோ ரெழுத்தின்மனு வினுக்கருத்த மியாததனை யுரைத்தியென்ன, விரைத்தமல ரோன்மயங்கி வியர்த்தயாக் கையனுகி வெருளே லப, நரைத்தபெரு மூப்புடையே னுதலினுன் மறந்தனனு யகனே யென்ன, வுரைத்தவுரை தடுமாறி நடுக்கமுற்றான் முருகனஃ துணர்ந்து கூறும். (கங)

வேதமுத றெரியானை வேதனென வுலகுரைக்க விதியுண் டோ நீ, கோதனென வொருகரத்தாற் றலைநான்கும் பிதிரவொரு குட்டு விட்டிம், மூதறிவி லாதானைத் தொடர்பூட்டிச் சிறையிலிட்டிம் மூதண் டத்தைத், தீதகலச் சிருட்டியென வீரவா றுவைப்பார்த்துச் செப்பினனே. (கச)

இங்ஙனஞ்சின் னுளகல நெடியோன்மற் றொருதினத்தி லிறைவன் முன்சென், றிங்ஙனஞ்சிற் றறிவுடையேங் குடிபுரக்க வேண்டுமெங்களீசா வென்னஞ், வங்ஙனசொல் லியமாலை யெதுவேண்டு மெனவஞ்சத் தவனை யஞ்சா, தங்ஙனஞ்சின் னுட்பணிசெய் தமரவருளெனமுக்க ணமலன் கூறும். (கரு)

நயக்குமயன் றனக்கிடர்யா தெனமாயன் புகுந்தபடி நவிலக்கோழி, வயக்கொடியோன் றனைக்கூவி மலரவனைச் சிறைப்படுத்த வகையா தென்னக், கயற்கணிபா காமறையின் முதலெழுத்தின் பொருளறியாக் கசட னுமிவ், வயற்கொடியாஞ் "சிருட்டிசெயும் வணி கோட லணியன்றென் றறைந்திட்டானல். (கசு)

இவ்வாறு மதலைசொல விளமூரல் சிறிதரும்பி யெம்மான் வேதச, செவ்வாயான் சிறைவிடுதி பிரணவத்தின் பொருளீதான் செப்புவாயோ, வெவ்வாறு தெளிந்தனைநீ புகலென்னக் குருசீட ரியல்பியாதென்ன, வவ்வாய்மை புணர்ந்துமடி யினிலிருத்திச் செவிதாழ்த்தி யறையக் கேட்டு. (கஎ)

இப்பொருளை யாவரிடைத் தெரிந்தனைநீ யியம்பாயென் றிறைவன் கூற, மைப்படியுங் குழலுமையாட் கறிவிக்கு ஞான்றளியாய் வதிந்து கேட்டே, னப்பொழுதென் றிடச்சிந்தை யினில்வெகுண்டு கரந்தறித லடைவோ நீயு, மிப்புவனத் தீரெண்ணு யிரஞ்சென்ன மெடுக்கவென வியம்பி னானல். (கஅ)

இம்மொழிகேட் டிறைவியெழுந் தடிபணிந்து மதலையின்மே லிவ்வா றூன, வெம்மைபுரி வாருளரோ தந்தையர்க ளிவைபொறுத்தல் வேண்டு மென்ன, வம்மையிரங் கிடவாயி னவனியின்வா ழாமலகை யடவிக் கீழா, நம்மையருச் சித்துநித மனுவிலக்க நவின்றுபனு வணனுகி யாங்கண். (கக)

வசித்திருந்தாற் பிறவியொன்றாய் மறையோனு யரசகுரு வாகி நாளும், பசித்திருப்ப தேதவமாப் பன்னமணைக் கழுவேற்றிப் பதினாறுண்டு, சுசித்ததமிழ்ப் பதிகங்கள் நம்பதிக டொறுநவின்று துலங்கிப் பின்னர், விசித்திரமா யிவணடுவின் வீற்றிருக்க லாமென்றான் விமலனம்மா. (உ௰)

அருள்புரிந்த விறைவனையு மன்னையையு மடிபணிந்தாங் கனுஞைபெற்றுத், தெருள்சிறந்த விறல்வாரு முதற்கணங்கள் புடைசூழத் தேர்மீ தேறி, மருளகன்ற மாலுலக முதலவெல்லாங் தமையனை வழிக்கொண் டேகி, யிருள்சிறந்த மணிமிடற்றுத் திருக்கோளே சன்பதியி னெய்தி னானல். (உக)

வருகுமர குருபரனு மண்மீது விழுந்தெழுந்தவ் வரையைச்சூழ்ந்து, முருகுவிரி யகிலைக வனத்துறையும் பொய்யாத மொழியான் றன்னைக், கருகுமணி கண்டசிவ தருமேச மூர்த்திதனைக் ககோளநாதப், பெருகுகரு ணைக்கடலைப் பன்னிருகண் ணன்முகந்து பெரிதுண் டானல். (உஉ)

பன்னிருகை களுங்குவித்தோ ராறுதிரு வாயாலும் பாடியாடி, யென்னுயிராம் பரம்பொருளே யீறுமுத னடுவுமிலா தேக மாகித், துன்னியெனை யாட்கொளவிங் ஙனந்தோன்றுங் கருணையையெஞ் சொல்வே னென்னப், பன்னெடுநாட் பூசைசெய்தோ மெனுமனு வைத் தினமிலக்கம் பகருங் காலை. (௨௩)

வீரவா குவைமுதலோர் பூசைக்குஞ் செபங்களுக்கும் வேண்டு மியாவுஞ், சேரவே கொடுவந்து யாகசா லையைத்திருத்திச் செந்தீக் குண்டஞ், சாரவாங் கமைத்துமண்ட லாதிகள்வே திகைகள்பல சமைத்துத் தண்டெண், ணீரவா வியதான சரவணத்தை யழைத் தாங்க ணிலவச் செய்தார். (௨௪)

அச்சரவ ணத்தடத்திற் படிந்துவெண்ணீ றுடன்முழுது மணிந் து காகக், கச்சரையன் விழிமணிமா லிகைபூண்டா கமங்கண்முனங் கரைந்த வாற்று, ணிச்சநிரா மயவடிவாஞ் சிவதருமே சனைமனத்தி னிறுவிப் பூசை, யிச்சைநிறை வேறவெனச் சங்கற்ப விதிமுறையா லியற்றிப் பின்னர். (௨௫)

ஆசமன மதரசுத்தி தொடுமிடங்கை சுத்தியங்க கரநி யாசம்
பேசுபிரா ணாயாம மிருடிசந்தந் தெய்வமொடு பூதஞ் சத்தி
மாசில்கீ லகஞ்செபநி வேதனந்தி யானமுதன் மனுவுக் கேற்ப
வாசகனுந் தருப்பணமோ மம்மறையோர் போசனமு மன்பா லாற்றி.

நிறைந்தபின்னர்க் குறைந்தமதிக் கொழுந்தினைக்கங் கையைப் பணியை நிறப்பூங் கொன்றைச், சிறந்ததொடை யலையணியுஞ் சடைமுடியும் பொலிமுகமுந் திருக்கு மூன்றுங், கறந்தபா லனையதிரு மேனியுஞ்சங் கக்குழையுங் கரங்க ணான்கு, மறந்தயங்கு புலியதளு முடையபிரான் றோன்றுதலு மகிழ்ச்சி கூர்ந்து. (௨௭)

அன்புருவா யெதிர்பணிந்து கனைந்துருகு மாறுமுகத் தமல மூர்த்தி, யின்புருவாந் திருமேனி யிருகரத்தா லெந்தைபிரா னெடுத்துப் புல்லி, முன்புளைதந் திடுமாறே காவிரிசூழ் சோணாட்டின் முதமீக் கொண்ட, தன்பொருவில் சீகாழித் தனித்தலத்திற் கவுணியர்கோத் திரத்திற் றோன்றி. (௨௮)

ஆண்டொருபா னறிருந்து பதினொரு யிரம்பதிக மன்பிற் பாடி, மூணடிமேவ் வொருபிறப்பாற் பதினொரு யிரம்பிறப்பு முற்றுவா யென் றீண்டியவன் புடனுரைத்து மறைந்தருள வின்னருளே யேத்திப் போற்றிக், காண்டருதங் கணங்களொடு மெழுந்தருளிக் கந்தகிரி கலந்தான் செவ்வேள். (உசு)

வேறு.

இக்க தைச்சருக் கத்தைய யம்பினோர்
மக்க ளோடு மருவுமெண் வாழ்க்கையு
மிக்க வில்லுல கத்தினின் மேவிப்பின்
மைக்க னத்தன் மலரடி சார்வரால். (கூo)

முருகன்றவம்புரி சருக்கம் முற்றும்.
ஆக விருத்தம் சஉகு.

---

# சத்தகன்னியர் மதுவுருவான் சருக்கம்.

அருந்தவக்கா சிபன்மகனுஞ் சண்ட னென்னு மசுரனரா சியற்றுங் காலமரர் நொந்து, திருந்துகயி லையில்வாழுஞ் சிவன்பாற் செப்பத் தேவிசா முண்டியுட னெழுவர் சென்று, கரும்பனைநேர் சண்டனைச் செற் றடைமி னென்னக் கதழ்ந்துசென்று வென்றிங்குக் கடிது மேவிப், பெருந்தவயோ கத்தெழுவர் நறுந்தே னாகிப் பின்னுகற்காட் டடவுதவும் பெற்றி சொல்வாம். (க)

வேறு

கொங்கா ரிதழிமணிக் கோடீர நின்றிழியுங்
கங்கா நதியின் கரையுளகாங் காரமதிற்
சங்காழி யான்றனையன் சந்ததியென் றேயுரைக்கு
மங்காத் தவம்புரிந்து வாழ்கா சிபனிருந்தான். (உ)

அன்னான் மனைக்கிழத்தி யாய திதியவற்சார்ந்
தன்னு யதனையோ வென்றிறைஞ்சிக் கண்கலுழ்ந்திட்
டொன்னுரா லென்றனைய ரெல்லா மொழிந்தனர்யான்
றன்னுளும் வந்தியெனப் பன்னவுறை வேனென்றுள் (ரு)

என்னுங் குறிப்பை யினிதுணர்ந்து காசிபனும்
பொன்னனை யவளோடும் பூங்காவி னிற்புகுந்தாங்
கன்னம் பெடையோ டணைவதென மன்மதனார்
சின்னங் குயின்முழக்கத் தேவியொடுங் கூடினனால். (௪)

கூடி மதனவிழாக் கொக்கோக சாத்திரத்திற்
பாடின பாட் டிற்குப் பயனெழுது மாறெனவங்
காடி யகாற் சண்ட வசுரன் முதலோரெழுவர்
பீடுபெறுஞ் சேனை பெருத்திடுவெள் ளத்தொகையோர். (௫)

தோன்றும் பொழுதே சுடர்மழுவும் வச்சிரமு
மூன்று பெருவேல்வா ளொண்கதையுங் கொண்டவரா
யீன்றவர்முன் வந்திறைஞ்சி யெங்கடமக் கிவ்வுலக
மூன்றும் பணிபுரியும் வண்ண மொழிதிரென்றார். (௬)

ஆங்கு முனிகேட் டருட்கோகன் னத்தடைந்து
மாங்குயிலோர் பாகன் மலர்க்கழலை யுண்ணினைந்து
தீங்கில்பெருந் தவங்கள் செய்மமி னுமதுமனப்
பாங்கி னருளும் பரமேச னென்றுரைத்தான். (எ)

அந்தவுரை சண்ட வசுரன்முத லோர்கேளாச்
சிந்தைகொடு செல்வத் திருக்கோகன் னத்தடைந்தாங்
கெந்தவகை நற்றவங்கள் செய்வோ மெனமுனிவ
னைந்தெழுத்தை யோதி யதன்முறையுந் தேற்றினனால். (அ)

வெண்ணீறு கண்மணியின் மேன்மை தனைவிளக்கித
தெண்ணீர் முடியானைச் சிந்தையிற்கண் டானந்தக்
கண்ணீர் வழியக் கனலைந்தி னப்பணிருந்
துண்ணீர்மை நீங்கா தொழுகும்வகை யும்முரைத்தான். (௯)

தந்தையுரை யுட்கொண்டு தானவர்கோன் யச்சிமதிக்
கெந்தைதிருக் கோகன்னத் தேகியவ்வா றுந்தவங்க
ளைந்திருநா றுண்டுபுரிந் தாங்காலம் வெள்விடைமே
லிந்துமுடி யானங் கெழுந்தருளிக் காட்சிதந்தான். (௰)

சண்டா சுரனெழுந்து சம்புபதந் தாழ்ந்திறைஞ்சிக்
கொண்டாடிச் சிந்தை குறித்த வரங்களொடு
கண்டார் செறுநர்களுங் காணா வுருப்பெறவும்
விண்டா னடைகவென விண்டான் விமலனுமே. (கக)

அண்ண லளித்தவர மியாவையும்பெற் றுண்மகிழ்ந்து
விண்ணவாக ளெல்லாம் வெருவவிந்தி யாடவிப்பாற்
கண்ணகன்ற மாயா புரங்கண்ட ம்மாநகரில்
விண்ணிறையுந் தேவர்களு மேவல்செய்ப வீற்றிருந்தான். (கஉ)

துட்டா சுரர்செய் துயர்பொறுக்க மாட்டாராய்
மட்டார் மலரயன்பால் வந்துரைக்க வாங்கவரோ
டட்டாக் கரன்பா லணைய வவனெழுந்தே
யெட்டா முருவ னெழிற்கயிலை வாயிலுற்றி. (கங)

உம்பர்முத லானோ ருடனெய்த நந்தியுய்ப்ப
வெம்பெருமான் பொன்னடிதாழ்ந் தெல்லோ ருடன்முறையிட்
டம்புவியிற் சண்டன்முத லாமவரால் யாமெலிந்தோஞ்
சம்புவே காத்தி சரணஞ் சரணமென்றான். (கச)

சரணடைந் தீரஞ்சன்மின் சஞ்சலங்க டீர்கென்று
பிரணவத்தின் பொருளானோன் சண்டன்முதற் பேயனையார்
முரணொழிப்பத் திருவுளத்தின் முன்னிவிறற் சாமுண்டி
பரவுரவுத் திரிகுன்றம் படுத்தகவு மாரியொடு. (கரு)

ஆழிமிளிர் செங்கரத்தி னடல்புனைநா ராயணியே
வாழிவரா கியினோடு மாண்புபுனை பிராமியே
சூழுமயி ராணியெனு மெழுவர்களைத் தோற்றுவித்துப்
பாழிவிறற் சண்டன்முதற் பற்றலரைத் தெறவிடுத்தான். (கசு)

சென்றவர்கள் சண்டன்முதற் றெவ்வர்பெருங் குழுவனைத்துங்
கொன்றிந்த வெள்ளிக் குவட்டி னிடையணைந்து
நின்றிந்து வேணியனை நேரிறைஞ்சிக் கைதொழுது
மின்றங் கிடையார்தாம் விண்ணப்பஞ் செய்குவரால். (கஎ)

தேவரருட் கட்டளையாற் சென்றிமையோர் தெவ்வர்களா
மியாவரையுங் கொன்றிங் கணைந்தோ மினிப்புருடர்
மேவும்வகை செய்பாறு மேதகைய கன்னியராய்
மூவுலகும் போற்ற வருண் முற்றுங் கருதியென்றார். (கஅ)

அம்மாத ரிவ்வா றறைப வருட்கடலா
மெம்மான் புலிமே லிருநாவ லந்தீவி
னம்மா தென்பாண்டி யணிநாட்டிற் கோளேச
நம்மா நகரனுகி நற்றவங்கள் செய்திரென. (கக)

எம்பெருமான் றன்விடைகொண் டேகிக் கணேசனவன்
றம்பி குமரேசனுமுன் சார்ந்தவழி யாயவன்மே
வும்பதிக ளியாவு முறைந்து பணிந்தருகி
நம்பர்கோ ளேசமெழு மாதர்களு நண்ணினரால். (உய)

சென்றவெழு மாதர்களுஞ் சேணிலத்தில் வீழ்ந்திறைஞ்சிக்
குன்றைவல மாகவந்து கோளேச ரைப்பணிந்து
மன்றல்கமழ் கொல்லியடி வள்ளல்சத்திய வாகீசர்
பொன்றயங்கும் பொன்னடிகள் போற்றித் துதித்தனரால். (உக)

துதித்தபின்னர் காமாங்குத் தோய்ந்தாடக் கங்கைதனை
மதித்தனரக் காலுயர்ந்த வானாறு வானாறுய்க்
குதித்தொருதண் சுனையாகிக் குலவவெழு மாதர்களும்
அதிற்குடைந்தே யக்கொடுநீ றஞ்செழுத்தோ திப்புனைந்து. (உஉ)

கந்த மலர்கள்பல கையா லெடுத்தணைந்தாங்
கிந்து முடியார்க் கிருமூன்று காலையினுந்
தந்திரத்திற் கூறுந் தகைமையொடும் பூசித்துப்
பைந்தொடியார் யோகம் பயிலுநெறி நின்றனரே. (உங)

வேறு.

இயமநிய மாசனம்பி ராணயா மம்பிரத்தி யாகா ரம்பன்
னயமுறுதா ரணைதியா னசமாதி யட்டாங்க ணம யோகம்
பயிலுறுகா லாருதா ரத்தினில வியவொளியாம் பரனைக் கண்டு
வியனுறுபே ரானந்த மதுவுண்டு தேக்கி யன்பு மீக்கூர்ந் தாரால். ()

இச்சிவயோ கம்பலைநா ளியற்றுதன்முற் றுங்காலை யெம்மா
னோர்ந்து, பச்சிளங்கொம் பொருபாலும் பான்மதிப் மான்மழுவும்
பணிப்பூ ணூலுங், கச்சணியும் புலியுரியும் வெண்டலைமா லையுஞ்சம
னைக் கடிந்த தாளுஞ், முச்சகமு நிறைந்துதன திச்சைவடி வாய்த்தோ
ன்ற முன்னங் கண்டார். (உரு)

கண்டவுட னெழுந்துகரஞ் சிரங்கூப்பி யானந்தக் கண்ணீர் மல்கப்
பண்டயங்கு மொழியதனெற் பார்ப்பதிபா காசரணம் பரிவுகூறுந்
தொண்டருள நீங்காத சோதிவடி வேசரணஞ் சுருதிக் கெட்டா
முண்டகத்தா ளாய்சரண முக்கண்ணு சரணமென முன்வீழ்ந் தே
த்தா. (உசா)

அதிமுழக்கு மெழுமாதர் முகநோக்கித் திருக்கோளேச் சுரன
ன் பாகிக், கதிபுறக்குஞ் சிவயோக பூசையினுங் களைப்போன்றோர்க்
காண்கி லோமென், றதிசயித்து நம்முளம்வேட் டனதருது முறை
த்திரென வடிபிற் றழ்ந்து, மதியிருக்கு முகத்தினர்யாம் நித்தியகன்
னியராக வதிய வேண்டும். (உஎ)

திங்களமு தருத்திடுநின் றிருமுடிக்காட் டபிடேகத் திரவி
யத்தின், மங்கலமா கியசெழுந்தேன் வடிவாயிச் சுனையருகின் வரை
மீ தோங்கிப், புங்கவராட் டுறமகிமை பெறவேண்டு மலையெம்பேர்
புனைய வேண்டுந், தங்குசிவ தருமபுரிக் குங்கன்னி புரமெனும்பேர்
சாற்றல் வேண்டும். (உஅ)

எனமாத ரெழுவர்களு மிவ்வண்ணங் கனிந்திரப்ப வெம்மா னும்மங்
கனமாக வெனவருளிக் கருணைவடி வாமலக நறுங்கா வூடு
மனவாச கங்கடந்த தனிமுதலா மிலிங்கத்துள் மகிழ்வி னோடும்
பனகாப ரணருமயிக் கியமானு ரெழுவருமப் பதியுற் றுரே. (உகூ)

சத்தகன்னியர் மதுவுருவானசருக்க முற்றும்.

ஆக விருத்தம் சஙிச.

---

# பதஞ்சலிமுனிவரருள்பெற்றசருக்கம்.

வியாகரண சூத்திரபா டியஞ்செய்வான் வேழமுகத்
தயாபரனா கியபெருமான் றனைப்பனா டவிமுனிவ
னயாவெனவேண் டிக்கோள புரத்தினணைந் தரற்பூசை
செயாவிருப்ப வனையருளிச் செய்தகதை தெரிவிப்பாம். (க)

வேறு.

தூயதிருப் பாற்கடலிற் சேடன்மிசைச் சிவயோகத் துயில் கூர் காலை, மாயனொரு நாளெழுந்து நின்றுகரஞ் சிரங்கூப்பி மலர்க்கண் மூடித், தாயினுநல் லன்புடைய சங்கரமா தேவவெனச் சர்ப்ப ராசன், நாயகநீ கண்டவதி சயமென்னே வடியேற்கு நவிற்று கென்றான். (உ)

அக்காலை யாதிகயி லாயமெனுங் ககோளேசத் தமரர் வாழத், தக்கார்முன் சிவதரும மணிமன்றிற் சிவகாமித் தாய்கண் காணத், தெக்கான திசைக்கிறைவ னஞ்சவொரு தாளெடுத்தோர் திருத்தாளூன்றி, மிக்காமைந் தொழினடனம் புரிந்தனனத் திருக்கூத்தை வியந்தா மென்றான். (ங)

என்னலுமத் திருநடன மெளியேற்குங் கிடைக்குமா றிரங்கா யென்று, பன்னகநா யகனுரைப்பத் திருநெடுமால் வியாகரண பாடியத்தை, நன்னயமார் தரப்புரிவா னினியொருகாற் ககோளபுர நடப்பா யன்னா, ளன்னநட தரிசனநிற் காகுமென வவ்வுரகன் ளகத்துட் கொண்டே. (ச)

வேறு.

முன்பொருகாற் கயிலைமலை யமர்ந்தமுக்கண் மூர்த்திடம ருகத்தினின்று முளைத்த சத்த, மென்பதா மயேசுரசூத் திரத்திற் போந்த விலக்கணத்தை விரித்துரைப்பா னெண்ணி நீங்கா, வன்பினொடைங் கரக்கடவு டன்னைப்பூசித் தப்பொருளியான் விரிக்கும்வண்ண மருள்வா யென்னத், தும்பிமுகத் தெம்பெருமா னருட்க ணோக்கிச் சுருதிசொலுந் திருவாக்காற் சொல்லா நின்றான். (ரு)

ஆதியில்லான் முதற்பூசை கொள்ளும் வண்ண முருடருமா திருக்கலமுண் டஃதெங் கென்னின், மேதினியிற் பரதகண்ட மிசையாம் பாண்டி வியனாட்டிற் பன்னான்கின் மிகுதி யான, கோதில்பெரும் பழம்பதியாந் திருக்கோ ளேசங் கொண்மகிமை யெவராலுங் கூறற் பாற்றோ, சோதிமய மாகியவத் தலத்தை நீயுந் துன்னியங்கட் பரஞ்சுடரைத் துதியா நிற்பாய். (௬)

சொற்பொருளே வடிவான சிவதன் மேசன் றனைத்தாளாஞ் சுடரினுள்ளத் துரிசை நீக்கி, நற்பொருளைத் திரட்டுமென விடைகொண்டேகி நானிலமா நங்கைமுகத் திலதம் போன்ற, வற்புதக்க கோளபுர மடைவா னுற்றி னமர்கருணைப் பரசிவன்வீற் றிருக்குந் தெய்வப், பொற்புறுபற் பலமகிமை துன்னுங் கங்கைப் புரிசடையான் றளிபலவும் போற்றிப் போந்தான். (௭)

போந்தபதஞ் சலியாமா முனிவன் கன்னிப் பொருப்பைவலமாவந்து புவிமேற் றொழுந்து, காந்திமதிச் சடிலர்பொய்யா மொழீசனெல்லிக் காவுறையுஞ் சிவதருமக் கடவுள் மேலாய்ச், சேர்ந்தகோளேசரா வுடைத்தா யெங்கள் சிவகாம வல்லிபசுங் கொடியைப்போற்றிப், பாந்தளூல கத்தின்வருங் கங்கை நீரிற் படிந்துவெண்ணீ றக்கமணி படிவம் பூண்டு. (௮)

வேறு.

கோட்டுநறு மலர்முதலா நான்குவகை மலருங் கொய்துக் கூவிளந்தளிருங் குல்லையிளந் தளிரு, நீட்டிளம்பச் சறுகுதிலந் தண்டுலமுங் கொண்டு நிறைந்தபரி பூரணனை நியமமொடர்ச் சித்து, நாட்டநடுநாடியின்வழ் திருகலையு நிறுத்தி நாதாந்தத் திருநடன ஞானதினகரனை, யேட்டிதழா யிரத்தமரு மலர்நடுவ ணிருத்தி யிந்துவின்மண்டலத்தமுத மெண்ணிலவாண் டருந்தி. (௯)

திருந்துநிரா லம்பசிவ யோகமதி லிருக்குஞ் செயலுணர்ந்து கடலெழுஞ் செங்கதிர்கோ டியென்னப், பொருந்துதிரு மேனியும் வெண் பொடியணியு மார்பும் புலிபதளு மழுமானும் பொங்கரவப் பணியு, மரும்புமிள மூரலுமை யொருபாலு நீல மணிமிடறும் விழி மூன்று மம்புலிச் செஞ் சடையுங், கருந்துளவ மாலறியாக் கழல்களுமுன் காட்டக்கண் ணிரண்டா யிரங்களினாற் கண்டனன்மா முனிவன்.

வேறு.

கண்டெ ழுந்து கரஞ்சிரங் கூப்பியே
தண்ட மென்னத் தரையிடை வீழ்ந்துவீழ்ந்
தண்ட நாயக வாரண ரூபமார்க்
கண்ட னுய்ய வெமனைக் கறுத்தவ. (௧௧)

கால மூன்றுங் கடந்த நிராமயக்
கோல னேமுக் குணங்கட்க தீதனே
ஞால மேழையு முண்டுமிழ் நாரணன்
பால னைப்பொடிக் கும்விழிப் பாலனே. (௧௨)

பாலு நீரும் பரிதியுந் திங்களு
மேலும் பண்ணு மிசையுமெண் ணெய்யுமா
யாலுந் தீயு மயமுங் கலந்துறல்
போலு மெங்கு நிறைந்தவ போற்றியால். (௧௩)

என்று போற்றலு மீச னருள்புரிந்
தன்று வேண்டுவ தியாதறை வாயென
நன்று நானவ் வியாகர ணத்துக்குத்
துன்று பாடியஞ் சொற்றிட வேண்டுமால். (௧௪)

ஈத லாமலு மேமநன் மன்றிடைக்
கோதை காணக் குனிக்குநின் கூத்தினை
பேதை யேழ்பவப் பிழை யொழிந்தொரு
தீது மின்றித் தெரிசிக்க வேண்டுமால். (௧௫)

என்று மாமுனி போற்றி யிறைஞ்சிடக்
கொன்றை வேணிக் குழகனு நன்றெனு
வன்றி லிங்கத் தயிக்கிய மாயினான்
மன்று ளாடிய மாநடங் கண்டபின். (௧௬)

வேறு.

ஒன்ப தாகிய வியாகர ணங்களுக் குரையீ
தென்ப தாகவே பாடியம் விரிவதா யியற்றி
யன்ப தாயிறை கயிலையின் வந்தாங் கேற்றி
முன்பு மேபொற்கோ ளேச்சுரத் திருந்தனன் முனிவன் ()

பதஞ்சலி முனிவரருள் பெற்றசருக்க முற்றும்.

ஆக விருத்தம், ௪௭௧

# அகத்திய புலத்தியர் பல்வுருவான சருக்கம்.

---

பனிவரையி னுமைமணத்திற் பார்தாழும் பொழுதுதமிழ்
முனிவனைத்தென் றிசைக்கேவ முனிவணங்கி மணக்கோல
மினியெந்நாள் கிடைக்குமென வெமக்கினிதாங் ககோளபுரந்
தனின்மருவித் தருதுமெனுஞ் சரிதத்தை விரித்துரைப்பாம். (௧)

செம்பொன்மக மேருவதன் றென்பாலி மாசலத்தி
னெம்பெருமாட் டியைமன்ற லிறைவனியற் றுங்காலை
யும்பருருத் திரர்முதலோ ரொருங்குசெறிந் தமையாலே
யம்புவிதென் பாலுயர்ந்த தகிலமெலாம் விதிர்ப்பெய்த. [௨)

மெலியாநின் றமரரெலாம் வேதநா யகவுலகஞ்
சலியாது நின்னொப்பார் சார்ந்திடிற்றெக் கணஞ்சமமென்
றொலியாநின் றிறைஞ்சுதலு மும்பர்பிரான் குறுமுனியே
வலியானென் றம்முனியை வளப்பொதியிற் புகச்சொற்றான் (௩)

அவ்வேலை யவ்வேலை யாசமித்த முனிவரனும்
வைவேலின் விழியுமையாண் மணங்காணா தேகுவனே
லெவ்வேலை யிம்மன்ற லெழில்காண்பே னெனவிரங்கு
மவ்வேலைத் தெள்ளமுத மஞ்செவியி லூட்டுதல்போல் (௪)

பெருங்கருணை வடிவான பெம்மானம் மாதவனை
மருங்கழைத்துப் புறநீவி வையகத்தின் மேலாக
விருந்தசந்த னாசலத்துக் கேகியுல கிடர்மாற்றி
நெருங்குநெல்லி வனமென்ன நிகழ்த்துதல மொன்றுளதால். (௫)

அத்தலநீ சென்றுறைதி யந்நாளிற் பன்னாங்கி
னுத்தமமா கியகொடுங்குன் றுயர்வரைக்கு மூலமதாம்
மித்தென்னுங் கன்னிவரை மீதிருக்கு நம்மையருச்
சித்திடுவா யிம்மன்றற் சிறப்பையங்குக் காட்டுதுமால். (௬)

என்னவிடை யருளியபின் பிறைவனடி தாழ்ந்திறைஞ்சி
யன்னபுலத் தியனான வந்தரங்கச் சீடனுடன்

சொன்னபொதி யாசலத்தைத் துன்னியவண் மீதுறைந்து
நன்னிலமுன் னிலமாக்கி நாயகன்கட் டளைவழியே. (எ)

பூமகட்கு முகமான பொற்றிருக்கோ ளேசநண்ணி
நாமகளங் கெய்துதலி றைட்டா ருங்களிப்பத்
தேமலரா மலகவனஞ் சென்றுபுலத் தியனோடுந்
தாமவரை வலஞ்சூழ்ந்து தரணிமிசை வீழ்ந்தெழுந்து. (அ)

சென்னிமிசைக் கரங்குவித்தஞ் சலிசெய்து தேவர்கட்கு
முன்னவனே யாழிபெற முன்னுளிற் கண்மலரை
யன்னதிரு மால்சாத்து மம்புயத்தா ளாய்சரணங்
கன்னிவரை முக்கட் கரும்பேயின் றாள்சரணம். (௯)

என்று பலவா யிருந்தமிழி னாற்றுதிக்க
வன்றுமணக் கோல மளிப்ப னெனச்சொற்றான்
சென்றமரர் பூமழைகள் சிந்தத் திசைமுகன்மால்
மன்றல்கம ழைந்தருவாழ் வானு டருஞ்சூழ. (௰)

அந்தரத்திற் றுந்துமிக ளொந்துமுழங் கக்கரிய
கந்தரமு மைமுகமுங் கண்கள்பதி னைந்துமுறீஇக்
கொந்தளக மாதைமணங் கொண்டதிருக் கோலமாச்
சுந்தரநற் காட்சிதரத் தொழுதுதுதிப் பானானன். (௰௧)

வேறு.

எளியேங்கட் காவிரங்கி யிம்மன்றற் காட்சிதந்த விறைவா போற்றி, யளியோங்கு கொன்றையந்தா ரம்புலிச்செஞ் சடைபுனைந்த வண்ணல் போற்றி, களியோங்கு புகர்முகற்கு முதற்பூசை பெறவரு ளுங் கடவுள் போற்றி, தெளிவோங்கு தமிழ்ப்பதிகம் பாடமுரு கற் கருளிச் செய்தோய் போற்றி. (௰௨)

மாதரெழு வருந்துதிப்ப நித்தியகன் னியராகி மதுவ தாகிப் பூதரந்தா னவர்நாமம் பொருந்துறுமா றருள்செய்த புனிதா போற்றி சீதரனுக் கெண்ணிறந்த சென்மமொழித் திரைந்தாய்ச் செனிக்கும் வண்ண, மாதரவு செய்தசிவ தருமபுரக் கோளசத் தரசே போற்றி.

நவியா கரணத்தின் பொருடெரிந்து பாடியந்தா னவிற்றும்.
வணணங், தவமுடைய பதஞ்சலிமா முனிவானுக் கருள்புரிசற் குரு
வே போற்றி, மவுனசிவ யோககோ ளகவிருடி தனையிலிங்க வடி
வுட் கொண்டு, புவனமெலாந் துதிசெய்யத் திருக்கோ ளேசனெனப்
பொலிந்தாய் போற்றி. (கச)

வேறு.

பூங்கணைச் செல்வ னீறுப் பொடிந்திடக் கடவ தென்ன
மாங்குயி லுமையாள் சாபம் வகுக்கமா மடந்தை யேங்கி
யீங்கணாந் தருந்த வங்க ளியற்றிட விரங்கிப் பின்ன
ராங்கவ ளநங்க ளாக வருள்செயும் பரனே போற்றி. (கரு)

உகங்கணுன் கினுக்கும் வெவ்வே றுயர்தரும் பெயரைக் கொண்டு
மிகுந்தவேய்க் குலங்க ளாயும் வியன்கொள்பிப் பிலமதாயுஞ்
சகம்புகழ் பெண்ணை யாயுந் தருநெல்லி யடவி யாயும்
பகர்ந்தகா நிழற்கீழ் வைகும் பரமனே போற்றி யென்றான் (கசு)

இவ்வித மாகப் போற்றி யிறைஞ்சினின் றிவ்வ ரைக்கட்
டிவ்விய பலவா யாங்க ளிருவருஞ் சிறந்து நாளு
மோவ்வுநின் னபிடே கத்துக் குதவிய பலங்க ணல்க
நவ்வியங் கரத்தா யிந்த நல்வர மீந்து பின்னர் (கஎ)

வடமொழி யிலக்க ணம்போன் மருவுநல் லிலக்க ணத்தைத்
திடமுறத் தமிழிற் செய்யத் திருவருள் புரிதி யென்னத்
தடமுறு நீம்ப லாவாய்த் தங்கிநஞ் சண்மு கேச
னிடமதி யிலக்க ணத்தி னியல்பினிப் பெறுக வென்றான். (கஅ)

கூறிய வண்ண னெல்லிக் குளிர்நிழ லிலிங்கத் தெய்த
வாறுமா முகவன் செய்ய வடியிணை யிதயத் துன்னி
யீறிலாத் துதிகள் செய்ய வெழிற்குக னுணர்ந்து பாந்தட்
சீறுமா மயின்மீ தேறிச் செந்தமிழ் முனிமுன் வந்தான். (ககூ)

வேறு.

வருகின்ற குமரகுரு பானுபய சரணமலர் வனசமெண்ணி, யுரு
கன்பு தலைசிறப்ப விருகரமுஞ் சிரமுகிழ்ப்ப வுவகை பொங்கி, முரு
குந்து மலர்க்கடப்பந் தாரணியு மலர்மார்பு முகங்க ளாறும், பெரு
கன்பு தருகருணை யீரா று திருவிழியும் பிறங்கற் றோளும். (உ0)

அக்கரங்கள் பன்னிரண்டி னுதித்தர் பன்னிருவ ரமர்ந்த வா
போற், சக்கரங்கண் முதலாம்பன் னொருபடைக ளொடுவேலுந் தய

ங்க நோக்கி, மிக்ககதி ரொளிவயிரக் குண்டலங்கண் மணிச்சுடிகை வெய்யோர் கோடி, தொக்கதெனவணிந்திருக்கு மெழிலோன் முன்னின்ற சுடரே போற்றி. (உக)

இருபாலும் புயவரைமேற் பசுங்கொடிசெம் பொற்கொடியு மிசைந்த வாபோன், மருவாருங் குழற்றெய்வப் பிடியொடுவள் ளிக்கொடியும் வைத்தாய்போற்றி, திருவார்சே வற்கொடியு மயிற்பரியு நின்றெளிப்பச் சிறந்தாய் போற்றி, குருவான மந்திரச டாக்கரனே யெனப்போற்றிக் குடந்தம் பட்டான். (உஉ)

நின்றகும்ப முனிவரனை யன்புதுன்ற விழிக்கருணை நிரம்பிநம்மை, யின்று நினைந் தனைகுறித்த தென்கொலெனப் பதஞ்சலிமா முனிபோ லியானு, மொன்றுதமி ழியலனைத்தும் வழுவாது விரித்துரைக்கு முறுதி செய்வா, யென்றிறைஞ்சிக் கன்னிவரை முடியுறைந்து தமிழ்பயனன் கியம்பாநின்றான். (உரு)

அதிகார மைந்தாயு மவ்வதிகா ரத்துளொவ்வொன் றையைந்தாயும், விதிமேவு சூத்திரங்கள் பலவாயும் விதியினைப்பின் விலக்காநின்ற, மதியான சூத்திரஞ்சிற் சிலவாயுஞ் செந்தமிழின் வரம்புகண்டு, பதியாயிங் கிருந்துபல பலவாக விரித்தியெனப் பகவன் கூறி.

கூறியசண் முகக்குமர குருபரன்முன் பாவிருந்து குவலையத்துள், வீறியதண் டமிழினிலக் கணங்கள்பல பலவாக விரித்துக் காட்டி, நீறுபுனை திருவுருவச் சிவதருமபுரச்சிவனை நிதமும்போற்றி, யீறில்பல வுருவாகப் புலத்தியனே டிருக்கின்று னென்றான் சூதன்.

சிரித்தெயின்மூன் றையுமெரித்த சிவதருமே சன்குமரன் றிருத்தாள் போற்றி, விரித்துரைத்த தமிழ்முனியும் புலத்தியனும் பலவுருவாய் விளங்கா நின்ற, சரித்திரத்தின் பொருள்குறித்துப் பிறர்க்குரைத்துக் கருத்திருத்துந் தன்மை யோர்க, ளருத்தமொடு தருகாமியங்கள் பெற்றுச் சிவலோகத் தமர்த றிண்ணம். (உசு)

அகத்தியபுலத்தியர் பலவுருவான சருக்க முற்றும்.

ஆக விருத்தம் சகஎ.

# இலக்குமி தவம்புரி சருக்கம்.

பாற்கடற் பிறந்த திருமகள் கைலைப் பறம்பினோர் மதலையை வேண்டி, யாற்களத் திறைசெங் கமலத்தாள் வணங்க வவனுங்கா தலற்றநீதோ மென்னச், சேற்கண்மா தென்னை யலாதுகேட் டவி னுன் சிறுவன்கண் ணழற்படு மென்றான், மாற்கலி துரைத்துக் கசோ ளமா புரத்தின் வதிந்துமாற் றியகதை வகுப்பாம். (க)

அரியயன் முதலா மமரருங் கால மறிந்திறை யானையிற் பணி தற்; குரியதா யானை முகனுயர் முருக னுமையிவ ரிருப்பதற் குரித் தாய்ப், பெரியதா கியமேம் பாட்டினை யுடைத்தாம் பெருந்திருக் கைலையங் கோயில், விரியொளி யணைமீ தென்னையா ளுடையோன் வீற்றிருந் தருளுமோர் பொழுதில். (உ)

இந்திர நீல மொடுங்கவுத் துவமு மிருகவுட் டுளையநாற கோட் டுத், தந்தியுந் தருவு முச்சயிச் சிரவத் தவளவாம் பரியுமா ரமுதுஞ், சந்திர கலையுஞ் செனித்திடுங் காலைச் சாற்றிவைக் கணியதா யுதித்த, விந்திரை யென்னுந் திருமகள் கண்ணீ ரிறைத்தங்க ணருச்சனை புரி ந்தே. (ங)

கனக்குழற் றிருமா துளங்கனிந் தேத்தக் கண்ணுத லோன்றுபு திருமா, றனக்கொரு மனைவி யாயநிற் கேது சஞ்சல மென்றறைந் தருள, வனக்கொடி யோனுன் மகவெனத் தெய்வ வரம்பையர் சொ லும்பொழு தனலை, மனத்திடைத் துறுத்தா லெனும்பெருந் துயர மாற்றுவா ருனையலா லெவரே. (ச)

புதல்வரைப் பெறுத லில்லின்வாழ்க் கைக்குப் பொருந்துறு மருங்கல னெனநூன், முதன்மொழிந் திருப்ப வெட்டிலக் . குமிக்கு ண் முதன்மையா கியபெருந் திருவைச், சதமெண வெளியற் குத வினை யிதற்கோர் தனையனில் லெனின்வறி தாவற், புதவணி சுமந்து மங்கலத் திருநாண் புனைந்திலா மடந்தையர் போல்வேன். (ரு)

அன்றிப்பு மலட்டிச் சென்மமென் றுலகோ ரறைபழிப் பிது
வரை யமைக, மன்றுணின் றாடி புலகெலா மாட்டும் வள்ளலே யபய
மென் றிரந்து, தன்றனி மூர்த்தி யிருகையி னாலுந் தாங்கிநிற் பாடலை
நோக்கித், தென்றலந் தேரோ னுன்மக னாகச் செனிக்குவ னென்ன
வாய் மலர்ந்தான். (௬)

மலர்ந்தசொல் லமுத வாரியின் மூழ்கி வனசமான் விடைபெ
றுங் காலை, நிலம்புன லின்றி விளையுமோ வென்னை நினைகிலை நீவரப்
பெறலா, னலம்பெறாய் மாயன் மனைவிகே ளுலக நாயகன் றருவர
மவனு, லுலர்ந்திடு மென்னச் சபிக்கநொந் தாழி யுறங்குவா னிடத்
திலுற் றனளால். (௭)

உற்றவ ளிங்க னுற்றன யாவு முரைத்துமேற் செய்வதே தென்
னச், சொற்றதை யுணர்ந்தம் மறைக்கனோன் புகல்வான் சுயம்பிர கா
சமாய்ச் செம்பொற், பொற்றையின் றென்பாற் பரதகண் டத்திற்
பொன்னியந் தண்டுறை மருங்கு, கற்றைவே ணியர்க்கந் தரங்கமா
கியவொண் கைலைகோ ளேசமென் றிலங்கும். (௮)

வேறு.

கஞ்சனை வதைத்த வத்தி கழிந்திடச் செய்த மூதூர்
மஞ்சுநேர் குழலா யெற்கு மாதவன் றந்த சாபந்
துஞ்சவி ரைந்து சென்மந் துலங்கிடச் செய்த மூதூர்
அஞ்சன மேனி யானே நெல்லியா யமர்ந்த மூதூர். (௯)

ஆகுவா கனற்குப் பூசை யார்க்குமுன் பாக்கு மூதூர்
தோகைமா மயிலி னுற்குச் சுருதியைத் தமிழாற் செய்து
காகமாய்க் கதறு மிண்டர் களைக்கழு முனைமே லேற்றி
நாகமும் புகழச் செய்த நற்பதி யதுவாம் பின்னும். (௰)

நமக்கிணை யான நாக ராசன்பா டியத்தைச் செய்தே
யெமக்கிணை மூன்று லோகந் தன்னிலு மில்லை யென்னச்
சுமத்திடு பெருமை யீந்த தொன்னகர் கடலே முண்ணுஞ்
சமர்த்தனைச் சிட னானோன் றினைப்பல வாக்கு மூதூர். (௰௧)

வேதங்க ளுன்கைக் காமாய் விதிக்குழ் ராகமதனைச்
சீதங்கொ ளரச தாகச் செய்யுழுர் புராணந் தன்னை
நாதங்கொள் பெண்ணே யாக நாட்டுறு மவ்வூர் மேன்மை
யோதுங்காற் பெருகு நீயங் குஞற்றுதி தவத்தை யென்றான். (கஉ)

என்றுதன் கணவன் கூறு மின்னுரை யமுத முண்டு
தன்றனிச் சேடி மாதர் தங்களோ டிறைஞ்சி யாங்க
ணின்றும்விக் கினங்க டீர்க்கு நித்தியன் றந்தைமேய
நன்றிகொள் கன்னி வெற்பை நளினமா னினைந்து சென்றாள். (கங)

வருகின்ற மார்க்கத் துள்ள மாதங்க வுரியான் கோயிற்
கருகொன்று தீர்த்த மூழ்கி யரனொடா ரணியைப் போற்றி
முருகொன்று மலகக் கான முன்னியை திருக்கோ ளேசத்
தருகொன்றிக கன்னி வெற்பை யன்பொடு வலமாச் சூழ்ந்து. (கச)

சேடிய ரோடும் பூமேற் றிருமக ளிறைஞ்சி நின்றே
யாடிய பாதப் பொய்யா மொழீசனை யன்பிற் போற்றி
நீடிய சடில னெல்லி நிழலுறை நிமலன் கொன்றை
சூடிய சுவர்ககக கோளேச் சுரனையும பரவி யேத்தி. (கரு)

தலைவன்முன் னாட்கொ ணர்ந்த சங்கதீர்த தத்தி னாடி
யலைசெறி தவளை சாரா வருட்கங்கை முதலா வுள்ள
நிலைபெறுந் தீர்த்த மியாவு நெறியினாற் குடைந்து பைம்பொன்
மலைமக ளிறைவி நாமம வழுத்திவெண் ணீறு சாத்தி. (கசு)

வடமுக மான வைங்கை வாரண முகவற் போற்றி
மடமுடைக் கஞ்சன் றன்னால் வந்திடு பழிமா யோனைத்
தொடர்வுறு திருக்கும வண்ணஞ் சொற்றதா லத்தி தீர்முக்
கட்முகத் தோன்ற லான கருணையங் கடவுட் போற்றி (கஎ)

உலகமூன் றினையுங் காக்கு மொருவனு மெங்கோன் மற்றப்
புலவர்யா வர்களு முய்யும பொருட்டுமா வுருவ தாக
நிலவிய சூரை வேலா னோர்பிளந் திருபுள் ளாக்கிச்
சுலவியில் வரைமேல் வாழுஞ் சுந்தர குமரற் போற்றி (கஅ)

காவுடைத் தேவர் போற்றுங் ககோளநா யகர்க்கோர் பாலா
மாவுடைத் தாயின் செம்பொன் னடியிணை யன்பிற் சூழ்ந்து
சேவுடைச் சிவதன் மேசற் சேர்சிவ காம வல்லி
பூவுடை யான்பாற் பச்சைப் பூங்கொடி தனையும் போற்றி (கக)

நித்திய கன்னி மாரா நெறியினைப் பெற்றோர் தம்மைத்
துத்தியஞ் செய்து பின்னர்ச் சுவைகொடிம் பலாவாய் நிற்குஞ்
சித்தரைக் கண்டு வாழ்த்தித் தினந்தின மிவ்வா றாகப்
பத்தியிற் பூசை செய்து பதுமமா துறையுங் காலை. (உ௰)

ஆங்கொரு நாளிற் றங்கோ னமல கமதாய் நிற்கும்
பாங்கினை நினைந்து நைந்து பைங்கொடி துதிக்குங் காலைப்
பூங்குழ லுமையா ளோடும் பொருக்கென விடைமேற் றோன்றி
மாங்குயி லனையாய் வேட்ட வரமென்சொல் புகறி யென்ன. (உக)

அத்திருக் கயிலை தன்னி லருளிய ஞான்று தேவி
புத்திர னீற தாகப் புகன்றன வஃதுபோ மாறு
கத்தனே யருள்க வென்னக் கன்னியைப் பரம னோக்கச்
சித்தச னிறந்தே பின்ன ரநங்கனாய்ச் சிறக்க வென்றாள். (உஉ)

அண்ண லு மமையு மிவ்வா றருளிய மாற்றங் கேளா
வுண்ணெகிழ்ந் துவகை பொங்கி யுரிமையாஞ் சேடி மார்க
ளெண்ணிலர் சூழ வாங்க ணிருந்துபின் னின்ப மெய்திப்
புண்ணிய வைகுந் தத்திற் புரவல னோடு வாழ்ந்தாள். (உ௩)

இலக்குமி தவம்புரி சருக்க முற்றும்.

ஆக விருத்தம். ௩உ௰

---

# ககோளவிருடி முத்தியடைந்த சருக்கம்.

அரிதாய தவமனைத்து மாற்றுமொரு ககோளமுனி
பெரியசா யுச்சியத்தைப் பெறவிரும்பிக் கயிலைமலைக்
குரியானைப் பணிந்திரப்ப வுறுதிதிருக் கன்னிமலை
மருவுமுன்றன் விழைவெனவவ் வகையடைந்த கதைவகுப்பாம் (க)

### வேறு.

அநேககற் பங்கண் முன்பா யரனுறை பதிக டோறு
மநேகமா கியத வங்க ளநேகமா கியயா கங்க
ளநேகமா கியதா னங்க ளநேகமா கியபா பங்க
ளநேகமா கியயோ கங்க ளாற்றியே யிருப்பா னனன். (௨)

உடலெலா திரைகண் மூடி புரோமமொன் றேனு மின்றி
மிடலெலா மொடுங்கி யென்பு மெய்யெல்லாந் தோன்றக் கண்கள்
படலமாய் மறையக் காது பரவையின் முழக்கங் காட்ட
நடைசிறி தேனு மின்றி நடுக்கமு மொழிந்த தம்மா. (௩)

### வேறு.

அம்முனி வரன்பேர் ககோளமா முனியென் றனைத்துல கமுஞ்சொலு மன்னோ, னம்முனி வோர்க்கும் வயோதிக னுரோம ரெண்ணிறந் தேரிறப் பறிவான், விம்மித மான விரெண்கோண் முனிவர் மெய்யுரு வாகிய புசுண்டர், தம்மொடுஞ் சிநேகித் திருப்பவ னுலகந் தருபவன் றனக்குமே லானோன். (௪)

யாதவ ரநேக ரவனிடைப் பயின்றோர் மாண்டகேள் வியர்களா யவர்பா, லோதினோ ரநேக ரவர்களொவ் வொருவர்க் குயர்ந்தமா ணாக்கர்க ளநேகர், பேதமா முலக மூன்றினு மிவனே பெரியனென் றெங்கணும் பேசு, மூதறி வுடையோன் கயிலையங் கடவுண் முன்பணிந் தித்திற மொழிவான். (௫)

### வேறு.

சாமி சர்வ சகநாத சச்சி தானந் தாத்துவித
வோமென் பொருளி னுள்ளடங்கு மொளியே வெளியே யுருவருவ
மாமின் புருவ சிவாகார வனந்தா னந்த மயரூப
நாமஞ் சாதி குணமில்லாய் நானே நீயாம் வகையருளே. (௬)

யாவ னொருவ னகண்டிதமா யாவா னவனே யாகுகயான்
யாவ னொருவன் குணமூன்றுக் கதீத னவனே யாகுகயான்
யாவ னொருவன் மூவர்க்கு மதிக னவனே யாகுகயான்
யாவ னொருவ னுயிர்க்குயிரா யணைவா னவனே யாகுகயான். (௭)

வேறு.

இவ்வாறு ககோளமா விருடியியம் புதனோக்கி
யவ்வாறே தருதுரம தந்தரங்கக் கயிலாயஞ்
செவ்வாய மேருவுக்குத் தென்சாராம் பொன்னிநதிக்
குவ்வாறு காதத்தி னுயர்ந்தகன்னி வரையென்பர். (அ)

அத்தலத்திற் சென்றிறைஞ்சி யத்துவித மடைகுதிநீ
பத்தவென வருள்புரியப் பணிந்துவிடை கொண்டேகி
முத்தர்நிறை திருக்கோள மூதூரின் வந்தணைந்து
சுத்ததிருத் தம்பலவுந் துளைந்துதிரு நீறணிந்து. (கூ)

உருத்திகழ்கண் ணிகள்புனைந்தே யுலகமுத லாமூன்று
திருத்தலத்தி னமர்ந்தபர சிவபெருமான் கழல்போற்றி
மருத்துளவ மாலையணி மால்வடிவா மாமலகத்
தருப்பொழிலே யாசினியாந் தாபதரைக் கண்டனனால். (௰)

கன்னிமா ரெழுவர்களுங் கமழ்நறுந்தேன் வடிவாகத்
துன்னியதும் பதஞ்சலியார் துறவறத்தி னிருப்பதுவு
முன்னியுன்னி யகமகிழ்ந்தங் குறைபோழ்தி னவர்களெலாந்
தன்னனைய முனிவரன்று டாழ்ந்தனர்தம் முருக்கொண்டே. (கக)

யாங்களியற் றியதவங்க ளியாவுமோ ருருவாகிப்
பாங்குறுவெண் ணீறணிந்த படிவமுஞ்சொங் கற்றுகிலு
மோங்கியகண் மணிமாலே யுடலமெலா மணிந்திலங்கி
யீங்குவரப் பெற்றனமென் றெல்லோருந் துதித்தனரால். (க௨)

துதித்திருக்கு மவ்வேலைச் சோதிமய மாய்நிறைந்த
மதிச்சடில னெல்லியடி மருவுசிவக் குறியதனு
ளுதித்தபரி தியின்மதியோ னொடுங்குமா போலுறைந்த
ததிக்குணெய்போன் முனிவரனைத் தானுக்கிக்கொண்டனனால். (௰௩)

வேறு.

இன்ன தாங்ககோ ளேசர் சரித்திரஞ்
சொன்ன காதை துகளறக் கேட்கின்றோ
ரன்னஞ் சூகர மாயின ரும்பெறு
மன்னு மாணந்த வாரியுண் மூழ்குவார். (கச)

ககோளவிருடி முத்தியடைந்த சருக்கமுற்றும்.

ஆக விருத்தம் ௫௩௪.

# சத்தியவாசகமுனிவர் சாயுச்சியம்பெற்ற சருக்கம்.

அச்சுவத் தாமன் வாளிக் கைவரை யுண்மை கூறி
யுச்சித மாகக் காத்த வொருபொய்யா முனிவன் மோக்க
விச்சையாற் கண்ணற் கேளா வியம்புகோ ளேசம் புக்காங்
கச்சிவ கதிமே வப்பே ரரன்புனைந் ததனைச் சொல்வாம். (க)

ஒருதுவா பரயு கத்தி லுஞற்றுபா ரதப்போர் தன்னின்
மருவுமீ ரொன்பா னாளின் வாய்ந்தவின் முனிவன் மைந்தன்
பொருசம ரினிலே வோரும் பொன்றிடா வகைபொய் சொல்லா
விருடியா சனத்தின் கீழா விருத்தினன் படியி டந்தோன். (உ)

படியிடந் தோன்செய் மாயை பகைவனத் திரம தோரா
விடியெனக் குமுறி யன்னோ ரெங்கென விருடி பாற்சென்
றடிபறை யெனக்கேட் பத்தம் மதோமுகத் துவாரத் தின்கீழ்க்
குடியிருக் கின்றா ரென்னக் கொடுங்கணை நகைத்தே கிற்றால். (ங)

போயபி னவர் தம்மைப் பொருக்கென வம்பி னென்று
மாயவ னணுகப் பொய்யின் மாதவ னெழுந்து தாழ்ந்து
தூயபாற் கடலின் யோகத் துயில்புரி பதுமச் செல்வி
நாயக வடியேன் வேட்கை நவிலுமா றணுகப் பெற்றேன். (ச)

ஆங்கதே தெனின்ஞா லங்கள் யாவுமை வரையுங் காக்குந்
திங்கிலாப் பகவ நின்பாற் செப்புமின் னப்பு மொன்று
டாங்குறும் பரமா னந்தப் பதம்பெறு மாறு நாயேற்
கீங்கருள் செய்வா யென்றாங் கிரந்திட மாயன் கூறும். (ரு)

தீம்புனற் பொன்னி யாற்றின் றெற்கரு காத மஞ்ஞை
யாம்பறம் பதன்வ டக்கா மாமல கக்கா னங்க
ணம்பணிந் துடலம் பித்தாய் நாட்டின மதனி னீபோய்க்
காம்பன தோளி பாகற் கலந்துட லெட்டாய்க் காண்டி. (சு)

என்னாளும் பொய்கூ றாத விருடிமால் விடைகொண் டெய்தித்
தன்னிமால் வரையைச் சூழ்ந்து காசினி மீது தாழ்ந்து
சென்னியிற் கரங்கள் கூப்பித் திருநெல்லி யடிக்கீழ்த் தாழ்ந்து
மன்னிய சுவர்க்க மேவும் வள்ளலைப் பணிந்து பின்னர். (எ)

ஓரிடத் திருந்தி ரண்டு வளியையு மொடுக்கி மூன்றாங்
காரியல் குற்ற நீக்கிக் கரணநான் கொடுக்கி யைந்தா
யாருமிந் திரிய நீத்துச் சமயமா றினையும் பாற்றிச்
சேரெழு பிறப்பும் போக்க வெட்டங்க யோகஞ் செய்தான். (அ)

வேறு.

செய்திடுநாட் பலகழிய விடையின் மீது தினகரரா யிரங்கோடி திரண்டா லென்ன, மைதிகழு மணிமிடறுங் கரங்க ணான்கின் வரதா பயங்களுமான் மழுவுந் தோன்றப், பைதிகழும் பணியணியும் பசுநி லாவும் பாலவிழி யும்முபய பரிபுரப்பொற் றாளுங், கொய்தமலர் புனையளகக் கொடியி னோடு குவலையநா யகன்காட்சி கொடுப்பக் கண்டான். (கூ)

கண்டவுட னெழுந்துசிரங் கரங்கள் கூப்பிக் கண்ணீரா னந்த வெள்ளக் கடலுண் மூழ்கி, முண்டகத்தா ளிணைமலர்தன் முடியேற் சூட்டி மொய்ம்மயிர்க்கூச் செறிந்துடல முழுதும் போர்ப்பத், தெண்டனிட்டு வலமிடமாய்ச் சூழ்ந்து நிர்த்தஞ் செய்துசுரு தியிற்பொருளாச் செஞ்சொன் மாலைத், தண்டமிழன் பொடுகனிந்து மனமும் வாக்குந் தழுதழுப்பத் துதிகள்பல சாற்ற நின்றான். (ய)

வேறு.

விண்ணவர் முனிவர் சித்தர் விஞ்சையர் கருட ராதி
மண்ணவர் முன்பா லென்னை வழிபட வருள்வா யென்ன
வெண்ணுறு பூநீர் சாந்த மிவைமுத லீரெட் டானுங்
கண்ணுபு கணேச ரேத்துங் கோளபு ரேச போற்றி. (கக)

விமலையோ டவண்சூ தாடும் வினையினால் விளைந்த சாப
மமலையார் கலியின் கூலத் தறலினும் விளைந்த சென்மப்
பொமலையோர் தசம தென்னப் புவிக்குப கரிப்பான் கொள்ளக்
கமலலோ சனன்பூ சித்த கோளபு ரேச போற்றி. (கஉ)

ஓங்குமா கயிலை தன்னின் மேலாமெனும் பொருளைத் தேவிக்
காங்குரை பொழுது வண்டா யணைந்துணர்ந் ததனால் வந்த
தீங்குறு சென்ம மெல்லாஞ் சிதைந்தொரு சென்ம மாகக்
காங்கேயன் பூசித் தேத்துங் கமோளபு ரேச போற்றி. (கங)

பொன்னிமா சலக்கோன் பெற்ற பூவையைப் பாகம் வைத்தோய்
சென்னிமீ திருக்குங் கங்கா தேவிமஞ் சனமாத் தாம்பிர
பன்னிமா முனிவ னென பலாத்தரு நிழலிற் சத்த
கன்னிமார் பூசித் தேத்துங் கமோளபு ரேச போற்றி. (கச)

ஆசிலாத் தேவபாடை யசுத்தசுத் தங்க ளாய்ந்து
மாசிலாக் கவிதை செய்ய மகேச்சுர சூத்தி ரத்தைப்
பேசுபா டியமாச் செய்து பிறங்குநின் னடனங் கண்டு
காசினி சுமப்போன் போற்றுங் கமோளபு ரேச போற்றி. (கரு)

வடபுலத் திமய மாதை மணஞ்செயு ஞான்று தாழ்ந்த
புடவியைச் சமமாச் செய்யும் பொருட்டெழிற் பொதியிற் சேவி
யடைவுடன் பின்னர் மன்ற லணியையு மிங்குக் காட்டிக்
கடமுனி வனையாட் கொண்ட கமோளபு ரேச போற்றி. (கசு)

நெஞ்சவா வொடுசேய்க் காக நிமலனைப் பணிந்து வேண்ட
வஞ்சவா கனிக்கு மெட்டா வமலையெற் பணியாய் நீக்கண்
பஞ்சவா குகவுன் காளை யென்னவப் பரிவு தீர்ப்பான்
கஞ்சவா சனிபூ சித்த கமோளபு ரேச போற்றி. (கஎ)

விடையனே யன்பர் காணு மெய்யனே வெறியார் கொன்றைச்
சடையனே மாறி யாடுந் தாளனே தந்தி மான்புல்
லுடையனே யுன்பான் மெய்யன் பொழுக்கமெட் டுணையு மில்லாக்
கடையனேன் றனையு மாட்கொள் கமோளபு ரேச போற்றி. (கஅ)

## வேறு.

இவ்வணந்தோத் திரஞ்செய் பொய்யா மொழியைப்பார்த் திறைவனுமொன் றியம்பா நின்றான், மைவணமும் மலமகன்றோய் நின்மனம்வேட் டனயாவை வகுத்தி யென்னக், கைவணமே ருச்சிலையோய் நின்னதருட் டுணையாலக் கமோளர் போல, வைவணமுங் கடந்தபரஞ் சோதியிற்சேர்த் தென்பெயர்நிற் காக்குவாயால். (ககூ)

என்றிரந்த முனிவனைத்தே னிருந்தமென்னப் பரிதிமதி யென்னப், பூவின், மன்றலென வளிவானி னிறைந்ததென நீரினுப்பு மருவலென்னத், தன்றனிப்பூ ரணத்தாக்கிப் பொய்யாமொழீசனெனத் தன்பேராக்கி, யின்றுமப்பே ரெவ்வுலகுஞ் சொலப்புனைந்தா னெனச்சூத னிசைத்தான் மன்னோ.

சத்தியவாசகமுனிவர் சாயுச்சியம் பெற்ற சருக்க முற்றும்.

ஆகவிருத்தம் ருடுச.

---

# பிரமனுக்குச் சிவதரும முபதேசித்த சருக்கம்.

உசித மாங்கயி லாயமென் றோதிய
நசைகொள் பூதர மீதுறை நாயகன்
றசவி தச்சிவ தன்மத்தி னுண்மையைத்
திசைமு கற்கருள் செய்கதை செப்புவாம். (க)

வேறு.

அருணவுத யத்தலர்செங் கமலமலர் மேலோ ரணங்க ணன்கினுக்கு மாதியினிற் கின்ற, பிரணவத்தின் பொருடெரியாப் பேதைமையாற் சிறையிற் பேதுற்றப் பரிபவத்தாற் பிறப்பிக்குந் தொழிலே, முரணுடைய தெவ்வாக முன்னிவினை யொழிந்து முக்கணு யகனருளிற் றசதரும மோர்ந்து, கரணமடக் கப்பெரிய தவஞ்செயல்யாங் கென்று கருதுங்கா லெழுந்ததொரு கவின்வாக்கு விண்ணில்.

நாரணனுந் தியிற்றோன்று நான்முகநீ கேண்மோ நம்பிரானுற் கிர்திகயி லாயமெனப் பூமேற், சீரணவுந் திருக்கோளக் குடியினைநந் தீசன் செப்புபுரா ணக்கதைகாந் தம்புகலுங் காண்டி, காரணமா கியவந்தத் திருத்தலத்தி னீபோய்க் கடிகைதவம் புரியினுநின் கற்பமியற் றியதாம், பூரணகோ ளேசருநின் புந்தியினீ நினைந்த பொருளறிவிப் பாரெனுமற் புதமொழிகேட் டெழுந்தான். (௨)

தந்திமுகத் தெந்தைசடாக் கரவடிவன் கமலத் தாண்மலரை யகமலரிற் றுங்கியெழுந் தேகி, யந்திமதிக் கோடீரன் வாழ்பிரம புரத்தி லணைந்துபணிந் தருணை தில்லை யாரூரா னைக்கா, மந்திகுதி கொள்பூங்கா வையாறு பொன்னி மாநதியா டிப்பணிந்து மலர்மடந்தை மகிழ்வாய்ச், சந்ததமு நிறைதிருக்கோ ளேசர்பொய்யா வாயர் தழைத்ததிரு வாமலகச் சம்புவைப்போற் றினனே. (௪)

வேறு.

பொன்னங் கமலக் காடுநிறை பொற்பு மிகுத்த தடமொன்றங்
கன்னம் பயிலக் கண்டதனி லாடி வெண்ணீ றக்கமணி
பன்னு பதமைந் தினையோதிப் படிவ முழுதும் புனைந்துதன்பே
ரென்னும் படியோர் சிவலிங்க மியற்றிப் பூசை தொடங்கினனால்.

வேறு.

ஆட்டவேண் டுவனவெலா மாட்டினா னணிகண்மலர்
சூட்டவேண் டுவனவெலாஞ் சூட்டினா னமுதலா
வூட்டவேண் டுவனவெலா மூட்டினான் புகைமுதலாக்
காட்டவேண் டுவனவெலாங் காட்டிப்பூ சனைமுடித்தான். (௬)

சூழ்ந்துவந்தான் றட்டமிட்டான் றோத்திரித்தான் முக்காலும்
வீழ்ந்தெழுந்தான் விம்மிவிம்மி மெய்சிலிர்த்தான் சோர்ந்துவிழி
தாழ்ந்தபுனன் மேன்மிதந்தான் சங்கரமா தேவவெனப்
பார்த்தானை வாயங்கிப் பாலவிழி யாவென்றான் (௭)

வேறு.

அன்னே முனநீ யழன்மலையா நின்றதையா
னெண்ணா தெகினொருவ னெய்திமுடி கண்டனனென்
றன்னோனை யில்லா துரைத்த பிழைபொறுத்த
பெண்ணோர்பா காநின் பிரசமலர்த் தாள்போற்றி. (௮)

ஐந்து சிரமக்கு மாகுமென வுண்ணினைந்த
கந்தைசெயுங் காற்காரி கைநகத்தென் னோர்தலையைச்
சிந்தித் திசைமுகனைச் செய்தப் பிழைதீர்த்த
வெந்தையே யின்னு மிரங்காய்நின் றாள்போற்றி. (௯)

முத்தொழிற்கு ளயேன் முதற்றொழில்செய் யும்படியென்
னத்தனிரண் டாந்தொழிலை யாக்கும் படியமைத்துச்
சுத்தவுரு வோய்மூன்றாந் தொழிலை யுருத்திரற்கு
வைத்த கருணை வடிவேநின் றாள்போற்றி. (ய)

கங்கைச் சடையாய் கடையனையா ளச்சடையாய்
கொங்கிதழித் தாராய்நின் கோகனகத் தாடாராய்
பொங்கரவப் பூணாய்முன் பொய்சொல்கைதை யும்பூணாய்
மங்கையொரு கூறாய் மறைப்பொருளை யுங்கூறாய். (கக)

வேறு.

என்றுல களித்த தாதை யிரட்டிய நான்கு கண்ணு
நின்றறா தருவி தூங்க நினைந்துபோற் றெடுத்த காலை
மன்றலந் துளவ நாறு மழவிடைக் கொடியா னன்னா
னொன்றிய வுள்ளக் கொள்கை யோர்ந்தருள் புரிய வெண்ணி. (கஉ)

செக்கரஞ் சடையு மங்கட் செறிமணித் தொடையு நெற்றி
மிக்கதீ விழிம றைத்த வெண்பட்ட மென்னத் தோன்றும்
பொக்கமி றெய்வ நீற்றுப் புண்டரப் பொலிவுங் காதிற்
றொக்கசீ ராறு கட்டி சுந்தர வேடந் தோன்ற. (கங)

கண்டமொய்ம் பிருகை மார்பங் கண்டிகை வடமி லங்க
வெண்டிரு நீறு பூத்த மெய்யிரு ளிரண்டுஞ் சிப்ப
முண்டகக் கரத்தின் ஞான முதிர்ந்தபுத் தகங்க திர்ப்பத்
தண்டலில் வெண்பட் டாடை யுத்தரீ யமுந்த யங்க. (கச)

பன்னுமா மறைக ளான பாதுகை யிணைமே லன்பர்
சென்னியிற் சூட்டு மாபோற் றிருவடிக் கமலஞ் சேர்த்தி
மன்னுகல் லார மாலை வயங்குப வீதந் தாங்கி
நன்னலந் தரவந் துற்ற நாதனை வேதன் கண்டான். (கரு)

கண்டன னெழுந்து நாதன் கண்ணருட் கடலின் மூழ்கித்
தண்டெனத் தரையில் வீழ்ந்து தாழ்ந்தெழுந் திறைஞ்சி யெண்கை
முண்டக முடிமே லேற முடிவிலா னந்த மூறப்
பண்டரு மறைக ளாரப் பாடினு னாடி னானல். (கசா)

வாழிநின் னருளெண் ணுதன் மத்தனு யெனைம தித்துப்
பீழையிற் கிடந்து மூக்கும் பேதையேற் கெளிவந் தன்று
ஊழெழு மொழுக்கித் தம்மை யொருங்கிழந் தருவாய் நின்ற
பாழிமா தவர்க்கே யன்றிப் பற்றுறுப் படிவ மென்ன. (௧௭)

அடிக்கடி புவியில் வீழ்ந்தே யடிமலர் முடியிற் சூடிப்
பொடிப்பெழ வுரோமஞ் சூழ்ந்து பூமக னின்ற காலைக்
கடிக்கம லத்தோய் முன்ன ரிருக்கெனக் கடைக்கண் சாத்த
முடிக்கிய மலத்தி னீங்கி முதமடைந் தவச மானான். (௧௮)

தன்னருட் கடலின் மூழ்குஞ் சதுமுகக் குழவி தெய்வச்
சென்னியி லருட்டேன் பொங்குந் திருவடிக் கமலஞ் சூட்டி
மன்னிய தீக்கை யேழு மரபுளி வகுத்து ஞானந்
தன்னுமைந் தெழுத்து மோதிச் சூழ்ந்துபக் கிரமஞ் செய்தே. (௧௯)

அன்புடைப் பிரம கேண்மோ வாகம மினிது கூறு
மின்புடைச் சிவதன் மத்தி னியல்பினை யிசைப்பா மின்னே
முன்புடைக் கரண மொத்து முயங்குமோ வியத்தின் வைகி
வன்புடை மன்னும் பத்து வகைப்பொறி புலனு மொன்றி. (௨௰)

வேறு.

இச்சிவ தருமங் கேட்பவ ராசா னிடத்தினேழ் வகையதா மருவு
மச்சிவ தீக்கை யடைந்துநித் தியமு மநித்திய மும்பகுத் தறிந்து
நச்சர வென்ன வாக்கையை மதித்து காமெனு மாணவ மகன்று
மெய்ச்சிவா கமத்தின் விருப்பமுற் றவரே விளம்பதி காரிக ளெனு
நூல். (௨௧)

தன்மமீ ததன்ம மீதெனத் தெரியார் சற்குரு வினையறி யாதார்
கன்மமா தியினிற் றேன்றிவ தறியார் காறலை காண்கிலா ருடல
மின்னினும் விரைந்து கெடுவதென் றுணரார் மேதினி யினிற் செ
னித் திருந்தும், புன்மரம் விலங்கு பறவையி னென்றுய்ப் போர்வரல்
லதுபயன் பொருந்தார். (௨௨)

வேறு.

பிருதிவிமுற் சிவமீறாய்க் காண்பதுவே தத்துவத்தின் பிறங்கு
ரூபம், பிருதிவிமுற் சிவமீறாய் மலஞ்சடமென் றிடுமதுவே பிறங்கு

காட்சி, பிருதிவிமுற் சிவமீறா மிவற்றிற்றா னில்லாது பிரான்ற னொ
கோ, லொருவுதலே தத்துவசுத் தியதாமென் றாகமங்க ளுரைக்கு
மாதோ. (௨௩)

அகலாத விருணீங்கி ஞானமது கண்டிடலே யான்ம ரூபம்
புருநீயு நின்செயலொன் றும்மின்றி நின்றிடலே புகன்ற காட்சி
தகுமிவன்றன் றன்மைகெட்டுத் தண்ணருளிற் போகித்தோன் று
ணைஞ்சுத்தி, யிகழாத வெவ்வடிவு களுந்தானு மெழிற்பரையின் வடி-
வ தாகி. (௨௪)

பற்றுமலத் தான்மாவைக் கருதிபொடுக் கிப்பரிவி னூக்கிப்
பவ்வ, மற்றிடச்செய் துடன்பாரிப் பானொருவ னென்றுயிரி லமை
யக் காண்டல், முற்றுசிவ ரூபமதாம் பரையுயிரில் யானெனதென்
முன்ன நீங்க, வுற்றதுவே யடியாம்பார்ப் பிடமெங்குஞ் சிவமாக
வொருங்கு தோன்றல். (௨௫)

அதுமுகமா முறையிறந்த சுகமதுவே முடியாகு மான வுண்மை
விதமுணர்ந்து பொருள்வேறின் றித்தமைமுற் போகாது வினவு கின்
ற, முதுநிலைபி னில்லாது தற்பரையி னின்றழுந்தா தகன்றுமுன்னுந்
துதிபெறுமற் புதமாகிப் பரமானந் தத்துறுதல் துலங்கு காட்சி.

வேறு.

பொருளெதுவந் துற்றிடினு முற்றபொரு ணோக்கிப் புக்கவுயிர்
தனைக்கண்டிங் கவ்வுயிர்க்கு மேலா, மருளையுங்கண் டுறுசிவத்தி னு
ண்மைநனி கண்டிங் கடைந்தவெலா மதனாலே மிகப்பற்றி நோக்கி,
வெருளுறுநப் பினைச்செய்வ தும்மதுவே நினைப்பு விளைப்பதுவுந்
தருமுணர்வு புசிப்புமது தானே, தெருளுறுமெய்ப் பொருளுமசை வி
ல்லையென வந்தத் தெளிபொருளோ டிசைவதுவே சிவயோக மெனு
நூல். (௨௭)

பவஞ்செயினுங் கொலைசெயினுஞ் சாதிதகர்ந் திடினும் பரிகரி
க்கு நெறிபயிற்றி வரினுந்தம் மரபுக், குவந்தநெறி தப்பிடினுந் தவ
றுபல செயினு முற்றதனக் கென்னவோர் செயலறத்தா னதுவா,
யவந்தெறநின் றிடினுத னவனுடலா ருயிரா யார்ந்துறங்கி நடந்துப

லஉபதமுந்தா னுக்கித், தவந்தருபே தம்மறநின் றிவனைத்தா னுகரு
ந் தலைவனிது வேசிவபோ கம்மெனுமெய்ந் நூலே. (௨௮)

வேறு.

இத்தகைத்த சத்கரும முற்றிடுநின் பக்குவங்கண் டிசைத்தா மென்று, சுத்தனருட் கண்சாத்தி நீறளித்துக் குருவடிவா மதனை நீக்கிச், சுத்தவடி வாமிலிங்கத் துட்புகுதப் பிரமன்மனந் துளங்கி யாண்ட, நித்தனரு ளினைந்துபல துதிபாடி யன்புருவாய் நின்ற காலை.

வேறு.

என்றுநேர் கிகிரி யேந்து மிடபவா கனத்தின் மீது
கன்றிரங் கியசொற் கேட்ட கறவையான் போலப் பூத
வென்றிகொள் கணங்கள் சூழ விண்ணவர் பஞ்ச தாரு
வொன்றிய மலர்க ளெல்லா மொன்றிலா தெடுத்துப் பெய்ய. (௩௰)

அம்புலிச் சடிலன் வந்தா னைந்துமா முகத்தன் வந்தான்
வெம்புலித் தோலான் வந்தான் விண்மதற் பொடித்தான் வந்தான்
கம்பமா களிற்றோர் கோட்டுக் கணபதி தாதை வந்தான்
கமபிரான் வந்தான் வந்தா னெனச்சின்னந் தாரை யார்ப்ப. (௩௧)

வாணனீ ராயி ரங்கை மத்தளந் தனத னென்னப்
பானுகம் பன்சங் கங்கள் பற்பல குமுகு மென்னக்
கான்கு போத னங்கைத் தாளங்கள் கணக ணென்ன
மேனகை முதலோ ராட விஞ்சையர் கீதம் பாட. (௩௨)

மின்களா யிரஞ்சேர்ந் தென்ன விரிசடா மகுட மும்வெண்
டிங்களா யிரங்க ளென்னத் திருமுகப் பொலிவுந் தோன்றத்
தங்குமுப் புரிநூன் மார்புந் தவளவெண் ணீறும் பூணு
மெங்கள்சங் கரனார் கோல மெண்கணுற் பிரமன் கண்டான். (௩௩)

கண்டன னெழுந்தா னெட்டுக் கரங்களுஞ் சிரமேற் கூப்பிக்
கொண்டன னாட்ட மிட்டான் குணலைக்கூத் தாடா நின்றான்
றண்டெனத் தரைமேல் வீழ்ந்தான் றன்வச மற்றா னப்பாற்
றெண்டிரை யொலிப்ப தென்னத் திருமறை நான்குஞ் சொற்றான்.

சொற்றிடு பிரமன் றன்னைத் தோகையோர் பாக னோக்கிக்
கற்றசொற் றலைவி கேள்வ கருதிநின் னடைந்த பாகர்க்
குற்றநன் னிலைமை யோரு முண்மையை யுபதே சித்துப்
பற்றற மேனு ணர்ந்தம் பதமல ரடைதி யென்றான். (௩௫)

மலரவன் மீட்டு மையன் மலரடிப் போதில் வீழ்ந்து
பலருமெம் மிறைவ நிற்குப் பண்ணுக சிவதன் மேசத்
தலைமைகொ ளுமை மென்னத் தனிவரம் பெற்று மீண்டு
கலைமகள் களிப்பத் தம்பொற் கடிநக ரடைந்தான் மன்னோ. (௩௬)

வேறு.

அருந்தவ மாற்றி முதிர்ந்தபே ரறிவி ரனைவருங் கேண்மின்க ளொன்று, முருந்திள வூரன் முகிழ்முலை யுமைகோன் முண்டகச் சரண்மலர்ச் சுரும்பாய்ப், பொருந்துநந் தீசர் புகன்றன ரென்னப் புரிசடை வியாசன்மா ணாக்கன், மருந்தினு மினிதா யஞ்செவி நிறைய வாக்கிடத் தெவிட்டவுண் டனரால் (௩௭)

வேறு.

இவ்வி தம்பிர மற்கிறை தேற்றிய
செவ்வி தாஞ்சிவ தன்மச் சரிதையைக்
கவ்வை யின்றிக் கருதினர் சன்மமாம்
பவ்வ மேழையும் பற்றற நீந்துவார். (௩௮)

பிரமனுக்குச் சிவதருமமுபதேசித்த சருக்கம் முற்றும்.

ஆகவிருத்தம் ௫௯௨.

## வாணியுஞ் சசியும் வரம்பெறு சருக்கம்.

பொன்னகரத் திறைவன்மனை வியும்வெண்டா மரைமகளும் பூமன் றாளிற், சென்னியுறப் பணிந்துதங்கள் குறைதவிரும் வழிகேட்பத் திருக்க கோளக், கன்னிபுர மடைந்துகுறை தவிர்மினென வவ்வாறே கருதிச் சென்று. மின்னனைய ரிருவோரு மிறைஞ்சிவரம் பெறுஞ்சரிதை விரித்துச் சொல்வாம். (௧)

பைந்துணர்க்கற் பகநிழற்கீழ்ப் புருகூதன் விருத்திரன்றன் பழியா லாவி, நொந்துகரந் துழிபமரர் நகுடனைத்தம் மரசாக்க நொய்தினன்னான், கந்தமலர்க் குழற்சசியி னசையாலே தன்சிவிகை காவிப் போதாஞ், சந்தமுனி வரரைவிளீஇச் சர்ப்பவென்று தமிழ்முனியாற் சர்ப்ப மானான். (௨)

அநநகுடன் வருமுன்ன மறிந்துமிகப் புலந்தாளா யயர்ந்த தெய்வப், பொன்னவிர்பூண் முலைச்சசிபுட் களிகூர்ந்தொல் லைபிற்றனது புரமொரீஇப்போய், மன்னுமலர்த் தவிசிலுறை வானவனை யடிவணங்கி வள்ளா லென்று, மென்னுறுகற் பிகவாத நல்வரமொன் றளித்திடுதி யிஃதே யன்றி. (௩)

ஒருபகற்போ துனக்காயி னெண்ணிலரிந் திரரிறப்ப ருப்போதெல்லாந், திருவிழந்து விசிந்துவெனச் செப்புபழிப் பேறுமற் சிறக்கு மாறு, கருணைபுரி வாயென்னக் கலைமகள்கேள் வணைப்பணிந்து கரைய வன்று, னருணகமலத்தடஞ்சூழ் ககோளேசத் தினிற்றவத் தாலணைவா யென்றான். (௪)

அந்தவுரை வாணிபறிந் தக்ககோ ளேசமெவ ணதன்றன் மேன்மை, யெந்தவித மெளியேற்குத் தெரியவருள் புரிதியென விறைஞ்சி வேண்டத், தந்திமுகத் தண்ணலவண் வழிபடலான் முதற்பூசை தந்த வாறுங், கந்தசா மிக்கிரெண் ணாயிரமாம் பிறப்பகற்றிக் காத்த வாறும். (௫)

நிருதர்குர வன்சாப மரியகற்றிப் பிறவிபத்தாய் நிறுத்திப் பின்பக், கூரியவன்றித் திரியுருவாய்ச் சிவதருமே சருக்குநிழல் காட்டு மாறும், பெரியபல வுருவாகி யகத்தியனும் புலத்தியனும் பெற்ற பேறுந், தெரிவரிய சிவதருமந் தனக்குபதே சித்தத்துவுந் தேற்றிப் பின்னும். (௬)

கன்னிமா ரெழுவர்தவஞ் செயததுவுந் தனவடிவாயக் ககோளேசன்றன், சென்னிமீ தபிடேகஞ் செயும்படியா யருள்பெற்ற செயலுஞ் சேடன், பன்னகமா முனியாகிப் பாடியஞ்செய் திருந்ததுவும் பலதீர்த் தங்க, டுன்னியது மிலக்குமிபெற் றிடும்பேறும் விரிவாகத் துலங்கச்சொல்லி. (௭)

என்றனடுஞ் சிரங்கொய்த வடுகேசர்க் கத்திபினை யேரு வண்ணும், பொன்றிடச்செய் திடுமாறும் பொய்யாத மொழிமுனிக்குப் புலன்களைந்தும், வென்றுதழ லைந்தினின்றோர் கட்குமெய்தாப் பெரும்பேறு விளைந்த வாறு, மன்றுககோ ளத்தவத்தோன் முத்திபெற்றப் பெயர்நகர்க்கு மாக்கு மாறும். (௮)

வாய்நான்குங் கொள்ளாமன் மலர்க்கடவு ளுரைத்ததல மகிமை கேட்டு, வேய்நாறுந் தோட்புதிய வெண்கமலத் திசைமடந்தை விருப்பங் கொண்டு, தேய்வாந்திங் கட்சடையார் சிவதரும புரத்தினுக்கிச் செல்வி யோடு, நாயேனும் போய்த்தொழுது மீளவிடை யருள்கவென நல்கி னானல். (௯)

அந்தவுரை யயிராவ தத்தினனு மனமுகைக்கு மணங்குங் கேட்டுக், கந்தமலர்க் கடவுள்சரண் பணிந்துவிடை கொண்டுகனை பதிமால் கந்தன், செந்திருமா தவர்நால்வர்க் கருள்புரியுங் ககோளேசர் திருத்தாள் போற்றிக், கொந்தவிழ்கற் பகக்கானி னிழல்காட்டு மலர்மழையுட் குளித்துச் சென்றார். (௰)

பொன்னிமயா சலமுதலா வெண்ணிறந்த மலைகடந்து புனிததீர்த்தக், துன்னதமா கியகங்கா நதிபோலும் பலநதிக ளொருவித் தேவர், மன்னுகே தாரமுத லானபெருந் தலங்கள்பல வதிந்து போற்றிக், கன்னிநாட் டினுக்கணியாங் ககோளபுரக் கன்னிவரை கண்டு தாழ்ந்தார். (௧௧)

கரமிரண்டுஞ் சிரங்கூப்பி யுளமுருகி யானந்தக் கண்ணீர் மல்க, வுரைபிறழ்ந்து நாக்குழறித் துதிமுழக்கி வலமாய்வந் துலகின்மேற் பொன், வரையிரண்டு சுமந்தபசுங் கொடிபொய்யா மொழிநாதர் மலர்த்தாள் வாழ்த்தித், தரையில்விழுந் தந்தரத்தா மலகேசர் சிவசாமித் தாயைப் போற்றி. (௧௨)

மேற்சுவர்க்கத் திருத்தலத்தா வுடைத்தாய்சேர் கோளேசர் விரைத்தாள் போற்றிப், பாற்கடலிற் றுயில்கூரும் பங்கயக்கண் ணனுங்காணுப் பதத்தா யஞ்ச, மேற்கொளுவோ னுங்காணு விரிசடையா யெனத்துதித்து விண்மேற் றாவிக், காற்பொறாக்கு மாமலகக் கானிடையேழ் கன்னியரைக் கண்டின் புற்று. (௧௩)

ஒருபோதுந் தவனைப்படாச் சுனைத்தீர்த்தம் படிந்துவெண்ணீ றுடம்பிற் பூசிப், பொருபோது நகைத்தெரித்த புரத்தினான்கண் மணிய ணிந்து புனன்மேற் போந்து, தருமேவுங் கொடிப்போதுந் தருப் போது நிலப்போதுந் தங்கைப் போதா, மிருபோதி னுமெடுத்து மு ப்போதுஞ் சிவபூசை யியற்று நின்றார். (க௪)

வாணியுங்கா மடந்தையும்பன் னிட்பூசை புரியமழ விடைமேற் சங்க, பாணியுந்தே டிக்காணாப் பதமிரண்டுங் கரநான்கும் பசிய புற் கொள், வேணியுங்கூர் மழுப்படையுங் கறைக்களமும் பிறைச்சடை யி லிருக்குங் கங்கா, பாணியுந்தோன் றிடவெழுந்த பரமனைக்கண் ட டிபணிந்து பழிச்சா நின்றார். (க௫)

வேறு.

முற்பூசை வேழ முகவள்ளலெய்த முன்றந்த மூர்த்தி சரண
மற்பூ தரத்தை நிகர்மாத வற்கு வருசாப மாற்றி சரணம்
வெற்போடு தாரு கனைபட்ட வன்சொல் விழைதேவ தேவசரணங்
கற்பூரு மாத ரெழுவோர்தொ ழுங்க கோளேச நேச சரணம். (க௬)

பதஞ்சலி பாடியஞ்செய் திடவாக்கு ணின்று பகர்கின்ற போத சரணங், கதந்தவிர் கும்பயோனி யொருசீடர் தந்த கனியுண்ட கண் ட சரணஞ், சுதன்பெற விந்தி ரைப்பெண் வழிபாடு கொண்டு துனி நீக்கு சோதி சரணம், வதந்தவி ருங்க கோளர் பிறவா நெறிக்கு வழி காட்டும் வள்ளல் சரணம். (க௭)

சித்திய வாச கர்க்கு நித்திய மான வாழ்வு தந்திட்ட வாதி சரண, மத்திசை மாமு கற்கு முத்தம மான தர்ம மருள்செய்த நீத சர ணஞ், சித்திர வபிர வேச ரத்தினை மாற்று வித்த சிவதன்ம நாத சரண, மித்தல மீது கங்கை நற்சுனை மண்டு கங்க ளிலவாக வோதி சர ணம். (க௮)

வேறு.

சுந்தரியுங் கலைமகளு மிந்தவகை துதிசெய்யச் சுவர்க்க மேலாஞ் சந்திரசே கரசிவதன் மேசர்பொய்யா வடிமையுடைத் தையன் மீர் றுஞ், சிந்தைவேட் டனயாவை யெனச்சசிகைக் கழலமலர்ச் செவ்வா ய் சேர்த்தி, யெந்தவா சவன்வரினுங் கற்புடன்மங் கலையாயா ணிருக் க வென்றாள். (க௯)

கலைமகள்சொல் வாள்சகல வுயிர்கள் செந்நா விருக்கினுமென் சு ற்ம்பு நீங்கி, விலைமகள்போற் காணும லெச்சிலென்னை மருவாமல் விமல மாக, மலைமகளு மலைமகளும் வாக்கினு ளென்னவென்னை மதித்துப் பேசுந், தலைமைதரு வாயென்ன விருவருக்கு மவ்வாறு தந்தோ மென்றான். (உ0)

வேறு.

வரங்களிரு வரும்பெற்றுப் பன்முறைவீழ்ந் திறைஞ்சி மனம பிரியா விடைகொண்டு வான்வழிக்கொண் டேகப், பரந்தபுகழ்க் கலை மடந்தை மனைவதியிற் புகுந்து பங்கயத்தோன் றனக்குரைத்துப் பரிவுடன்வீற் றிருப்ப, விரங்குகுழன் மொழிச்சசிபொன் னுடுபுகுந் தாசா னின்னருளான் மகபதியை விளீஇக்கடம்பா டவிபுக், கரந் தைகெடப் பொன்னுரையாற் பொற்கமலங் குடைந்தே யகன்கரை யி லெழுந்தருளு மருமறையின் கொழுந்தை. (உக)

எப்பொருட்கு முதற்பொருளா யினிதுமுளைத் தெழுந்தே யெ ப்பிணிக்கு மிடனுஞ்சன் மப்பிணியு மொழிக்கு, மெய்ப்பொருளா மசோம சுந்தரநா யகனை வீழ்ந்திறைஞ்சித் தன்பதியா மகபதியை மேனி, யொப்பிலியை யருச்சித்து விடைகொடுவா னடைந்தே யும் பர்குழாந் தொழுதேத்த வுயிரனையா னோடுந், தப்பரிய பெரும்போ கசாகரத்தாழ்ந் துள்ளஞ் சந்ததஞ்சுந் தரப்பெருமான் றாள்சூழ்க் கிருந்தாள். (உஉ)

வேறு.

சசியும் வாணியுந் தற்பரன் றேடொழு
துசித மாய்த்தம துள்ளக் குறைதவிர்ந்
திசையுங் காதை யினிதுறக் கேட்கின்றோர்க்
கசைவி லாசித்தி யானந்த மெய்துமே. (உங)

வாணியுஞ் சசியும் வரம்பெறு சருக்க முற்றும்.

ஆகவிருத்தம் சுகரு.

# வயிரவருக்குப்பிரமகத்தி தீர்த்தசருக்கம்

அஞ்சிறைத் தும்பி பாட்டயர் கமலத் தாரணன் றனைமதித் தலினு, னஞ்சணி மிடற்றன் ஞாளியூர் தியனை நான்முகன் சிரங்கொ யென் றேந்த, மஞ்சன மேனி வானவ னுடற்றோல் வாங்கினே னவ் வணம் புரியக், கஞ்சனு ரந்தி காரிமேல் வரவக் கரிசகற் றியகதை பக ர்வாம். (க)

ஐந்தொழில் களுக்குண் முதற்றொழி றனக்கென் றுயத னுனுந் தன் வாயான், முந்திய வேத மொழிதலி னுனு முக்குணத் தினின்மு தற் குணந்தன், சொந்தமாய்ச் சுருதி சொல்லுத லானுஞ் சுயம்புவெ ன் றிடுபெயர் தனக்கா, வந்ததி னுலும் பிரமமென் றியாரும் வழங் கலி னுலும்யா னிறையே. (உ)

சத்திய லோகத் தரசுந்தா மரைமென் றவிசும்பா மடந்தைதா லுவின்மே, லித்திய மாவீற் றிருப்பது முலகம் நிருமிக்கும் பெரு மையும் வேத, வுத்தம னெனும் பேர் தனக்குறு வதும்வெள் ளோதி மக் கேதனத் துயர்வு, மித்தரா தலத்தெற் கலாதிலை யதனு லிறை வன்யா னென்றன னயனே. (ஙு)

தன்னதுந் தியந்தா மரையினிற் றேன்றுஞ் சதுமுகன் சாற்றிய மாற்றம், பன்னகப் பாய லரிவினு யானும் பன்றியாய் நீயெவி னம தா, யன்னகர் ஷேலபிற்கீழ் மேற்றுரு வியுங்காண் பரியதா கியபரஞ் சோதி, யென்னவோர் பொருண்மே லய்மக் கிருக்க வென்வயிற் றேன்றுநீ யிறைமையா. (ச)

அன்றியும் வேதத் தாதியக் கரத்தி னருத்தமோர்ந் திலையெண் முருகன், றுன்றிய சிறையிற் பிணித்திடப் பட்டா யதுநிற்க தோன் முக வசுரன், பொன்றிடா முன்னுங் கரத்தினுற் சிரத்திற் புடையி னின் னுஞ்செவி பிடித்து, நின்றிருந் தெழுமி னென்னுமா ணையினி னின்றதை யோர்ந்திலை கொல்லோ. (ரு)

புரங்கண்மூன் றினையுஞ் சிரித்தெரித் திடுங்காற் பூவடி வாந்தட
ந் தேரிற், றுரங்கமோட் டுதற்கோர் சூதனா யிருந்த தொன்மையைத்
தேர்ந்திலை யராப்பூண், கரங்கொள்பொற் சிலைக்கோர் கணையென வெ
ன்னைக் கண்டது மறந்தனை கதிர்க, ளிரங்குசக் கரமா யிருந்ததும் மற
ந்தா யிஃதெலா மறிவுளார்க் கியல்போ. (௬)

ஆங்கொரு கற்பத் தியாமிரு வோரு மறிவின்மை யாற்கலாம்
விளைத்துத், தாங்கருஞ் சமரம் புரிந்திடுங் காலைத் தானாதே வியக்க
நல் வடிவா, யூங்கொரு திரண சம்முன நிறுவி யுதுகளைந் தவன்பெரி
யோனென், றோங்கிய மொழியாற் பகரயா மசைக்க வுரணிலா தோய்
ந்ததோர்ந் திலையோ. (௭)

தாரகன் சிங்கன் சூரனே பதுமன் சண்டனே சலந்தர னிவர்
கம், மாரக ராக வரப்பிர சாத வான்களாய் மண்மிசைத் தோன்றிக்,
கோரமா மசுரக் குழுவொடு மெதிர்க்கக் குமரனாற் குஞ்சர முகனாற்,
பூரணன் முன்னந் துர்க்கையா லவரைப் போக்கினா னென்பதும் புதி
தோ. (௮)

ஈதலால் வாணன் வாயில்காத் திருந்த திவ்வுல கறியுமே கட
லிற், சூகமாய் நின்றே னியற்றிய துன்பந் தொகையினு ளடங்கு
மோ சொல்லி, னோதமீ தெழுந்து வருவிட நம்மா லுணும்படி யான
தோ வெல்லாங், கோதறத் தெரிந்துந் தெளிகிலா யிந்தக் குணத்தினை
விடுமதி. யென்றான். (௯)

பற்பல வாகப் படப்பணி யாடி பகர்ந்தசொல் லுந்தியங் கமலத்,
துற்பவித் தவன்கேட் டினதுணர் விஃதோ வுரைக்குதுங் கேட்டிகண்
ணான, வெற்பலை யிறுத்தா னெயில்பொடி படுத்தா னெமன்பட
வுதைத்தனன் கருப்பு, விற்புயத் திளவற் காய்ந்தன னிஃதோ
மேன்மைநீ விளம்பின்றக் கென்றான். (௰)

அதற்கெலா மேற்கோ ளரிசொல மறுத்து மயனமைசால மறையு
ளான் குருவா, யிதப்பட முன்னின் றியம்பியுங் கேளா திகழ்செயாத்
தன்னையே மதித்துக், குதர்க்கமா டுதலெண் குணக்கட லறிந்து குறை
முகத் தூர்தியைக் கூவி, விதிக்கட வுளினோர் நடுச்சிர மகந்தை வி
ண்டிடக் கொண்டிடு கென்றான். (௰௧)

அம்மொழி யிகைக்கடவுள்கேட் டங்கை யங்குட்ட மறுமிகை நுதியாற், கொம்மெனக் களைய நான்முகன் பழிச்சிக் குற்றந்தீர்ந் தனனது நிற்க, கம்மகழ்ந் திட்ட வத்திகா ரியினைக் கருவுற வைம்முகக் கடவு, ளம்மதங் தரங்கக் கயிலைபாப் பூவி னண்ணுகோ ளேசத்தி னணுகி. (௰௨)

இருக்கினவ் வத்தி யுளையணு காதென் றியம்பியே விடுத்தருள் செய்யப்,பொருக்கெனப் புவியி னிறங்கிசெல் லியங்காப் பொங்கர்சூழ் சிவதன்ம புரியி, னுருக்கமோ டேகிக் கன்னியங் கிரிசூழ்ந் துலவி லாத் திருத்தங்க ளாடி, பெருக்கணி பொய்யா மொழீசரா மலகத் தீசர்கோ ளேசரை யிறைஞ்சி. (௧௩)

வேறு.

தந்திமுகன் முதற்பூசை கொண்டருள வரந்தந்த தலைவ போற்றி, செந்திருமாற் குமையளித்த கடுஞ்சாபந் தீர்த்தருளுந் தேவே போற்றி, சுந்தரமா கியகுமரன் றமிழ்வேத மோதவருள் சுரந்தாய் போற்றி, கந்தமலர்க் குழலியர்க ளெழுவருந்தே னுநுகொள்ளக் கண்டாய் போற்றி. (௧௪)

திருநடனந் தரிசிக்கும் பணிமுனியா டியம்புரியச் செய்தாய் போற்றி, யிருமுனிவர் பலவுருவா யொருசுவர்க்கத் திருந்திடச்செ யிறைவா போற்றி மருமலிப்பு மலர்மகட்கு மகவழியா வருள்புரியும் வள்ளால் போற்றி, பெருமைதருங் ககோளமா முனியையயிக் கியமாக்கும் பிரானே போற்றி. (௧௫)

சத்தியவா சகமுனிவ னித்தியமுத் தியினையுறத் தந்தாய் போற்றி, யத்திசைமா முகனுணரச் சிவதரும நெறிபகர்ந்த வடிகள் போற்றி, முத்தனையாள் சசிகற்பு நித்தியமங் கலம்பெறுமா மொழிந்தாய் போற்றி,யித்தலத்திற் றவனைபடாச் சுனைசேடற் காவமைத்த விறைவா போற்றி. (௧௬)

எனத்துதிக்கும் வயிரவற்பார்த் தெங்கள்சிவ தருமேச ரிறையா மென்னு, மனத்தவனல் வரும்பெரிய வனத்தமுனை விட்டகன்ற தத்த யாமக், கனத்தபூ சனையெமக்கு நிறைவேற்றித் திருத்தலங்காப் புக்கொள்போதி, னுனைத்துதித்துப் பூசைசெய வுலகமெங்கு மித்தலத்தினுறைக வென்றான். (௧௭)

வேறு.

அந்தரத் தலத்தா மலகநீ மூலிற்றெக் கணவபி முகமதாய்ச் சுவா வா' மந்திர சிங்கா தனமிசைச் சூல மாசுணங் கபாலம்வாள் கொளுங் கைச், சுந்தர நிருவா ணத்துரு வாயத் துவிதசித் தாந்தமே தாளைச் சந்தத நின்று னெனமுனி வரர்க்குச் சாற்றினான் சூதமா முனியே.

வேறு.

ஆய கலை யபன் றலை கொய்பழி
சேய தாய்ச்சென் று தேய்ந்தொழிந் திட்டதான்
மேய விக்கதை யாவர் விளம்பினுங்
காயு மத்தி யவர்க்கிலை காணுங்கால். (கக)

வயிரவருக்குப் பிரமகத்தி தீர்த்த சருக்க முற்றும்.

ஆக விருத்தம். சுகூச.

# எழுமுனிவரு மகவானு மிருசுடரும் வரம் பெற்ற சருக்கம்.

——[:o:]——

ககனவேந் தனுக்கு மேனாட் கவுதமன் கொடுத்த சாபம்
பகன்முனம் பனிபோ னீங்கும் பரிசுமா தவரேழ் பேருந்
திகழ்கதி ரவனுந் தூய செழுமதி யவனும் போந்தாங்
ககமகிழ் வாகப் பூசித் தருள்பெறு மாறுஞ் சொல்வாம். (க)

சுகமொழிச் சசியு நித்தஞ் சுந்தரங் கண்ட வாவு
மகலிகை யணங்கை யிச்சித் தந்தர வாச னோர்நா
ககமெனப் புகலுங் காலா யுதமதாய்க் கரந்து கூவப்
பகலவற் காணு முன்னர்ப் பகீரதி யாட வெண்ணி. (உ)

குண்டிகை கையிற் றங்கிக் கோதமன் விரைவிற் செல்ல
மண்டிய கீர்த லோடு மகலிகை மருங்கிற் சென்றாங்
கண்டர்கோன் புலவி நீக்கிக் கலவிசெய் தகலுங் காலைத்
தெண்டிரை துயினீங் காத செய்கையை மதித்தம் மேலோன். (ங)

திரும்பியிற் புகுங்காற் பூசைத் தேகங்கொண் டவன்றனோடஞ்
சுரும்புணுத் தருவோ னென்று தோற்றியோர் பகத்தை நீயும்
விரும்பினை யுடல மெல்லா மேவுபல் யோனி யாகென்
றிரும்பனன் முழ்கிற் றென்ன விட்டனன் முனிவன் சாபம். (௪)

ஆயிழை தனையு நீகல் லாகெனச் சாபஞ் செய்யத்
தீயினுங் கொடிய கோபச் செய்யமா தவனைப் போற்றி
நாயினேன் மடமை யாற்செய் நவைபொறுத் தருள்க வென்னத்
தூயகற் பகமன் வேண்டத் தொன்மைய முனிவன் சொல்வான் (௫)

வேறு.

ஆதி நாட்கயி லையினந்தி யரனரு ளாலே
தீதின் மாதவஞ் செயுமெம்போன் முனிவரர் தெளிய
வோது மாகன்னி வரையினிற் றவஞ்செய வுன்னிப்
போது வோமவ ணியும்போந் திடுவையப் பொழுது. (௬)

யாம்பு கன்றவிச் சாபமா யிரம்விழி யாகப்
பாம்பு சூடிய சிவதரு மேச்சுரன் பகர்வான்
றேம்பொ ழிந்தபூங் கற்பகத் தாயென்றுன் செந்தீ
யோம்பு வான்பின்னுட் காசிப னத்திரி யுடனே. (௭)

பரத்து வாசனுங் கவுசிக முனிவனும் பரத்திற்
சிரத்தை யாகிய வசிட்டன்றார் வாசனுஞ் செறியக்
கரத்தி னிற்கர கங்கொடு கவுதமன் கன்னி
புரத்தை நோக்கியே செலுங்குறிப் பறிந்திரு பொழுதும். (௮)

துலக்கு வானவ ரரியுட னெழுவரைத் துன்னி
நிலக்கண் மேவுகோ ளேசத்தை யாங்களு நேர்ந்து
மலக்கு றும்பகற் றுவமென் வருகவென் றணைந்து
சொலற்க ருஞ்சிவ தீர்த்தங்கள் யாவுந்தோய்ந் தனரால். (௯)

தோய்ந்த மாதவ ரனைவருந் துகளென மதனைக்
காய்ந்த கண்ணினர் வெண்பொடி விழிமணி கவின
வேய்ந்து பூமியந் தரஞ்சுவர்க் கத்தினு மேவுந்
தேய்ந்த வெண்பிறைச் சென்னியர் தமைத்தெரி சித்து. (௰)

நிற்குங் காற்கவு தமன்மொழி வழியின்னா னிருப
னக்க கோளமா புரத்தினை வலமதா யணைந்து
தக்க வன்புரு வாய்ச்சிவ லிங்கமுஞ் சமைத்து
மிக்க பூசனை செய்துதன் சாபமும் விடுத்தான். (௰க)

சந்தி ராதித்த ரிருவருந் தமதுபேர் விளங்குங்
கந்த மாமலர்ச் சுனைகண்டி ராங்கியக் கவினூர்
வந்த பூமிநா தரைச்சிவ காமியை யிளைசைச்
சந்த நித்யகல் யாணியைக் கயிலைநா யகனை. (கஉ)

பூசித் தேத்தியப் பொன்வரை யெனுங்கன்னி வரையை
நேசித் தன்பொடு பேரின்பம் பெருகுவா னினைந்து
தேசிற் சூழ்வர வளமலி யிரணியூர் சிவனி
யாசித் தாட்கொண்டார் சிவபரந் தேவியை யணுகி. (கங)

கவுத மன்சிவ பூசனை புரிந்திடக் கவினூர்
குவடு சூழ்ந்தவே லங்குடி யுருத்திர கோடிச்
சிவனை யும்மர கதக்கொடி யையுமனஞ் சேர்த்தித்
தவமி குந்தகா சிபனருச்சனை செய்து சார. (கச)

கங்கை வேணித்து வாரக்கை லாயரங் கயற்கண்
மங்கை தன்னையு மத்திரி முனிவரன் மனத்துட்
டங்கு மாறருச் சனைசெயப் பொற்பதி தன்னு
ளெங்க ளாவுடை வல்லிசோ ளீசரை யிறைஞ்சி. (கரு)

பரத்து வாசன்பூ சனைபுரிந் தமர்ந்திடப் பழனம்
விருத்தி யானகாஞ் சாற்றினில் விசுவநா யகரை
யருத்தி கூர்விசா லாட்சியைக் கோசிக னருச்சித்
துரித்தென் றேபுறச் சேவனூர்ப் பூவனே சுரனை. (கசா)

சூர ணக்கொடி யம்பிகை தன்னையும் வசிட்டன்
பாரி னர்ச்சனை புரிந்திடத் தனது பேர்ப் பதியி
னூர ணர்க்கரு மருட்டிரு மேனிநா யகரைப்
பூர ணத்தர்பா கம்பிரி யாதபொற் கொடியை. (கஎ)

கோர வக்கிர வயிரவ மூர்த்தியைக் குளிர்ந்த
சீரடிக்கம லத்தினைச் சென்னியால் வணங்கித்
தார்வை யைப்புசி முனிவனும் பூசனை தொடங்கக்
கார ணப்பெரு மூர்த்தியி னிறம்வகை கருதி. (கஎ)

வேறு.

சத்திகவிரு டிகளுமிவ்வா றன்மார்த்த பூசைசெய்து தனைமக்குங் கன்னிக், குத்தரமே வியமூர்த்தி தேவிகண்மூ வரையுமனக் குகையுள் வைத்து, முத்திபெறு வான்றவஞ்செய் துறைநின்ற ரெனச்சூத முனிவன் கேட்பச், சத்தியமாய் நந்திமுன்னு ளுரைத்தபடி விரித்துரையாற் சாற்றி னனால்: (கஅ)

எழுமுனிவருமகவானு மிருசுடரும் வரம்பெற்ற சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் ௬௫௩.

---

# திலீபன் சேய் பெறு சருக்கம்.

பரிதியின் குலத்து நிருபர்க்கு நீதி பகர்ந்திடும் வசிட்டமா முனிவன், கருதிரு வாக்கின் படிநக ரயோத்தி தனிலுறை திலீபனென் றுரைக்குங், குரிசிலக் கன்னி புரத்தினைக் குறுகிக் குவலைய விறைமு தன்மூவர், திருவருட் குரிய பணிபல புரிந்து சேய்பெறுங் கதையினைத் தெரிப்பாம். (க)

குரைகட லுடுத்த குவலய மடந்தை கொழித்தழ கொழுகுறு முகத்தா, மரையென விளங்கு மயோத்திமா நகர்க்கோர் மணியெனத் துலங்கிய திலீப, வரையனென் றுரைக்கு மாதவன் குலத்தோ னருமக விலாவறு மையினாற், புரைதவிர் தனது குலகுரு வான புண்ணிய வசிட்டனை யடைந்தான். (உ)

அடைந்திரு கரமுஞ் சிரமிசைக் கூப்பி யடியனேன் புகலும்விண் ணப்பங், கடந்துளோர் கட்குங் கடப்பரி தாய காதல னின்றி யென் சிந்தை, யுடைந்துமத் துறுவெண் டயிரெனக் கலங்கி யுழன்

றிடு மாசிலதை நீக்கி, மடந்தனிர் புதல்வற் பெறுவ்தற் கியாது வகை யென முனிவர்கோன் வருப்பான். (௩)

இரவிதன் குலத்து நிருபகேள் கயிலைக்கிறைவர்பாற் றெளிந்த நந் தீசன், பரிவதாய்க் ககோள முனிமுத லாய பலருமோர்ந் திடவு ணர்த் தியதாங், கரிமுகன் குமரன் கமலேதன் கொழுநன் கன்னிமா ரெழுவர்கட் செவிக்கோன், தெரிதமி ழகத்தி யன்புலத் தியனிந் திரா ணிவெண் கமலமா மகளே. (௪)

சத்திய வாக்கி னிருடிமா மலரோன் றருககோ ளகமுனி வடுக, னித்தகை யவரு மவரவர் மனத்தி னெண்ணமெல் லாநிறை வேறப், பத்தியாத் தவஞ்செய் தருள்பெறும் பெருமைப் பழம்பதி யெனச் சிவ தரும, வுத்தம தலத்தின் மகிமைக ளியாவு முண்மையாய் நவின் றபின் னுரைப்பான். (௫)

அன்னமா தலத்தை யடைந்துநீ தவஞ்செய் தருமகப் பெறுகு தி யென்ன, மன்னனுங் குரவன் மலரடி வணங்கி வளம்பல நெருங்கு மா மலகக், கன்னிமால் வரையைக் காதலோ டணைந்து கண்டுகை சிரமிசைக் கூப்பி, மன்னுபே ரன்பின் வலங்கொடு சூழ்ந்து மாநில மேற்பணிந் தெழுந்தான். (௬)

வேறு.

மண்டுகம் வதியாத் தீர்த்தம் வாரண நாம தீர்த்தம்
புண்டரீ கப்போர்த் தீர்த்தம் பொலிசர வணமாந் தீர்த்தஞ்
சண்டபா னுவினற் றீர்த்தஞ் சந்திர நாமத் தீர்த்த
மண்டிய பெருமை மிக்க வயிரவத் தீர்த்த மாடி. (௭)

தவளவெண் ணீறு பூசிச் சம்புகண் மணிகள் பூண்டு
குவளைகூ விளங்க ரந்தை குலவுமா மலர்கள் கொய்து
பவளவார் சடைக்கோ ளேசர் தருமேசர் படியின் மேவுங்
கவளயா னையின்றோல் போர்த்த கடவுளை யருச்சித் தேத்தி. (௮)

வேறு.

முன்புகண பதிசெய்யுந் திருக்கோயில் களும்புதுக்கி மூன்று லோகச், சம்புவுக்கு மிடமான தளிபலவு முமைமூவர் தமக்கு மற்ற,

வும்பர்கட்குந் திருந்தளிகள் , பலவுளுற்றிக் கோபுரங்க ளுயூர்வான் முங்குந், தம்பமென நான்குதிசை யினுமிறுவிப் பொன்னகரந்தனி லுஞ்சால. (௯)

சக்கரவா ளஞ்சூழ்ந்தா லெனவெயிலுஞ் சாகரங்க டாமே வந்து பக்கமுறச் சூழ்ந்தவென வெழ்கிடங்கு நகருறப்புப் பலவுங் கண்டு மிக்கதுளை விப்பிரசை வாகமத்தோர் பலர்விளங்கும் வீதி யாவு மக்கசகத் திரவினதிக ரரசர்கள்வீ திகள்பலவு மமையச் செய்து. (௰)

பூவசியர் தனவசியர் முதலியதொண் ணூற்றுருப் புகலா நின்றோ ராவணங்கள் பலதிருத்தித் திருத்தங்கள ணிதிரப்பி யவற்றி னுப்பண் மேவியமண் டபம்பதும மெனவியற்றி யிரதநிலே வியப்பச் செய்தாங் கோவியத்தெற் றிகள்பலவு மெண்டிசையுந் துலங்கும்வகை யுளுற்றிப் பின்னர். (௰க)

மதுகரங்க ளறவருந்திப் பயிலும்பூம் பொழில்கள்பல வான ளாவித், துதிகரநந் தனவனங்க டிசைதோறும் பற்பலவாத் துலங்க வைத்து, மதிதவழு மணிமாட மேடைகள்சித் திரகூட மல்கச் செய் தெப், பதிகளுமிப் பதிக்கொவ்வா வென்னவதி சயங்கள்பல புலவாச் செய்து. (கஉ)

கும்பமதி யசுபதிநாட் கம்பணிவெள் விடையெழுந்து கோலோ கத்துக், கிம்பரிருந் தேருவபோற் றுசமுயர்த்தித் திசைக்கிறைவ ரெண்மரோடு, மும்பர்கள்முப் பான்மூன்று கோடியர்பன் னொரு கோரீடி யுருத்தி ராதி, சம்புவின்கா தைகளுணர்நாற் பானெண்ணு யிர முனிவர் தாழுஞ் சூழ. (கங)

காலையுமா லையுமெழிலா ரணிமறுகிற் றிருப்பவனி கலோளே ச ர்க்கும், வாலையெனு மாவிளை .க்தா யொருகோட்டு வாரணமா வதன ன், சூர்கொல், வேலேயணி திருக்கரத்தான் சேய்ளுலூர்த் தண்டிகட் கும் விளங்க வேத, நூலின்முழக் கமுமூவர் துதிமுழக்கும் பல்விய ங்க ளுவனு மார்ப்பும். (கச)

அரம்பையர்க ணடமபுரியக் கவரிகுடை சுருட்டிகளபா வா டை வீதி, நிரம்பிவர வொலியறுவ சாதிகளும் வெயின்மறைப்ப நெ ய்ப்பந் தங்கள், பரம்பிவர வந்தரதுந் துபிமுழங்க வும்பர்மலர் பரந்

து தூற்றச், சிரம்பணிந்து தொண்டர்தொழு தெண்டினமு யோலக்
கஞ் சிறப்பச் செய்து. (௧௫)

ஒன்பானன் மணியானு முனூற்றிரத மொன்பானு ளோடச்
செய்து, பொன்பாவு புண்டரிகத் தடமதனிற் றசமகத்திற் புனித
தீர்த்த, மின்பாகக் கொண்டருள விறையான திலீபனுமங் கினிதி
னுடி, யன்பான மிதுனமதி விழாவினையு மதுபோல வணியாச் செ
ய்து. (௧௬).

மகரமதிப் பூசவிழாக் கன்னிவரை முடிமீதில் வதியா நின்ற
குககுமர குருபரர்க்கு மிவ்வாறுத் திருப்பவனி குலவச் செய்து
சகமகிழ வுமையவட்குங் கடகமதிப் பூரவிழாச் சமைத்துக் கூன்விற்
றிகழுமதி யாதிரையிற் றெரிசனவி ழாவணியுந் திருந்தச் செய்தான்.

இவ்வாறுச் சிவபணிக டிலீபமன்னன் பண்ணுமியற்றிப்பா னு
ச், செவ்வாய குலம்விளங்கச் சேய்பெறுவான் மனத்தினிற் சிந்திக்
குங் காலை, யவ்வானின் றொருவாக்கு நின்குலமெ லாம்புரக்கு மறிஞ
னுகிக், குவ்வாழு மொருபுதல்வற் கொடுத்தனநின் னகரினுக்கே குக
வென் றன்றே. (௧௮)

ஆர்த்த திரு வாக்கமுதஞ் செவியாரப் பருகியே யறிவா னந்தங்
கூர்த்தவுளத் தினனுகிக் குவலயநா யகன்முதலாக் கூறு மூன்று
மூர்த்தியுமை மூவர்பல தேவரையு மடிபணிந்து முதிர்பே ரன்பாற்
சீர்த்திபெறப் பிரியாத விடைகொண்டு தங்குரவன் சேக்கை நண்ணி.

இப்பரிசெ லாம்புகன்றுங் கெழில்வசிட்டன் றிருவருளு மேற்
றுப் பாரிற், செப்புபுக ழயோத்தியெனுந் திருநகரின் மகிழ்வினொடு
ஞ் சேர்ந்து கீர்த்தி, நற்புதல்வன் றனைப்பயந்து ளினமகள் கொழு
நனென நரலை சூழ்ந்த, வொப்பில்புவி யாண்டிருந்தா னெனச்சூதன்
முனிவர்களுக் கோதி னுனல். (௨௦)

வேறு.

சணையுயர்கோ னுயர்ந்த சவுந்தரபாண் டியவரசன்
தண்புனைநெற் றிக்கோள நாதர்கரு ணைக்குரிய
பண்பினொடு திருப்பணிகள் பலசெய்து பணிந்தேத்தி
விண்புகழ்கூ டினனாள் வீறுற்று விளங்கினனே. (௨௧)

வேறு.

இன்ன மாக்கதை தன்னை யியம்புவோர்
பொன்ன கர்க்குப் புரவல ராகிப்பின்
பன்ன லூர்திய ராகி மதியணிச்
சென்னி யன்பதஞ் சேர்வது திண்ணமே. (உ௨)

வேறு.

ஆர்தி வான்மதி சூடிய வண்ணலா ருளா
னந்தி கேச்சுர னவிறிருக் கோளமான் மியத்தை
யெந்தை சூதமா முனிவர னைமிசத் திருக்கு
மைந்த வாவினை யகற்றிய முனிவர்கட் கறைந்தான். (உ௩)

இச்ச ரித்திரங் கேட்டமா தவரெலா மெழுந்து
நிச்சய ம்பெறச் சிவசரித் திரநிகழ்த் துநர்கண்
முச்ச கத்துநின் போல்பவ ரியாரென மொழிந்து
செச்சை மேனியன் றிருக்கோ ளேசஞ்சேர்ந் தனரால். (உ௪)

வேறு.

சேர்ந்த நைமிசா ரணியமா தவரெலாந் திரண்டன்
பார்ந்த நெஞ்சராய்க் குவலைய மந்தரஞ் சுவர்க்கத்
மதய்ந்த வீசரை யீசைமார் தங்களை யேத்தித்
தோய்ந்த தோத்திரஞ் சுருதியா யிரஞ்சொலி வாழ்ந்தார். (உ௫)

வேறு.

திங்கண்மும் மாரி பெய்க செழுமறை முனிவர் வாழ்க
வெங்கணுஞ் சைவம் பல்க வீசன்வெண் டிருநீ றோங்க
வங்கண்மா ஞாலங் காக்கு மரசர்செங் கோலு நீடப்
பொங்குபே ரறங்கண் மல்கிப் பூதலம் பொலிக மாதோ. (உ௬)

வேறு.

ஆலமே வியகளத்துத் திருக்கோள நாதருக்கு மாழி சூழ்ந்த
ஞாலமே வியபொய்யா மொழீசருக்குஞ் சிவதருமநாய கர்க்குங்
காலமா றினும்பூசை கருதுசைவா கமவழியே கனிவாய் நாளுஞ்
சீலமேவும்படிசெய் தானிவர்கள் பூவுலகிற் செழிக்க மாதோ. (உ௭)

வேறு.

கற்றுணர் மேலை யோர்க்குட் கடையனு கியநா யேன்றன்
சிற்றறி வினுக்கு ணின்று தேவர்க டமக்குந் தோற்ற
முற்றிடாப் புகழை யோதுஞ் சிவதன்மே சனைய லாது
மற்றுமோர் தெய்வந் தன்னை மதிக்குமோ வெனது நெஞ்சம். (௨௬)

நீலீபன்சேய் பெறுசருக்க முற்றும்.

ஆக விருத்தம் ௬௮௧.

திருக்கோளபுரப்புராண முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

அடையாறு சென்னை-20